ஸ்ரீ லங்கா இன்ஷ்வரன்ஸ்

தந்தையும் தாயும் போன்று

தேவையான நேரத்தில் உற்ற நண்பன்

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

ஆண்டறிக்கை 2016

தேவையான நேரத்தில் உற்ற நண்பன்

சகல இலங்கையர்களுக்கும் பாதுகாப்பான, அடையக்கூடிய மற்றும் வெளிப்படைதன்மை கொண்ட காப்புறுதி தவணை ஒன்றை உருவாக்கும் எமது தொடர்ச்சியான பயணத்தில், எமது கம்பனியின் மிகவும் முக்கியமான பகுதிகளில் ஒன்றாகிய எமது சேவை குறித்து நாம் விசேட கவனத்தை செலுத்தியுள்ளோம். சகல முக்கியமான மனித காரணிகளை உள்ளடக்கிய ஆள்சார் வாடிக்கையாளர் சேவை ஒன்றை வழங்குவதில் உயர்தரத்துக்கு இணங்கியதாக எதிர்காலத்தை குறித்தும் தமது பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்துகின்றவர்களுடன் தமது எதிர்பார்ப்புக்களையும் அச்சத்தையும் எமது வாடிக்கையாளர்கள் பரஸ்பர ரீதியில் செயற்படுவதன் மூலமும் பகிர்ந்து கொள்கின்றனர் என்ற உணர்வை ஏற்படுத்துவதன் குறித்து நாம் கவனத்தை செலுத்தியுள்ளோம். அவர்களின் பயணத்தில் எமது சேவை பிரதிபலிக்கின்ற அதேவேளையில் தேவையான நேரத்தில் நாம் எப்பொழுதும் அங்கிருப்போம்.

உள்ளடக்கம்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி

கம்பனியின் வரலாறு 4
நோக்கு, செயற்பணி மற்றும் தரப்படுத்தலும் பதிவுசெய்தலும் 5
கூட்டாண்மைத் தகவல் 6
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனக் குழுமம் 8
சாதாரண காப்புறுதி உற்பத்திப் பிரிவு 10
ஆயுள் காப்புறுதி உற்பத்திப் பிரிவு 11
எமது வலையமைப்பு 12

செயலாற்றுகை மீளாய்வு 2016

நிதிசார் சிறப்புக்கூறு 16
தலைவரின் செய்தி 18
கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளரின் மீளாய்வு 22
நிதி மீளாய்வு 26
முதலீட்டு மீளாய்வு 33
முதலீட்டு அபாய முகாமைத்துவம் 36
செயற்பாடுகளின் மீளாய்வு 39
துணைக் கம்பனிகளின் செயலாற்றுகை 46
இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அணி 47
கூட்டுத்தாபனத்தின் சமூகப் பொறுப்புக்கள் 51

ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள்

கூட்டாணவ்மை ஆளுகை 56
பணிப்பாளர் சபை 58
சிரேட்ட முகாமைத்துவ அணி 63
சிரேட்ட முகாமையாளர்கள் 64
இடர் முகாமைத்துவம் 70
கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழு அறிக்கை 78
முதலீட்டுக் குழு அறிக்கை 81

நிதிக் கூற்றுக்கள்

கம்பனியின் பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை 85
பணிப்பாளர்களின் பொறுப்பு பற்றிய கூற்று 89
பிரதான நிதி உத்தியோகத்தர்களின் பொறுப்பு பற்றிய கூற்று90
காப்புறுதி கணிப்பீட்டாளரின் சான்றிதழ் 91
பொறுப்புத் தகுதிச் சோதனை 92
நட்டம் ஏற்பட்ட போதிலும் (போதியளவில்)
அறிக்கையிடப்படாத உரிமைக் கோரிக்கைச் சான்றிதல் 93
சுயாதீனக் கணக்காய்வாளர்களின் அறிக்கை 94
நிதி நிலைமைக் கூற்று 96
இலாப நட்ட மற்றும் ஏனைய விளக்கமான வருமானக் கூற்று98
பங்குதாரர்களின் உரிமை மாற்றம் பற்றிய கூற்று 100
பணப்பாய்ச்சல் கூற்று 104
தொகுதிவாரியான மீளாய்வு : வருமானக் கூற்று 106
தொகுதிவாரியான மீளாய்வு : நிதி நிலைமைக் கூற்று 108
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 110

மேலதிக தகவல்

ஆயுள் காப்புறுதியின் நிதி நிலைமை பற்றிய கூற்று 220
நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புகள்
- ஆயுள் காப்புறுதி நிதியம் 221
பத்தாண்டுச் சுருக்கம் 232
கிளை அலுவலகங்கள் 236
வருடாந்த பொதுக் கூட்டம் பற்றிய அறிவித்தல் 246
பதிலாள் படிவம் 247

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி

4-13 வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி
16-53 செயலாற்றுகை மீளாய்வுகள் 2016
56-82 ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள்
85-217 நிதிக் கூற்றுக்கள்
220-248 மேலதிகத் தகவல்

கம்பனியின் வரலாறு

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 1961 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அரசிற்குச் சொந்தமான கூட்டுத்தாபனமொன்றாகத் தாபிக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபார நிறுவனங்களை பொதுக்கம்பனியாக மாற்றும் சட்டத்தின் கீழ் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 1993 ஆம் ஆண்டில் திறைசேரியின் செயலாளர் 100% பங்குகளில் தனியுரிமையை வகிக்கின்ற முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக்கொண்ட கம்பனியொன்றாக மாற்றப்பட்டது. அரசாங்கத்தின் தனியார்மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 2003 ஆம் ஆண்டில் இந்தக் கம்பனி தனியார்மயப்படுத்தப்பட்ட அதேவேளையில், கம்பனியானது சுமார் 06 வருட குறுகியகால எல்லைக்குள் தனியார் முகாமைத்துவத்தின் கீழ் காணப்பட்டது. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மீண்டும் பதிவுசெய்யப்பட்டது. தனியார்மயப்படுத்தலை இரத்துச்செய்து, 2009.06.04 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் 99.97% பங்குகள் இலங்கை அரசாங்கத்தின் பொருட்டு திறைசேரியின் செயலாளர்க்கு உரிமை மாற்றப்பட்டது.

ரூபா 62.9 பில்லியன் பாரிய பங்குதாரர் நிதியத்தையும் ரூபா 87.3 பில்லியன் பாரிய ஆயுப் காப்புறுதி நிதியத்தையும் உள்ளடக்கிய ரூபா 176.8 பில்லியன் பெறுமதியைக்கொண்ட மொத்தச் சொத்துக்களை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வசமுள்ளது.

முன்னோடி காப்புறுதியாளர் என்றவகையில், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நாட்டில் இந்தத் துறை பற்றிய மிகவும் அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப அறிவைக் கொண்டுள்ளவர்களாவர். இதுவரை செலுத்தப்பட்டுள்ள பாரிய உரிமைத் தொகையாகிய ரூபா 39.5 பில்லியன் மற்றும் தனது ஆயுள் காப்புறுதி காப்பீட்டு உரிமையாளர்களுக்கு வழங்கியுள்ள ஆயுள் காப்புறுதி ரூபா 6.2 பில்லியன் பாரிய வெகுமதிக் கொடுப்பனவொன்றை வழங்கியமை இலங்கை காப்புறுதித் துறையில் பல வரலாற்று கட்டங்களுக்கு வழியமைத்து கம்பனியின் நிதி நிலைமைக்கும் வலுவான மீள்காப்புறுதி நடவடிக்கைகளுக்கும் உதவியாக இருந்துள்ளது. அரசாங்கத்தினால் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட நெறிமுறை மற்றும் பணிப்பாணை என்பன பல ஆண்டுகளாகத் தக்கவைக்கப்பட்டுள்ளன. இன்று இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது நிபுணத்துவம் மற்றும் பல தசாப்தங்களாக வைத்துள்ள நம்பிக்கை என்பவற்றின் மூலம் இலங்கை மக்களுக்கு சேவையாற்றுகின்றது

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

நோக்கு

தேசத்திற்கான நம்பிக்கைமிக்க காப்புறுதியாளராக இருத்தல்.

செயற்பணி

எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பெறுமதியுடன் காப்புறுதிச் சேவைகளை வழங்குவதில் தொடர்ந்தும் புத்தாக்கமிக்க, நம்பிக்கைக்குரிய, வாடிக்கையாளர் மையப்படுத்திய கம்பனியொன்றாக செயற்படும் அதேவேளை எமது ஊழியர்களுக்கு விருதுகளை வழங்கி எமது பங்குதாரர்களுக்கு பெறுமதி சேர்ப்பையும் வழங்குவதாகும்.

தரப்படுத்தலும் அங்கீகாரங்களும்

AA(lka)

நிலையான கண்ணோட்டத்துடன் தேசிய நீண்டகாலத் தரப்படுத்தல்.



AA(lka)
நிலையான கண்ணோட்டத்துடன் தேசிய காப்புறுதியாளர் நிதிச் சக்தியை தரப்படுத்தல்.



ISO 9001:2008

4-13 வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி
16-53 செயலாற்றுகை மீளாய்வுகள் 2016
56-82 ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள்
85-217 நிதிக் கூற்றுக்கள்
220-248 மேலதிகத் தகவல்

கூட்டாண்மைத் தகவல்

கம்பனியின் பெயரும் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமும்

வ.ச.ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டத்தாபனம்
இல. 21, வோக்ஹோல் வீதி கொழும்பு 02.
தொலைபேசி : +94 11 2357457
தொலைநகல் : +94 11 2447742
இணையத்தளம்: றறற.ளசடையமெயளைரசயஎந.உழஅ

கம்பனியின் பதிவிலக்கம்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டத்தாபனமானது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் 1993.02.03 ஆம் திகதியன்று என்(பீபிஎஸ்/சீஜிபி) /159 ஆம் இலக்கத்தில் கூட்டிணைக்கப்பட்டதுடன் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் 2008.04.17 ஆம் திகதியன்று பீபி 289 எனும் இலக்கத்தில் மீள்பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபை

திரு. கீத் டீ பேர்னாட் அவர்கள் 2016.12.20 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்பட்டதுடன் அதற்கேற்ப மற்றும் திரு. டீ.பீ.அநுர மற்றும் பீ.எஸ். சிறிவர்தன ஆகியோர் 2016.12.20 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறு பணிப்பாளர் சபை பின்வருமாறு:
திரு. ஹேமக டீ.எஸ். அமரசூரிய(தலைவர்)
திரு. ரீ.எம்.அர். பங்சா ஜயாஹ் (கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளர்)
திரு. டீ.பீ.அநுர மற்றும் பீ.எஸ். சிறிவர்தன (கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளர்)
வித்யா ஜோதிபோராசிரியர் எல்.ஜீ. சந்திரசேன (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)
திரு. பீ. அல்கம (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)
திரு. ஏ. சன்ஜய பத்மபெரும (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)
திரு. பிரதீப் லியனமான(நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)

சட்ட வடிவம்

வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டத்தாபனமானது, 1961 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க காப்புறுதிக் கூட்டத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், அரசுடமைக் கூட்டுத்தாபனமாக தாபிக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பொதுக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசிற்குச் சொந்தமான வியாபாரங்களை பொதுக் கம்பனியாக மாற்றுதல் சட்டத்தின் கீழ் 1993 ஆம் ஆண்டில் கூட்டத்தாபனம் முழுவதும் அரசுடமையான வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியாக 100 சதவீதத் தனிப் பங்காளராக திறைசேரியின் செயலாளரைக் கொண்டதாக மாற்றப்பட்டது. அரசாங்கத்தின் தனியார்மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டில் கம்பனியானது, ஆறு வருட காலப்பகுதியொன்றுக்கு தனியார்மயப்படுத்தப்பட்டது. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்டது. 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 04 ஆம் திகதியன்று தனியார்மயப்படுத்தலைச் செல்லுபடியற்றதாக்கிய உயர் நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் 99.97% சதவீதப் பங்குகளும் திறைசேரியின் செயலாளருக்கு உரிமைமாற்றப்பட்டது.

வரி செலுத்துவோர் அடையாள இலக்கம் (ரீஐஎன்)

294001590

பெறுமதி சேர் வரி பதிவிலக்கம்

294001590-7000

கம்பனிச் செயலாளர்

பீ.ஏ.ருவணி தர்மவர்தன
எல்எல்பீ, சட்டத்தரணி, எம்பீஏ, ஏசீஐஎஸ்ஐ (யூகே)

துணைக் கம்பனிகள்

- மனேஜ்மன்ட் சேர்விசஸ் ரக்'ன (பிரைவட்) லிமிடட்
- லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோப்பரே'ன் பிஎல்சீ
- லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட்
- லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா (பிரைவட்) லிமிடட்
- கென்வில் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடட்
- கெனொவின் ஹொட்டெல்ஸ் என்ட் ஸ்பா (பிரைவட்) லிமிடட்

உப துணைக் கம்பனிகள்

- லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் டயக்னொஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிடட்
- ஹெலன்கோ ஹொட்டெல்ஸ் என்ட் ஸ்பா (பிரைவட்) லிமிடட்
- சினோலங்கா ஹொட்டெல்ஸ் என்ட் ஸ்பா (பிரைவட்) லிமிடட்

கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் அதிபதி

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

வங்கியாளர்கள்

- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ
- ஹற்டன் நெஷனல் பேங்க் பீஎல்சீ
- நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பீஎல்சீ
- ஸ்டான்டர்ட் சார்ட்டட் பேங்க்
- சம்பத் பேங்க் பீஎல்சீ
- சேலான் பேங்க் பீஎல்சீ
- தேசிய சேமிப்பு வங்கி
- பிரதேச அபிவிருத்தி வங்கி
- லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி
- பான் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ
- டீஎப்சீசீ பேங்க் பீஎல்சீ

காப்பீட்டுக் கணிப்பாளர் - ஆயுள்

டவர்ஸ் வொட்சன் சிங்கப்பூர் (பிரைவட்) லிமிடட்
63, சுயிலியா ஸ்ட்ரீட்
09-01 ஓசீபீசீ சென்ட்ர ஈஸ்ட்
சிங்கப்பூர் 049514

காப்பீட்டுக் கணிப்பாளர் - ஆயுள் அல்லாத


என்எம்ஜீ பைனான்சியல் சேர்விசஸ் கொன்சல்டிங்
30,ஹில், ஸ்ட்ரீட்
#03-02ஏ,
சிங்கப்பூர் 179360

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனக் குழுமம்


2016 டிசம்பர் மாத இறுதியில், இலங்கை அரசாங்கத்தின் பொருட்டு, திறைசேரியின் செயலாளருக்கு உரிமைமாற்றப்பட்டுள்ள கம்பனியின் பங்குகளில் 99.97% சதவீதத்தைக் கொண்டதாக இலங்கை அரசாங்கம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பெரும்பான்மையான பங்குகளுக்கு உரிமையாளராகியது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனக் குழுமம் முழுமையான உரிமைகளைக் கொண்ட 3 துணைக் கம்பனிகளையும் பாதியளவு உரிமைகளைக் கொண்ட 3 துணைக் கம்பனிகளையும் உள்ளடக்கியுள்ளது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனக் குழுமத்தின் முழுமையான உரிமைகளைக் கொண்ட 3 துணைக் கம்பனிகள் லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா (பிரைவட்) லிமிடட், கெனொவின் ஹொட்டெல்ஸ் என்ட் ஸ்பா (பிரைவட்) லிமிடட், மனேஜ்மன்ட் சேர்விசஸ் ரக்'ன (பிரைவட்) லிமிடட் என்பனவாகும். பாதியளவு உரிமைகளைக் கொண்ட துணைக் கம்பனிகள், லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 99.94% உரிமைகளைக் கொண்டுள்ளது), லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோப்பரே'ன் பிஎல்சீ (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 54.61% உரிமைகளைக் கொண்டுள்ளது) மற்றும் கென்வில் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடட் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 45.95% உரிமைகளைக் கொண்டுள்ளது) என்பனவாகும்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனக் குழுமத்தின் கட்டமைப்பு



வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248



சாதாரண காப்புறுதி உற்பத்திப் பிரிவு



வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

ஆயுள் காப்புறுதி உற்பத்திப் பிரிவு

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆயுள் காப்புறுதி வாழ்க்கைக்கு புத்திசாலித்தனமான முதலீடு

Sri Lanka Insurance
LIFE
Invest wisely in life

சிறுவர் காப்புறுதித் தீர்வுகள்	முதலீட்டுக் காப்புறுதித் தீர்வுகள்	சுகாதாரக் காப்புறுதித் தீர்வுகள்	ஓய்வுதியக் காப்புறுதித் தீர்வுகள்
Minimuthu Children's Plan	Divi Thilina Protection Plan	Sri Lanka Insurance HEALTH A Healthy Nation Is A Wealthy Nation	Freedom Retirement Plan
Minimuthu Dayada Children's Plan	Yasa Isuru Advance Benefit Plan		
	Janadiri Two year relief plan		
	Praguna High Returns Plan		

4-13 வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி
16-53 செயலாற்றுகை மீளாய்வுகள் 2016
56-82 ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள்
85-217 நிதிக் கூற்றுக்கள்
220-248 மேலதிகத் தகவல்

எமது வலையமைப்பு

வட மத்திய மாகாணம்

அனுராதபுரம்
- அனுராதபுரம்
- தம்புல்ல
- கலேவல
- கல்கமுவ
- ஹிங்குரக்கொட
- கதுருவெல
- கொகிராவ
- தம்புத்தேகம
- வவுனியா
- ஹொரவபத்தான
- பக்கமூன
- அரலகன்வில

ஊவா வெல்லஸ்ஸ மாகாணம்

பதுளை
- அம்பாறை
- பதுளை
- பண்டாரவளை
- பிபிலை
- மஹியங்கன
- மொனராகல
- வெலிமட
- வெல்லவாய

கிழக்கு மாகாணம்

- மட்டக்களப்பு
- கல்முனை
- கந்தளாய்
- திருகோணமலை
- அக்கரைப்பற்று
- தெஹியத்தகண்டிய

மத்திய மாகாணம்

மத்திய 1
- தி்கன
- எப்பீடீ(கண்டி)
- பிலிமதலாவ
- கம்பொல
- கண்டி
- மாத்தளை

மத்திய 2
- ஹட்டன்
- கேகாலை
- மாவனல்லை
- நாவலப்பிட்டிய
- நுவரெலியா
- ரிகில்லகஸ்கட

மேல் மாகாணம்

கொழும்பு 1
- பத்தரமுல்லை
- ஹோமாகமை
- கிருலப்பனை
- மஹரகம
- மாலபே
- நுகேகொட
- பிட்டகோட்டே

கொழும்பு 2
- கொழும்பு கோட்டை
- கடவத்தை
- கடுவல
- கிரிபத்கொடை
- கொட்டாஞ்சேனை
- வத்தளை
- ராகம

மேல் மாகாணம்

கொழும்பு 3
- பம்பலப்பிட்டி
- நகர அலுவலகம்
- தெஹிவளை
- மொரட்டுவை
- பிலியந்தலை
- இரத்மலானை

கொழும்பு 4
- பொரல்ல

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

தென் மாகாணம்

காலி
- அம்பலங்கொட
- பெத்தேகமை
- எல்பிட்டிய
- காலி
- தல்கஸ்வல
- உடுகம

ஹம்பாந்தோட்டை
- அம்பலந்தொட்ட
- பெலிஅத்த
- திஸ்ஸமஹாராம
- ஹம்பாந்தோட்டை
- தங்கல்ல

தென் மாகாணம்

மாத்தறை
- மாத்தறை
- தெனியாய
- திக்வெல்ல
- அக்குரஸ்ஸ
- வெலிகம
- ஹக்மன

மேல் மாகாணம்

கம்பஹ
- கம்பஹ
- மினுவங்கொட
- நித்தம்புவ
- வேயங்கொட
- ஜா-எல
- கந்தான
- நீர்கொழும்பு
- கொச்சிக்கடை

களுத்துறை
- பண்டாரகமை
- அழுத்கம
- ஹொரண
- களுத்துறை
- மத்துகம
- பாணந்துறை

வட மாகாணம்

யாழ்ப்பாணம்
- சங்கானை
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- மன்னார்
- நெல்லியடி
- சாவகச்சேரி
- முல்லைத்தீவு

வட மேல் மாகாணம்

குருநாகல்
- ஆணமடுவ
- கிரிஉல்ல
- குருநாகல்
- மெல்சிறிபுர
- நாரம்மல
- குளியாப்பிட்டிய
- நிக்கவெரட்டிய
- வரக்காப்பொல
- வாரியபொல
- சிலாபம்
- மாரவில
- புத்தளம்
- வென்னப்புவ

சபரகமுவ மாகாணம்

இரத்தினபுரி
- அவிசாவலை
- பலாங்கொடை
- எஹலியகொட
- கஹவத்தை
- கலவான
- இரத்தினபுரி
- எம்பிலிபிட்டிய

குறிப்பு : ராகம, பக்கமூன மற்றும் அரலகன்வில ஆகிய கிளைகள் 2017 இல் திறக்கப்பட்டன.

செயலாற்றுகை மீளாய்வு 2016

நிதிரீதியான முக்கிய பகுதிகள்

	2016	2015
மொத்த வருமானம்	42,108	31,157
மொத்தத் தவணை	27,614	24,521
தேறிய சம்பாத்தியத் தவணை	24,013	20,393
வரிக்கு முன்னரான இலாபம்	13,791	4,821
வரிக்கப் பின்னரான இலாபம்	12,741	3,439
மொத்தச் சொத்துக்கள்	176,802	166,947
சொத்துக்கள் மீதான இலாபம் (%)	7	2
சாதாரண காப்புறுதி		
சாதாரண காப்புறுதி நிதியம்	16,517	14,917
தேறிய உரிமைக் கோரிக்கை வகிதம் (%)	69.8	65
செலவு விகிதம் (%)	29.1	28.52
ஆயுள் காப்புறுதி		
ஆயுள் காப்புறுதிநிதியம்	87,357	77,858
செலவு விகிதம் (%)	41	35
முகப் பெறுமதி மிகையூதியம்	6,216	5,385
தரப்படுத்தல்		
பிட்ச் தரப்படுத்தல்	AA(lka)	AA(lka)
தேசிய காப்புறுதியாளர் நிதிச் சக்தி	AA(lka)	AA(lka)
தேசிய நீண்டகால தரப்படுத்தல் பார்வை	Stable	Stable

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248



வருடத்திற்கான இலாபம்
ரூபா 12.7 பில்லியன்



மொத்தச் சொத்துக்கள்
ரூபா 176.8 பில்லியன்



ஆயுள் நிதியத்தின் அளவு
ரூபா 87.3 பில்லியன்



வழங்கப்பட்ட மொத்த
போனஸ் தொகை
ரூபா 6.2 பில்லியன்




வரிகளுக்கான பங்களிப்பு
ரூபா 2.9 பில்லியன்



முதலீட்டு
வருமானம்
ரூபா 17.3 பில்லியன்

தலைவரின் ஆசிச் செய்தி



"அதிவேக நெடுஞ்சாலைகள், மாநகர கருத்திட்டங்கள், கொழும்பு துறைமுக நகர் நிதி மையம் போன்ற பாரியளவு தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் பல ஆதரவு கைத்தொழில்களுக்கு அடித்தளமிடுமென்பதோடு வேறுபட்ட பொருளாதார துறைகளிடையே காப்புறுதி உற்பத்திகளுக்கான தேவையை உருவாக்கும்"

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது 2016 ஆம் ஆண்டில் மற்றுமொரு வெற்றிகரமான திருப்திகரமான வியாபார பெறுபேற்றைப் பதிவு செய்திருக்கின்றதென்பதை அறிக்கையிடுவதில் நான் பெரும் மகிழ்ச்சியடைவதோடு, அது இலங்கை அரசாங்கத்தின் கடமைகள் மற்றும் கடப்பாடுகளுக்கு (ஏனைய அரசாங்கத்திற்கு சொந்தமான வியாபார பொறுப்பு முயற்சிகளைப் போன்று) அமைவாக பொருத்தமாக நிறைவேற்றியும் இருக்கின்றது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதான பங்குதாரராக இலங்கை அரசாங்கம் இருந்து 99.9% உரிமையாண்மையைக் கொண்டிருக்கின்றது. அதேபோல் ஏனைய அரசாங்கத்திற்கு சொந்தமான வியாபார அமைப்புக்கள் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அரசாங்கத்தின் ஏனைய வியாபார பெரும் முயற்சிகளைப் போன்று இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விநியோகிக்கத்தக்க இலாபங்கள் பொதுமக்களுக்கு ஈடுபடுத்தப்பட்டிருப்பதோடு அவை அரசாங்க தலையீட்டினூடாக இடம்பெற்றிருக்கின்றது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சியும் முதலீட்டுத் தீர்மானங்களும் அரசாங்கத்தின் கொள்கையினால் உரிய முறையில் வழிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆதலால், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை ஒரு தனிமைப்படுத்தப்பட்ட நிதிசார் தீர்மானமாகவன்றி கைத்தொழில் போட்டியாளர்கள் என்ற அடிப்படையிலன்றி ஒரு பொறுப்புமிக்க அரசாங்க பொது நோக்கிலிருந்து நோக்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. இது

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

அரச உடைமையான தொழில்முயற்சிகளின் வளர்ச்சியடைந்து வரும் முக்கியத்துவத்தை பிரதிபலிப்பதோடு இவற்றை சிறந்த தொழில்சார் உள்ளீடுகள் மற்றும் பொருத்தமான முகாமைத்துவ நிபுணத்துவங்களினூடாக முகாமை செய்வதற்கான தேவையையும் வேண்டி நிற்கின்றன.

அரசாங்கத்திற்கான பங்கிலாபங்கள்

2016 ஆம் ஆண்டுக்கான நிதியாண்டில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது இலங்கை அரசாங்கத்திற்கு பங்கிலாபங்கள் என்ற வகையில் ரூபா 10.85 பில்லியனை வழங்கியிருக்கின்றது. இது செலுத்தப்பட்ட பங்கிலாப விதிதத்தில் 85% இருப்பதோடு செலுத்தப்பட்ட விகிதம் வருடாவரும் 46% உயர்ந்திருக்கின்றது.

வரி கொடுப்பனவுகள்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது மொத்தம் ரூபா 2.9 பில்லியன் தொகையை அரசாங்க வரிகளுக்கு பங்களிப்புச் செய்து இதில் வருமான வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி உள்ளிட்டதாக ஒரு பிரதான வரி செலுத்துநராகவும் தொடர்ந்தும் இருந்து வருகின்றது.

நன்கொடைகளும் கூட்டுறவு சமூகப் பொறுப்புக்களின் பங்களிப்புகளும்

அரசாங்கத்திற்கான பங்கிலாபங்களுக்கு மேலதிகமாக சேவைகள், வசதிகள் என்ற வகையில் பொதுமக்களுக்கு மீள் விநியோகப்படுகின்ற வரிகளின் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது சமுகத்துடனான பல தர்ம நன்கொடைகள், மதசார், கல்வி, சுகாதார மற்றும் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுக்கு நேரடியாகவும் பங்களிப்புச் செய்கின்றது. கம்பனியானது நீண்டகால கூட்டாண்மை சமுக பொறுப்புமுயற்சி கருத்திட்டங்களையும் கொண்டிருக்கின்றது. கவனமாக தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவு சமூகப் பொறுப்புக்கள் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்ந்தும் நிலைத்திருக்க வேண்டிய நம்பிக்கையில் இவை பெறுநருக்கும் சமுகத்திற்கும் அர்த்தமுள்ள நன்மைகளாக மாற வேண்டும் என்ற விளக்கம் தேவைப்படுகின்றது.

அனைத்து தர்ம நிதியங்களுக்கான பங்களிப்புக்களும் முறையான அமைப்பொன்றில் பணிப்பாளர்கள் சபையினூடாக அங்கீகரிக்கப்படுகின்றது. நீண்டகால கூட்டுறவு சமூகப் பொறுப்புக்கள் கருத்திட்டங்கள் சமுக நன்மைத் தாக்கத்தில் பாரிய பங்களிப்பைக் கொண்டிருப்பதால் தனிப்பட்ட கொடை நிகழ்ச்சிகளுக்கப்பால் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் எதிர்காலத்திலும் அத்தகைய செயற்பாடுகளில் தனது கவனத்தை செலுத்தும் என்பதோடு அத்தகைய செயற்பாடுகளில் அதன் பெயரை அடையாளங் காண்பதற்கும் அது குறிக்கோளாகக் கொண்டிருக்கும்.

சந்தை நடத்தை

2016 ஆம் ஆண்டில் மொத்த சந்தையும் ஒரு ஏமாற்றகரமானதாக அமைந்ததது. இதில் முதலாவதாக 2014 ஆம் ஆண்டில் வெளிப்பட்டதோடு பின்னர் 2015 ஆம் ஆண்டில் பலமாகத்தாக்கியது இதன் காரணமாக 2016 ஆம் ஆண்டில் பாரிய வளர்ச்சித் தாக்கத்தை பிரதிபலிக்க முடியாது இருந்தது. முழுதுமளாவிய பொருளாதாரத்தின் மந்த நிலைமை இதற்கான ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால், காப்புறுக் கைத்தொழிலின் இயலாமையானது கிளை விரிவாக்க வளர்ச்சியில் ஏற்பட்ட மந்த நிலைமை தொடர்ந்துள்ளமை கூட்டு ரீதியாக வடிவமைக்கப்பட்ட ஊக்குவிப்புசார் நிகழ்ச்சித் திட்டங்கள் குறைவடைந்தமை என்பன கைத்தொழில் வீழ்ச்சிக்கான நிர்ப்பந்தக் காரணிகளாக இருக்க முடியும்.

2016 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுப் பிரிவின் கூட்டாண்மைத்துறையின் மந்தபோக்கானது இந்த பிரதான துறையின் மரபு ரீதியான வளர்ச்சிப் போக்கை புறந்தள்ளி சிறந்த வருடத்தின் செயலாற்றுகையாக இருந்ததோடு, இது காப்புறுதித் துறை மீதும் ஒரு மேலெழுந்தவாரியான தாக்கத்தை செலுத்தியது.

அதிகரித்து வந்த பணவீக்கமானது நுகர்வோர் கொள்வனவு சக்தியில் செல்வாக்கு செலுத்தியது. 2015 ஆம் ஆண்டில் தேசிய ரீதியில் கிளை திறப்புக்கான மந்தகதியில் அமைந்த ஆண்டாக இருந்ததோடு இது 2016 ஆம் ஆண்டில் மந்தகதியிலான புதிய திறப்புகளுக்கும் காலாக அமைந்தது.

இது 2017 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சித் தன்மைகளில் இந்த வருடத்தின் ஆரம்ப கட்டத்தில் ஒரு நிச்சயமற்ற தன்மையைக் காண்கின்றது. சாதாரண சராசரி மாற்றத்திற்கு அப்பால் வளர்ச்சியைக் கொண்டு செல்வதற்கு நிர்ப்பந்தமான தேவையொன்றை வேண்டியதாக கம்பனி இருக்கின்றது.

வியாபார செயலாற்றுகை

குறைக்கப்பட்ட பொருளாதாரப் பின்னனி 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காப்புறுதிக் கைத்தொழில் எதிர்கொண்ட மாற்றங்கள் என்பவற்றை வைத்து இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிதிசார் செயலாற்றுகையானது திருப்பதிகரமானதாகவுள்ளதாக பதியப்பட்டிருக்கின்றது. இலங்கை காப்புறுத் கூட்டுத்தாபனமானது இரட்டை எண் வருமானத்தை தக்கவைத்துக்கொண்டதோடு சவால்மிக்க சூழலொன்றில் 270% தேறிய இலாப வளர்ச்சியையும் எட்டியது. செயலாற்றுகை தொடர்பான தகவல்களுக்காக இணைந்த முகாமை பணிப்பாளர்கள் மீளாய்வைப்ப பார்க்க)

எவ்வாறாயினும் இந்த அடைவுகளை குறைத்து மதிப்பிடாது இலங்கையின் குறைந்த காப்புறுதி ஈடுபாடு மட்டங்களை கருத்திற் கொண்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூல வளங்கள் அதன் பெயர் அங்கீகாரம் என்பவற்றுடன் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது எதிர்காலத்தில் இதை விடவும் சிறப்பாக செயற்படும் என நாம் நம்புகிறோம், ஆதலால் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில் எமது கவனமானது அநேகமாக இந்த சாத்தியமான வளர்ச்சி விகிதங்களை யதார்த்தப்படுத்துவதற்காக உபாய முறைத் தலையீடு கடந்த கால சந்தை வீதங்களை சிறப்பாக்குவதற்கான நோக்கமுடைய உயர் எட்டுக்களை நோக்கியதாக எமது உபாய முறை இருக்கும்.

தலைவரின் ஆசிச் செய்தி

மானியங்கள் ரீதியான பங்களிப்பு

அரசாங்கத்திற்கு சொந்தமான அமைப்பு என்ற வகையில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முதலீடுகள் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு உட்பட்டவையாக உள்ளன. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ரூபா 151 பில்லியன் முதலீட்டு அளவில் சுமார் ரூபா 21 பில்லியன் மானியங்களிலான ஒப்புரவு முதலீடுகளை பிரதிநிதித்துவம் செய்கின்றது. 2016 ஆம் ஆண்டில் இந்த மானியங்கள் மொத்தமாக ரூபா 7.9 பில்லியன் பங்களிப்பு செய்து மொத்த முதலீட்டு வருமானத்திற்கு பங்கிலாபமாக இருந்துள்ளதோடு சுமார் 46% மொத்த முதலீட்டு வருமானத்தில் பங்களிப்பு செய்துள்ளது.

இந்த மானியம் வழங்கப்பட்ட அமைப்புக்களாக லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட் (99.9% உரிமையாண்மை), லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா (பிரைவட்) லிமிடட் (100% உரிமையாண்மை) மற்றும் கெனொவின் ஹொட்டெல்ஸ் என்ட் ஸ்பா (பிரைவட்) லிமிடட் (100% உரிமையாண்மை) – என்பன வருமானங்கள் மற்றும் வருடாவரும் அதிகரித்து வரும் உரிமைப் பங்கின் மீதான இலாபம் என்பவற்றில் சிறந்த செயலாற்றுகையை அறிக்கை செய்திருக்கின்றன. உரிமைப் பங்கின் மீதான இலாபம் லிட்ரோ கேஸ் லங்கா லிமிடடில் இருந்து 25% வீதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டில் 27% அதிகரித்திருப்பதோடு, லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா (பிரைவட்) லிமிடடில் முறையே 11% இலிருந்து 24% அதிகரித்திருக்கின்றது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 54.6% உரித்துடைமையைக் கொண்ட இலங்கை ஹொஸ்பிடல் கூட்டாண்மை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது ஒரு பலமான ஆண்டை அறிக்கை செய்துள்ளதோடு ரூபா 972 மில்லியன் தேறிய இலாபத்தை பங்களிப்புச் செய்து தொடர் வருடத்தில் உரிமைப் பங்கின் மீதான இலாபத்திருந்து 16.63% இருந்து 17% ஸ்திரப்படுத்தியிருக்கின்றது.

இதற்கு விதிவிலக்காக அமைந்திருப்பது கென்வில் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடட் ஊடாக அமுல்படுத்தப்பட்ட Grand Hyatt project மாத்திரமேயாகும். அதன் துணைக் கம்பனியான இன்னும் தொழிற்பாட்டுக்கு வராத சினோலங்கா ஹொட்டெல்ஸ் என்ட் ஸ்பா (பிரைவட்) லிமிடட் இதன் நிர்மாண நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. ஹோட்டல்களின் மூல கட்டமைப்பு ஒன்றாகவே இருப்பதோடு, பல ஒப்பந்த குழுக்கள் பூர்த்தி செய்து அதேநேரத்தில் உள்ளக கட்டமைப்புகளை துரிதமாக பூர்த்தி செய்து வருவதோடு, 2018 இன் 3ஆம் காலாண்டு என்ற அதன் பூர்த்திக்கான இறுதித் திகதியை அடைய முயற்சிக்கின்றன. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 8.5 மில்லியன் ஆரம்ப ஒப்புரவு மூலதனத்தைக் கொண்ட ஹோட்டல் கருத்திட்டங்கள் இவற்றில் ஒவ்வொன்றும் ரூபா 5.0 மில்லியன் மானிய அடிப்படையிலான லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட் மற்றும் ஊழியர் சேமலாப நிதி என்பன முறையே கொழும்பு நகர் இடவமைவையும் பூர்த்தி செய்யப்படுகின்றபோது அது வாக்களித்திருக்கின்ற கட்டமைப்பொன்றை பூர்த்தி செய்வதற்கான கடன் முதலீட்டை சமப்படுத்துவதாக அமையும். இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனிகள் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு மானியக் கம்பனிகளின் செயலாற்றுகை என்ற அத்தியாத்தைப் பார்க்கவும்.

வியாபாரத்தின் நீடித்த நிலைமை

குவைஉ சுயவலைபௌ டுயமெய இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு 'AA(lka)' தர தேசிய நீண்டகால தரப்படுத்தலொன்றையும் தேசிய காப்புறுதியாளர் நிதிசார் பல தரத்தையும் 2017 ஜனவரி மாதத்தில் வழங்கியது. இந்த தரப்படுத்தலானது உள்ளுர் காப்புறுதி வியாபாரத்தில் பலமான செயற்பாட்டாளராக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிலைமையைப் பிரதிபலிக்கின்றது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நாட்டில் ஆயுள்சாராத வியாபாரத்தில் இரண்டாவது மிகப் பெரிய சந்தைப் பங்காக 20% தைக் கொண்டுள்ளதோடு, 19% ஆயுள் காப்புறுதியில் இரண்டாம் அதியுயர் பங்கையும் கொண்டுள்ளது. இது 2016 ஆம் ஆண்டில் GWP இனால் மதிப்பிடப்பட்டவாறானதாகும். இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தளமானது 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 177 பில்லியன் பெறுமதி கொண்டதாகவும் மொத்தக் காப்புறுதித் துறை ஆதனங்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்பட்ட வகைகூறுதலினைக் கொண்டிருக்கின்றது.

வியாபார நீடித்த நிலைமைகளின் பிரதான சுட்டியாகவுள்ள மூலதன விகிதமானது ஒழுங்குறுத்துகை மூலதனமானது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆகக்குறைந்த ஒழுங்குறுத்துகை சுட்டிகளுக்கு மேலே உள்ளதோடு, உள்ளுர் காப்பறுதிக் கைத்தொழிலில் மிகப் பலமானதாகவிருக்கின்றது. 2016 திசெம்பர் இறுதியளிவிலுள்ளவாறான ஆயுளுக்கான ஆபத்து அடிப்படையிலான மூலதன போதியளவு தன்மை 427% வீதமாக இருப்பதோடு, இது சாதாரணத்திற்கு 186% ஆகவும் ஒவ்வொன்றுக்குமான ஆகக் குறைந்த தேவைப்பாடு 120% ஆகவும் உள்ளது. இது இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையை மீண்டும் பலப்படுத்துவதாகவுள்ளது.

இதற்கு மேலதிகமாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது இலங்கை காப்பறுதிச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மீள் காப்புறுதியாளர்களினால் வழிநடத்தப்பட்ட Swiss Re and Munich Re இன் அங்கீகாரத்திலிருந்து பலமான மீள் காப்பினால் ஆதரவளிக்கப்படுகின்றது. இந்த முழுதுமளாவிய மீள் காப்பு 2016 ஆம் ஆண்டில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஐந்தொகையை தொடர்ந்தும் பலப்படுத்தியதோடு, 2016 மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக கோரிக்கைகளின் கூரிய அதிகரிப்பையும் எதிர்கொண்டது. எழுந்து வரும் சந்தைகளின் காப்புறுதி வியாபாரத்தின் மீள் காப்புறுதி மாதிரிகளுக்கான எந்த குறுக்கு வழிகளும் இல்லை என்பதை வலியுறுத்த நாம் விரும்புகின்றோம்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது அனைத்து இலங்கை காப்பறுதிச் சபை மற்றும் ஏனைய தொடர்புடைய ஒழுங்குவிதிகளில் 2016 ஆம் ஆண்டின் பூரண இணக்கத்தைக் கொண்டதாக இருந்தது.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் இணக்கப்பட்டு தொடர்பான மேலதிக தகவல்களுக்கு ஆளுகை பற்றிய அத்தியாயத்தைப் பார்க்கவும்.

எதிர்கால கட்டமைப்பு

இலங்கை காப்பறுதிச் சபை 2016 ஆண்டில் வினைப்படுத்தப்பட்ட ஒழுங்குறுத்துகை மாற்றங்கள் கூட்டு காப்புறுதியாளர்களை அவர்களது வியாபாரங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடுவதற்கும் தேவைப்படுத்துகின்றது. எவ்வாறாயினும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் பட்டியலிடப்படாத கூட்டுக் காப்புறுதியாளராக தொடர்ந்தும் தொழிற்பட்டு வருவதோடு, இது பிரதானமாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்களின் அழுத்தங்களினாலாகும். இந்த நிலைமைகளின் இலங்கை காப்பறுதிச் சபையினால் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுதாபனம் மற்றும் ஏனைய சில வெளிநாட்டுக்குச் சொந்தமான கம்பனிகள் பட்டியலிருந்து விதிவிலக்கப்படுமென எமக்கு அறிவிக்கப்பட்டது. தனிமைப்படுத்தல் தொடர்பில் அரசாங்கமே விரைவில் இறுதித் தீர்மானத்தை எடுக்கத் தேவைப்படுத்துகின்றது.

மேற்படி நிலைமையில் இருந்தாலும்கூட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது பாரிய வளர்ச்சி ஆற்றலையும் உள்ளூர் காப்புறுதிக் கைத்தொழிலுக்கு சேவையாற்றுகின்ற ஆற்றலையும் கொண்டுள்ளது என நாம் நம்புகின்றோம். நிறுத்தப்பட்டிருந்த பல பாரிய முதலீட்டு கருத்திட்டங்கள் தற்பொழுது புதுப்பிக்கப்பட்டு புதிய தேசிய அபிவிருத்தி கருத்திட்டங்களுடன் ஒன்றிணைந்து செயற்படுகின்றன. அதிவேக நெடுஞ்சாலைகள்,மாநகர கருத்திட்டம், கொழும்பு துறைமுக நகர் நிதி மையம் போன்ற பாரியளவு தேசிய நிகழ்ச்சித் திட்டங்கள் பல ஆதரவு கைத்தொழில்களுக்கு வழியமைக்கும் என்பதோடு வேறுபட்ட பொருளாதார துறைகளிடையே காப்புறுதி உற்பத்திகளுக்கான தேவையை உருவாக்கும். தற்போது நிலவி வருகின்ற 4.5% என்ற மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதமானது இந்த தசாப்தத்தின் இறுதியில் வீச்சொன்றை எடுக்குமென எதிர்வு கூறப்பட்டிருக்கின்றது. அத்தகைய பொருளாதாரத் திருப்புமுனை உயர் விளைவுப் பெருக்கத்தைக் கொண்ட அரசாங்கத்தினூடாகவும் கூட்டாண்மை காப்பு கருவிகளினூடாகவும் பொருளாதார முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்கும் என்பதோடு மூலதன ஆக்கத்திற்கான தனியார் ஒப்புரவு முதலீட்டுக்கும் ஊக்கமளிக்கும்.

இந்தப் பின்னணியில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பாய்ச்சலானது புதிய வியாபார வாய்ப்புக்களை பெறுவதற்கான நிரூபிக்கப்பட்ட தர ஒப்புரவை காத்து நிற்குமென நான் கருதுகிறேன். டீசயனெ குயெஎெநளள வருடாந்த தரப்படுத்தல் மதிப்பீட்டில் 32 மற்றும் 35 இலக்க தரப்படுத்தலானது முறையே பொது மற்றும் ஆயுள் காப்புறுதிகளுக்கான மதிப்பீடானது நாம் தனியார் துறை மயப்படுத்தப்பட்ட காப்புறுதியினை ஒன்றிணைந்திருக்கின்றோம் என்பதைக் காட்டுகின்றது. இதை ஒரு தரப்பெயராக மட்டும் கருதினால் எமது தரப் பெயர் பெறுமதியானது 4.5 பில்லியனுக்கு சமமான பெறுமதியைக் கொண்டதாகவிருக்கும். இது எமக்கு இலக்கம் 23 என் தர நிலைமையைத் தரும். எமது ஆலோசகர்களுக்கும் விற்பனைப் படைக்குமான சவால் யாதெனில் இந்த பலமிக்க தரப்பெயர் ஒப்புரவை மாற்றியமைப்பதாகும். இது அரசாங்க துறையில் 4 ஆவது மிகப் பலமான பெறுமதியாக இருப்பதோடு (இதன் பின்னே 3 பாரிய வங்கிகள் உள்ளன.) 2017 இல் பாரிய வருமான வளர்ச்சியாண்டாக மாற்றியமைப்பதாகும். இது உந்துசக்தியளிக்கப்பட்ட செயற்பாடுள்ள மற்றும் பெரும்பாக நிகழ்ச்சித் திட்டங்களினால் ஆதரவளிக்கப்படுகின்றது.

இந்த எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிக் கேள்வியை அடைவதற்கான எட்டுக்களை நாம் எடுத்துள்ளோம். துரித கிளை விரிவாக்கம் உள்ளிட்ட திட்டங்கள் 2018 தொடக்கம் 2020 வரையான புதிய 3 வருட வியாபார உபாயமொன்றுக்கான விளக்கங்களை நாம் ஆரம்பித்துள்ளோம். விசேட இலக்குக்குழுக்கான விசேடத்துவமான புதிய காப்புறுதி உற்பத்திகளை நாம் தொடர்ந்தும் விருத்தி செய்து வருகின்றோம். கட்டுப்படுத்தப்பட்ட கிளை விரிவாக்கமானது அடுத்த 3வருடங்களினுள் வளர்ச்சி விகிதத்தின் அதிகரித்த விகிதத்தை அடைவதற்கான பிரதான காரணியாக இருக்குமென நாம் நம்புகின்றோம்.

எமது நிரல் அமைச்சான அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு, மற்றும் நிதியமைச்சு போன்றவற்றிக்கு அவற்றின் வழிகாட்டல் இவ்வாண்டுக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்து முடிக்க விரும்புகிறேன். எமது வாடிக்கையாளர்களுக்கும் எமது ஊழியர்களுக்கும் எமது ஆலோசகர்களுக்கும் நாம் எப்போதும் நன்றியுடையவர்களாகவிருப்பதோடு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பை நாம் எதிர்பார்ப்பதோடு 2017 ஆம் ஆண்டை வெற்றிகரமாக எதிர்கொள்ளவும் நாம் எதிர்பார்க்கிறோம்.



ஹேமக டீ. எஸ்.அமரசூரிய
தலைவர்

2017 மே மாதம் 25 ஆந் திகதி

இணைந்த முகாமைத்துவப் பணிப்பாளரின் மீளாய்வு



"கம்பனியின் ஐந்தொகையானது ரூபா 176.8 பில்லியன் என்ற இலக்கை அடைவதற்கு ரூபா 9.8 பில்லியனால் வளர்ச்சியடைந்தது. ரூபா 87 பில்லியனை அடைவதற்கான ஆயுள் நிதியத்தின் பெறுமதியானது ரூபா 9.4 பில்லியனினால் அதிகரித்தது. இது 2015 இலிருந்து 12.2% வளர்ச்சியாகும். பொதுக் காப்புறுதி வியாபகமும் 10.73%ஆக விரிவடைந்ததோடு, இது ரூபா 16.5 பில்லியனை அடைவதற்கானரூபா 1.6 பில்லியன் அதிகரிப்பாக இருக்கின்றது."

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வியாபார செயலாற்றுகையையும் 2017 ஆம் ஆண்டுக்கான திட்டங்களையும் முன்வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிதிசார் வளர்ச்சியானது பிரதானமாக புதிய காப்புறுதித் தேவைப்பாடுகள், முதலீட்டு வருமானங்கள், ஏலவே உள்ள கோட்பாடுகளை புதிப்பித்தல் என்பவற்றிலேயே பிரதானமாக தங்கியுள்ளது. காப்புறுதி உற்பத்திகளுக்கான நாட்டில் புதிய தேவைப்பாட்டின் தலைமுறை 2016 ஆம் ஆண்டில் நாட்டின் பாரிய கடன் தேவைப்பாடுகளுடன் இணைந்து அரசாங்க மற்றும் தனியார் துறைகள் ஆகியவற்றின் பொருளாதார செயற்பாடுகளின் மந்தகதியின் காரணமாக மென் நகர்வையே தொடர்ந்து கொண்டிருந்தது. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வியாபார வளர்ச்சியும் அதிகரித்த போட்டித் தன்மையினால் வரையறுக்கப்பட்டதாகவே இருந்தது. எவ்வாறாயினும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது குறைவான இருப்புச் சந்தை என்பவற்றிக்கிடையே முதலீட்டு வருமதிகளை பெற்றுக்கொண்டதோடு தற்போதுள்ள வாடிக்கையாளர்களை தவணைப் பணங்களின் அதிகரிப்பின் பின்னணியிலும் தொடர்ந்தும் வைத்துக்கொள்ள முடியுமாக இருந்தது.

தொழிற்பாட்டுச் சூழல்

நிர்மாணம், பொருள் வசதியளிப்பு, வியாபாரம் போன்ற பாரியளவு காப்புறுதிக் கேள்வியை உருவாக்குகின்ற நாட்டிலுள்ள பொருளாதாரத்

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

துறைகள் 2016 ஆம் ஆண்டில் மந்தநிலைமையில் தொடர்ந்தும் இருந்தன. அரசாங்கம் மற்றும் தனியார் துறைகளின் முதலீடுகள் பாரியளவு உட்கட்டமைப்பு கருத்திட்டங்களில் தொடர்ந்தும் ஒரே மட்டத்தைக் கொண்டதாக இருந்ததோடு இது குறைவான போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, ஏற்றுமதி - இறக்குமதி வியாபாரம், மற்றும் பொருள் வழங்கல் சேவைகள் என்பவற்றில் பங்களிப்புச் செய்ததோடு, இது ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி காப்புகளை உள்ளடக்கியதாகவும் இருந்தது. குறைவான பொருளாதார செயற்பாடானது புதிய கருத்திட்டங்களில் முதலீட்டு வாய்ப்புக்களை குறைத்ததோடு கடன் நிதியிடலுக்கு குந்தகமாக அமைந்தது. அதேவேளையில், சில துறைகள் மீதான அதாவது காப்புறுதி சுகாதாரக் கவனிப்பு சேவைகள், போன்றவற்றின் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் விதிப்பானது 2016 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியின் பொ.சே.வ (VAT) வரிவிகிதங்களின் அதிகரிப்பு தொடர்ந்தும் காப்புறுதிக் கேள்வியை பள்ளத்தில் கொண்டு சென்றது. வாகன இறக்குமதி மற்றும் மீள் விற்பனை சந்தைகளின் வீழ்ச்சி, ரூபா பெறுமதியிறக்கத்தின் காரணமாகவும் இறக்குமதி வரிகளின் மீளாய்வு மற்றும் மோட்டார் வாகனங்களிலான குத்தகை வழங்கல் விதிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பன குறைவான காப்புறுதி, கேள்வி, வளர்ச்சி செய்த மற்றுமொரு காரணியாகும். இவற்றுடன் இணைந்ததாக இந்த வெளியக காரணிகள் காப்புறுதி கைத்தொழில் அதன் வளர்ச்சியாற்றலுக்குக் குறைவான ஒரு மட்டத்தில் குறைந்த விகிதத்துடன் வளர்ச்சியை அடைவதற்கு பங்களிப்பு செய்துள்ளது.

குறைந்த வளர்ச்சி விகிதத்திலும் பிரித்தமைத்தல் தனிமைப்படுத்தல் விதியின் வினைப்படுத்துகை காரணமாக கைத்தொழிலில் போட்டி தூரிதமாக அதிகரித்தது. கூட்டு காப்புறுதியாளர்களை தனியாக ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி கம்பனிகள் என்ற போட்டியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வழிவகுத்தது. இப்பிரித்தமைத்தலின் மற்றுமொரு விளைவாக காப்புறுதி கைத்தொழிலிலுள் நிருவாச் செலவுகள் இரட்டை மயமானதன் காரணமாக அது எம்மைத் தாக்கவில்லையாயினும் செலவு கட்டமைப்பில் அதிகரிப்பை ஏற்படுத்தி இருக்கின்றது.

மற்றுமொரு முக்கிய நகர்வு யாதெனில் மோசமான காலநிலை மாற்றங்களாகும். 2016 ஆம் ஆண்டில் நாடு வெள்ளம் மற்றும் மண்சரிவுகளை பாரியளவில் எதிர்கொண்டதோடு இது காப்புறுதிக் கோரிக்கைகளை அதிகரித்து காப்புறுதி கைத்தொழிலின் முக்கிய விடயத்தில் பெரும் அழுத்தத்தைக் கொண்டு வந்தது. இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது இயற்கை அனர்த்த கோரிக்கைகளுக்கு மாத்திரம் ரூபா 600 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையை செலுத்தியது. எவ்வாறாயினும், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அடிமட்டம் தரப்படுத்தப்பட்ட மீள்காப்புறுதியாளருடனான விரிவான காப்புறுதிக் காப்பின் காரணமாக பாதிக்கப்படவில்லை.

கைத்தொழில் முக்கியத் தளங்களின் செலாற்றுகை

மொத்தமாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது 2016 ஆம் ஆண்டில் ஏனைய போட்டியாளர்களுடன் ஒப்பிடும் போது இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதான குறிகாட்டிகளினால் காட்டப்பட்டவாறு செயலாற்றுகையில் சிறப்பாக இருந்தது.

இலங்கை மத்திய வங்கியானது 2016 ஆம் ஆண்டில் காப்புறுதித் துறையின் மொத்த ஆதனங்கள் 10.9% இனால் வளர்ச்சியடைந்ததென மதிப்பிட்டதோடு, இது ரூபா 503.1 பில்லியனாக இருப்பதை மதிப்பிட்டது. ஒப்பீட்டு ரீதியில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களின் மொத்த ஆதனங்களின் வளர்ச்சி 6% சதவீதத்திலிருந்து ரூபா 177 பில்லியனைக் கொண்டிருந்ததோடு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை காப்புறுதித் துறையில் அதிகூடிய ஆதனத்தைக் கொண்டு தொழிற்பட்டு தனியான நிறுவனமாக மாற்றி அமைத்தது.

2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் கைத்தொழிலின் மொத்தப் பெறுமதியானது மொத்த எழுதப்பட்ட தவணைகளில் ரூபா 140 பில்லியனாக இருந்ததோடு இது ஆண்டுக்குப் பின் ஆண்டான 16% வளர்ச்சியொன்றாகும். இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கூட்டுமொத்த எழுத்து தவணைகள் ரூபா 28 பில்லியனை அடைந்ததோடு இது 13% வளர்ச்சியாகவும் இருக்கின்றது. கைத்தொழிலின் மொத்தத் தவணையானது பொதுக் காப்புறுதித் துறையின் தவணை வருமானத்தின் உயர் வளர்ச்சியினாலும் குறிப்பாக பொதுக் காப்புறுதி தவணையின் 66% வகைகூறுகின்ற மோட்டார் காப்புறுதியினாலும் உந்தப்பட்டதாகும்.

காப்புறுதி கைத்தொழில் முதலீட்டு வருமானங்கள் 30.4% வீதத்திலிருந்து 40.7% வீதத்தினால் 2016 ஆம் ஆண்டில் ரூபா 40.7 பில்லியனாக அதிகரித்தது. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது தொடர்ந்து வந்த வருடத்தில் 82% முதலீட்டு வருமான வளர்ச்சியொன்றை பதிவு செய்ததோடு கம்பனியின் மொத்த முதலீட்டு வருமானமானது 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 17.27 பில்லியனாக உயர்ந்தது.

வரிக்கு முன்னரான கைத்தொழில் வருமானம் அடுத்து வரும் வருடத்தில் 67.4% அதிகரித்ததோடு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது வரிக்கு முந்திய வருமானத்தின் 186.07% த்தை 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்தது.

2016 ஆம் ஆண்டின் இறுதியில் கைத்தொழிலிலின் மூலதனப் போதிய தன்மை விகிதமானது முறையே ஆயுள் மற்றும் பொது காப்புறுதிகளுக்கான துறைகளுக்கு 317% மற்றும் 192% ஆக அமைந்திருந்தது. ஒப்பீட்டளவில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மூலதன போதிய தன்மை விகிதத்தை 427% லும் 186% லும் பேணியுள்ளது. இது ஆயுள் காப்புறுதிக்கும் பொதுக் காப்புறுதிக்குமாக அமைந்துள்ளதோடு இது சாதாரண ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளைக் கொண்ட அதிகமானதொரு நிலைமையாகும். இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் மீதான வருமானம் மற்றும் பங்கிலாபங்கள் மீதான வருமானம் என்பன 2016 ஆம் ஆண்டில் 7% மற்றும் 20.24% ஆக அமைந்திருக்கின்றது. கைத்தொழிலில் இதன் சராசரிகளை ஒப்பிடும்போது ஆயுள் காப்புறுதி 2.9 ஆயுள் அல்லாத காப்புறுதி 7.3% ஆக அமைந்துள்ளதோடு ஆயுள் காப்புறுதி 25% மற்றும் ஆயுள் அல்லாத காப்புறுதி 14.5% ஆக

இணைந்த முகாமைத்துவப் பணிப்பாளரின் மீளாய்வு

முறையே காணப்படுகின்றது. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2016 ஆம் ஆண்டில் மீள் காப்புறுதி விகிதமானது 10% ஆக அமைந்துள்ளதோடு கைத்தொழில் ஆயுள் காப்புறுதி மட்டங்களில் ஒப்பிடும்போது இது ஆயுள் அல்லாத காப்புறுதிக்கு 15.7% ஆகவும் இருந்தது.

மேற்படி ஒப்பீடுகள் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுதாபனத்தின் ஸ்தீரத்தன்மையையும் பலத்தையும் எடுத்துக்காட்டுவதாக நான் நம்புகிறேன். அத்துடன் இது தேசிய காப்புறுதியாளராக இருந்து நாட்டின் பொருளாதார ஸ்தீரத் தன்மைக்கும் முழுதுமளாவிய பங்களிப்பைச் செய்கின்றது.

செயலாற்றுகை

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது 2016 ஆம் ஆண்டுக்கான அனைத்து பிரதான இலக்குகளையும் அடைவதாக இருந்ததென்பதை குறிப்பிடுவதையிட்டு நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். மேலதிக தகவல்களுக்கு நிதிசார் மேலாய்வு மற்றும் முதலீட்டு மீளாய்வினைப் பார்க்க.

இவ்வாண்டுக் காலப்பகுதியில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தற்போதுள்ள 117 கிளை நிறுவனங்கள் மற்றும் 15 சேவை நிலையங்கள் வலைப்பின்னலுக்கு எதுவித புதிய கிளைகளையோ அல்லது சேவை நிலையங்களையோ இணைக்கவில்லை. குறிப்பு முறை வளர்ச்சியானது பிரதானமாக விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்கள் மூலமே அடையப்பட்டுள்ளது. விற்பனைகள் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அனுபவமிக்க தொழில்சார் முகவர் வலைப்பின்னலாலும் நாட்டின் மிகப் பெரிய வலைப்பின்னலாக இருக்கின்ற அதனூடாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

கம்பனியின் ஐந்தொகையானது ரூபா 9.8 பில்லியன்களிலிருந்து ரூபா 176.8 பில்லியன்களாக வளர்ச்சி பெற்றிருக்கின்றது. ஆயுள் நிதியத்தின் பெறுமதியானது ரூபா 9.4 பில்லியனிலிருந்து ரூபா 87 பில்லியனாக அதிகரித்திருக்கின்றது. இது 2015 ஆம் ஆண்டிலிருந்து 12.2% வளர்ச்சி விகிதமாகும். பொதுக் காப்புறுதி அலகும் 10.73% ஆக விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது. இது ரூபா 16.5 பில்லியனை அடைவதற்கான ரூபா 1.6 பில்லியன் அதிகரிப்பாகும்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது ரூபா 151 பில்லியனுக்கு மேற்பட்ட முதலீட்டுப் பங்கைக் கொண்டிருக்கின்றது. இது சாதாரணமாக ரூபா 104 பில்லியன் ஆயுள் முதலீட்டுப் பங்கிலும் எஞ்சியவை ரூபா 47 பில்லியன் பொது முதலீட்டுப் பங்கிலும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. பொதுக் காப்புறுதிப் பங்கிலிருந்தான முதலீட்டு வருமானமானது மிகப் பெரிய ஆண்டிலே கிடைக்கப் பெற்ற பாரிய வருமானமாகக் காட்டியதோடு அதன் வருமானம் ரூபா 9.3 பில்லியனாக அதிகரித்து துணைக் கம்பனிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் இக்குப் பிரதானமாக அமையப் பெற்றது. இது லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட் மற்றும லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா (பிரைவட்) லிமிடட் கம்பனிகள் என்பவையாகும். ஆயுள் காப்புறுதி பங்கானது ரூபா 7.9 பில்லியன் முதலீட்டு வருமானமொன்றை பிறப்பித்தது.

ஆயுள் மற்றும் பொது முதலீட்டு வருமானங்களிலிருந்தான மொத்தத் தவணையின் கூட்டு மொத்த வருமானமானது 35% ஆக அதிகரித்து ரூபா 42.1 பில்லியன் என்ற இலக்கை அடைந்தது.

ஆரம்ப தொழிற்பாட்டுச் செலவுகள் ஆண்டைத் தொடர்ந்து 32% த்தினால் அதிகரித்து ரூபா 8.6 பில்லியனாகக் காணப்பட்டது.

இவ்வாண்டு காலப்பகுதியில் கம்பனியானது காப்புறுதி கொடுப்பனவாக ரூபா 14 பில்லியன் வழங்கியதோடு ஆயுள் கொள்கை வைத்திருப்போருக்கு மிகை ஊதியமாக 6.2 பில்லியனை வழங்கி ஆயுள் காப்புறுதிக் கைத்தொழிலில் மிகப் பெரிய பங்கிலாபத்தை வழங்கியது.

இலங்கைக் காப்பறுதிக் கூட்டுத்தாபனத்தின் மொத்த தொழிற்பாட்டு வரிக்கு முந்திய இலாபம் 186% த்தினால் அதிகரித்து ரூப 13.7 பில்லியனாக இருந்தது. இதில் ஆயுள் காப்புறுதி ரூபா 4.5 பில்லியனுக்கும் பொதுக்காப்புறுதி ரூபா 9.2 பில்லியனுக்கும் வகை கூறின.

வரிக்குப் பின்னரான மொத்த இலாபம் ரூபா 12.7 பில்லியனாக 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் காணப்பட்டது. இதில் ரூபா 3.8 பில்லியன் ஆயுள் காப்புறுதியினாலும் 8.9 பொதுக் காப்புறுதியினாலும் பங்களிப்பு செய்யப்பட்டிருக்கின்றன.

ஊழியர்கள்

2016 ஆம் ஆண்டு திசெம்பரில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது அனைத்து நிரந்தர ஊழியர்களுக்கும் சுமார் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 2,432 ஊழியர்களுக்கும் போதிய சம்பள அதிகரிப்பொன்றுடன் 3 வருட கூட்டு ஒப்பந்தமொன்றை புதுப்பித்தது. இந்த பொதியானது இலங்கையிலுள்ள எந்தக் காப்புறுதிக் கம்பனியிடமும் ஒப்பிட முடியாததொன்றாக இருந்தது. இந்த மாற்றங்களின் காரணமாக வருடாந்தம் முகாமைத்துவ செலவானது சுமார் 25% த்தினால் அதிகரிக்குமென நாம் மதிப்பிட்டிருக்கின்றோம். இதற்கு மேலதிகமாக நாம் பயிற்சி அபிவிருத்தி செயற்பாடுகள் போன்ற அனைத்து ஊழியர்களதும் விற்பனைப் படைகளின் நன்மைக்காக ரூபா 25 மில்லியனை முதலீடு செய்துள்ளோம்.

செயலாற்றுகை மயப்படுத்தப்பட்ட ஒரு கலாசாரமொன்றை உருவாக்குவதற்காக 2016 ஆம் ஆண்டு அனைத்து சிரேஷ்ட முகாமையாளருக்கும் ஊழியருக்குமான இலக்குடன் கூடிய செயலாற்றுகை குறிகாட்டியொன்றை நாம் விரிவு செய்தோம். இது 2017 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரவுள்ளது. கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட நன்மைகள் மற்றும் பிரதான செயலாற்றுகை குறிக்காட்டிகளின் வழிகாட்டல் 2017 ஆம் அண்டில் ஊழியர்களின் விளைதிறனை மேம்படுத்துமென நாம் எதிர்பார்க்கிறோம்.

2017 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்

காப்புறுதிக் கம்பனிகளின் வகை குறித்தலின் பின்னர் காப்புறுதிச் சந்தையானது மிகவும் சனத்தொகை கூடிய போட்டித்தன்மை மிக்கதொரு தன்மையான மாறியுள்ளது. சந்தைப் பங்குகளை

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

தக்கவைத்துக் கொள்வதற்கும் வளர்ச்சி சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது தெளிவான வளர்ச்சி உபாயமுறையொன்றை வேண்டி நிற்கின்றது.

ஆதலால் 2016 ஆம் ஆண்டில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தின் ஈடுபாட்டுடன் இணைந்து 2018 இலிருந்த 2020 ஆம் ஆண்டு வரை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டுவதற்கான 3 வருட கூட்டாண்மைத் திட்டமொன்றை வடிவமைப்பதற்கு தகவல் திரட்டல் செயன்முறையொன்று ஆரம்பிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் இந்த உபாயமுறைத் திட்டத்தை இறுதிப்படுத்தி அமுல்படுத்த நாம் எண்ணியுள்ளோம்.

இதேவேளை 2017 ஆம் ஆண்டில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் துரித வலைப்பின்னல் வழங்கல் வளர்ச்சி விஸ்தரிப்பினூடாக சந்தை ஈடுபாட்டு உபாயமுறையொன்றைப் பயன்படுத்தி புதிய பல காப்புறுதி உற்பத்திகளை அறிமுகப்படுத்தி விசேட வாடிக்கையாளர் பிரிவினருக்கான சேவைகளையும் வழங்கவுள்ளது. 2017 ஆம் ஆண்டின் நிதியாண்டினுள் தற்போதுள்ள 117 கிளைகளுக்குமாக மேலும் 40 புதிய கிளைகளை இணைப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளதோடு, அனைத்து வழங்கல் வழிமுறைகளையும் வளப்படுத்தி தற்போதுள்ள கிளைகளை புதுப்பித்து இற்றைப்படுத்துவதற்கான செயற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்வதற்கும் உத்தேசித்துள்ளோம். இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வாடிக்கையாளர் அடைவை கிளை விரிவாக்கமானது கணிசமானளவு மேம்படுத்துமென நாம் நம்புவதோடு சிறந்த கண்காணிப்பு மற்றும் கோட்பாடுகளின் சேவை வழங்கல் என்பவற்றுக்கும் நாம் வசதியளித்து வருகின்றோம்.

புதிய வருமானங்களை உருவாக்கத்தக்க புதிய உற்பத்திகளினால் 2017 ஆம் ஆண்டின் வியாபார வளர்ச்சி ஆதரவளிக்கப்படும். 2016 ஆம் ஆண்டில் புலம்பயர்ந்த ஊழியர்களுக்கான முன்னோடி காப்புறுதித் திட்டமொன்றை குவைத் நாட்டில் நாம் ஆரம்பித்ததோடு இதை வலைகுடா காப்புறுதி மற்றும் மீள் காப்புறுதி கம்பனியுடன் பங்காண்மையுடன் செயற்படுத்தினோம். இது குவைத் நாட்டின் ஆட்சிக் குடும்பத்திற்குரிதொரு கம்பனியாகும். காப்புறுதித் திட்டமானது விபத்து, மரணம், இயலாமை, சட்ட செலவு மற்றும் நாட்டுக்கு திருப்பி அனுப்புதல் சந்தர்ப்பங்களில் இலங்கை புலம்பெயர் ஊழியர்களுக்கான காப்புறுதிக் காப்பொன்றை வழங்குகின்றது. குவைத்தில் இந்த முன்னோடி கருத்திட்டம் நன்கு வரவேற்கப்பட்டமையினால் 2017 ஆம் ஆண்டினுள் மத்திய கிழக்கின் அனைத்து நாட்டினுள்ளும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை விரிவாக்குவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

இலங்கை அரசாங்கத்தின் பணிப்புரையின் பேரில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது நாட்டின் விவசாய சமுகங்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்களுக்கான விசேடத்துவமளிக்கப்பட்ட காப்புறுதிப் பொதிகளை தற்போது விருத்தி செய்து வருகின்றது. 2017 ஆம் ஆண்டில் இந்தப் புதிய கொள்கைகளை அறிமுகப்படுத்துவதற்கும் நாம் எண்ணியுள்ளோம். வினைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள மற்றமொரு உற்பத்தியாக நாட்டுக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளை உறுதிப்படுத்துவதற்காக உள்ளக சுற்றுலாக் காப்புறுதிகளையும் கொண்டுள்ளதாக அது அமையவுள்ளது. அவர்கள் மரணம், இயலாமை, சுகாதார அவசரத் தேவைகள் சார்பில் காப்புறுதி செய்யப்படவுள்ளனர்.

அடையாளங்காணப்பட்ட கைத்தொழில் குழுக்களுக்கான ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி வகுதிகளின் கீழ் குழுக்காப்புறுதிக் கொள்கைகளையும் நாம் விருத்தி செய்து வருகின்றோம். இந்த புதிய உற்பத்திகள் நாட்டின் காப்புறுதிச் சந்தையை பாரியளவு விஸ்தரிக்கும் என்பதோடு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பங்கையும் அதிகரிக்குமென நாம் நம்புகின்றோம்.

எதிர்காலத்தில் காப்புறுதிக் கைத்தொழிலில் போட்டித் தன்மைமிக்க அனுகூலங்களை உருவாக்குவதில் தொழில்நுட்பம் ஒரு பிரதான பங்கை வகிக்குமென நாம் நம்புகின்றோம். தொழில்சார் தொழில்நுட்பவியல் ஆதரவு முறைமையை பெற்றுக்கொள்வது இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு உபாய முறை ரீதியான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். திட்டமிடல் நிருவாக மற்றும் தொழிற்பாட்டு விடயங்களுக்காக புதிய SAP முறைமையொன்றின் மீது நாம் 120 மில்லியன் ரூபாக்களை முதலீடு செய்துள்ளோம். எவ்வாறாயினும், எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கான மிகவும் விரிந்த தொழில்நுட்ப தீர்வுகளுக்கான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் திட்டங்கள் 2017 ஆம் ஆண்டின் வளர்ச்சியுடன் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படுமென்பதில் நாம் நம்பிக்கையான இருக்கின்றோம்.

இறுதியாக அரச தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு, நிதி அமைச்சு போன்றவற்றின் அவற்றின் இவ்வாண்டு காலப்பகுதியில் வழங்கிய ஆதரவு மற்றும் வழிகாட்டல்களுக்கு நான் நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு, எமது நன்றியறிதல்கள் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அனைத்து ஊழியர்கள் விற்பனை படை போன்வற்றிக்கு அவற்றின் தொடரான அர்ப்பணிப்புமிக்க சேவை என்பவற்றுக்காக நன்றியதல்களை தெரிவித்துக் கொள்வதோடு அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அவர்களது தொடரான ஆதரவு என்பவற்றுக்கான எமது தாழ்மையான நன்றியறிதல்களையும் நான் இச்சந்தர்ப்பத்தல் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். புதிய நிதியாண்டிற்காக சிறந்த சேவைகளை உங்களுக்கு வழங்க நாம் எதிர்பார்க்கின்றோம்.



ரீ.எம்.ஆர். பங்சா ஜாயாஹ்
இணை முகாமைத்துவ பணிப்பாளர்

2017 மே மாதம் 25 ஆந் திகதி


நிதி மீளாய்வு

இ.கா.கூட்டுத்தாபனத்தின் பெறுமதி சேர் கூற்று


ஊழியர்கள், இடைத்தரகர்கள், அரசாங்கம், ஆயுள் காப்புறுதிவைத்திருப்போர், விரிவாக்கல் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றுக்கிடையில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பெறுமதி உருவாக்கம் எவ்வாறு பகிரப்படுகின்றது என்பதை பெறுமதிசேர் கூற்று காட்டுகின்றது.

	2016 ரூபா மில்.	2015 ரூபா மில்.	2014 ரூபா மில்.	2013 ரூபா மில்.	2012 ரூபா மில்.
தேறிய சம்பாத்தியத் தவணை	24,013	20,393	17,805	17,805	16,768
முதலீடு மற்றும் ஏனைய வருமானம்	18,094	10,763	11,497	10,176	8,875
	42,107	31,156	29,302	27,981	25,643
கழித்தல்					
தேறிய உரிமைக் கோரிக்கை மற்றும் நன்மைகள்	14,477	12,933	11,939	9,804	10,283
வெளிவாரியான சேவைகளுக்கான செலவு	2,838	1,544	3,527	2,735	2,005
பெறுமதி சேர்த்தல்	24,792	16,679	13,836	15,442	13,355
பெறுமதி சேர்த்தலுக்கான பகிர்வு					
ஊழியர்களுக்கு					
சம்பளங்கள் மற்றும் ஏனைய நன்மைகள்	3,270	3,062	2,335	2,007	1,957
இடைத்தரகர்களுக்கு					
கைக்கொள்ளல் செலவு	2,195	1,587	1,613	1,554	1,608
அரசாங்கத்திற்கு					
வருமான வரி	1,050	1,381	1,116	1,700	1,627
ஆயுள் காப்புறுதி உரிமையாளர்களுக்கு					
ஆயுள் காப்புறுதி நிதியத்தில் அதிகரிப்பு	5,198	6,840	5,376	5,109	3,733
பங்குதாரர்களுக்கு					
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	10,011	2,003	1,002	1,200	-
விரிவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும்					
தேய்மானமாக தடுத்துவைக்கப்பட்டது	338	368	138	418	193
ஒதுக்கமாக தடுத்துவைக்கப்பட்டது.	2,730	1,436	2,255	3,454	4,235
	24,792	**16,679**	**13,836**	**15,442**	**13,353**

வருமானத்தின் பரம்பல் - 2016



வருமானத்தின் பரம்பல் - 2015



வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

முழு மொத்த நிதிச் செயலாற்றுகை

2016 ஆம் ஆண்டில் ரூபா 87.35 பில்லியன் அதிகூடிய ஆயுள் காப்புறுதி நிதியத்தைக் (2015 இல் ரூபா 77.85 பில்லியன்) கொண்டதாக பங்கு உரிமையாளர்களின் நிதியம் ரூபா 62.9 பில்லியன்களை (2015 இல் ரூபா 63.67 பில்லியன்) அடைந்துள்ள அதேவேளையில், கம்பனியின் சொத்துக்கள் ரூபா 176.8 பில்லியன் (2015 இல் ரூபா166.94 பில்லியன்) வரை அதிகரித்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா 31.15 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 42.11 பில்லியன் மொத்த வருமானத்தை அடைந்துள்ளது. கடந்த ஆண்டுக் காலப்பகுதியில் பதிவாகிய ரூபா 24.52 பில்லியன் இணைந்த மொத்தத் தவணையுடன் ஒப்பிடும் போது மீளாய்வு ஆண்டில் ரூபா 27.61 பில்லியன் இணைந்த மொத்தத் தவணையை அடைந்துள்ளது.

செயற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவுகள் ரூபா 4.97 பில்லியனிலிருந்து ரூபா 6.44 பில்லியன் வரை அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 4.82 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் ரூபா 13.79 பில்லியன் வரை அடைந்துள்ள வரிவிதிப்புக்கு முன்னரான இலாபத்தில் ரூபா 8.97 பில்லியன் தெளிவான அதிகரிப்பொன்றை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பதிவுசெய்துள்ளது.

2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 3.4 பில்லியனுக்கு எதிராக 2016 ஆம் ஆண்டில் பதிவாகிய வரிவிதிப்புக்கு பின்னரான இணைந்த தேறிய இலாபம் ரூபா 12.7 பில்லியன்

கடன்தீர்க்கும் ஆற்றல் வீதம்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2015 மற்றும் 2016 ஆம் நிதியாண்டுகளில் தேவையான கடன்தீர்க்கும் எல்லைகளை/ அபாய அடிப்படை மூலதனத் தகுதி வீதாசாரமொன்றைப் பேணிவந்துள்ளது. அதன் பிரகாரம், 2016 ஆம் ஆண்டுக்காக ஆயுள் காப்புறுதி வியாபாரத்தில் 427% மூலதனத் தகுதி வீதாசாரமொன்றைப் பேணிவந்துள்ள அதேவேளையில், சாதாரண காப்புறுதி வியாபாரத்தில் 186% மூலதனத் தகுதி வீதாசாரமொன்றைப் பதிவுசெய்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் 402% ஆயுள் காப்புறுதி மூலதனத் தகுதி வீதாசாரமொன்றையும் 213% சாதாரண காப்புறுதி மூலதனத் தகுதி வீதாசாரமொன்றையும் பதிவுசெய்துள்ளது.


ஆயுள் மற்றும் சாதாரண இணைந்த காப்புறுதி வியாபாரங்களின் செயலாற்றுகை

கம்பனியின் இணைந்த மொத்தத் தவணை, 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 37% சதவீத வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்து, கடந்த ஐந்து ஆண்டுக் காலப்பகுதியில், ரூபா 20,173 மில்லியனிலிருந்து ரூபா 27,614 மில்லியன் வரை அதிகரித்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் முதலீடு மற்றும் ஏனைய வருமானங்களின் அளவு, கடந்த ஆண்டின் ரூபா 10,763 மில்லினுடன் ஒப்பிடும் போது ரூபா 18,094 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளையில், அது 68.11% சதவீத வளர்ச்சியாகும். கம்பனியானது, 2016 ஆம் ஆண்டில் வரிவிதிப்புக்கு பின்னரான இலாபத்தில் ரூபா 12,741 பில்லியன்களை பதிவுசெய்துள்ளது.


	2016 ரூபா 000	2015 ரூபா 000	2014 ரூபா 000	2013 ரூபா 000	2012 ரூபா 000
வருமானம்	42,107,761	31,156,766	29,301,980	27,980,852	25,644,316
மொத்தஎழுதப்பட்ட தவணை	27,614,433	24,520,012	20,665,985	21,350,869	20,172,623
தேறிய சம்பாத்தியத் தவணை	24,013,294	20,393,474	17,804,905	17,805,056	16,768,442
நன்மைகள், நட்டங்கள் மற்றும் செலவுகள்	(21,870,191)	(21,360,285)	(18,928,978)	(16,467,961)	(15,625,259)
முதலீடு மற்றும் ஏனைய வருமானம்	18,094,467	10,763,292	11,497,075	10,175,796	8,875,874
வட்டிச் செலவுகள்	(13)	(58)	(35)	(138)	(223)
தொழிற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவுகள்	(6,446,588)	(4,975,647)	(5,999,828)	(5,158,022)	(4,155,575)
வரிவிதிப்புக்கு முன்னரான இலாபம்	13,790,968	4,820,776	4,373,139	6,354,869	5,863,255
வரிவிதிப்பு	(1,049,651)	(1,381,420)	(1,116,126)	(1,700,039)	(1,627,413)
வரிவிதிப்புக்கு பின்னரான இலாபம்	12,741,317	3,439,356	3,257,013	4,655,174	4,235,842

நிதி மீளாய்வு

இணைந்த மொத்த எழுதப்பட்ட தவணை



இணைந்த வரிவிதிப்புக்கு பின்னரான இலாபம்



இணைந்த வரிக் கொடுப்பனவுகள்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், 2016 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கான வரியாக ரூபா 2,878 மில்லியன்களை (2015 இல் - ரூபா 4.190 மில்லியன்) பங்களிப்புச் செய்துள்ளது. இந்த வரிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

	2016 ரூபா 000	2015 ரூபா 000	2014 ரூபா 000	2013 ரூபா 000	2012 ரூபா 000
பெ.சே.வரி	1,410,186	1,205,546	1,061,272	1,186,288	1,121,183
தே.நி.வரி	337,820	62,108	252,955	267,011	258,914
வீ.பா.வரி	10,736	2,557	9,425	9,751	10,095
பொ.சே.கட்டணம்	53,817	-	-	-	-
மு.கட்டணம்	16,006	3,087	11,487	8,186	8,175
வ.வரி	1,049,650	1,381,420	1,116,126	1,700,039	1,627,413
மிகை.இலாப வரி	-	1,415,421	-	-	-
மொத்தம்	**2,878,215**	**4,190,660**	**2,451,265**	**3,171,275**	**3,025,780**

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

செயலாற்றுகை மீளாய்வு - சாதாரண காப்புறுதி

2016 ஆம் ஆண்டில் சாதாரண காப்புறுதிகளின் செயலாற்றுகை மற்றும் எதிர்கால நோக்கு


முன்னைய ஆண்டில் காணப்பட்ட 20.49% சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு சாதாரண காப்புறுதிச் சந்தையில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்கு 20.85% ஆகக் காணப்பட்டது. விலையிடல் மற்றும் விவேகமான காப்புறுதித் தொழிலின் மீது வளர்ந்து வரும் அழுத்தத்தில் சிரமத்திற்குள்ளான சாதாரண காப்புறுதிச் சந்தையில் கடும் போட்டித் தன்மையொன்றை 2016 ஆம் நிதியாண்டில் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறிருந்த போதிலும் மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரத்தில் வருடத்திற்கு வருடம் 16% வளர்ச்சியொன்றையும் மோட்டார் வாகனம் அல்லாத காப்புறுதி வியாபாரத்தில் அண்ணளவாக 5% வளர்ச்சியொன்றையும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பதிவுசெய்துள்ளது. சாதாரண காப்புறுதி வியாபாரத்தில் 2015 ஆம் ஆண்டில் 11.89% வளர்ச்சியொன்று காணப்பட்ட அதேவேளையில் இந்த ஆண்டில் ரூபா 15.7 பில்லியன் தவணைத் தொகையைப் பதிவுசெய்துள்ளது.

சாதாரண காப்புறுதி வியாபாரத்தின் செயலாற்றுகை


சாதாரண காப்புறுதி வியாபாரத்தின் மொத்தத் தவணை கடந்த ஐந்து ஆண்டுக் காலப்பகுதியில், ரூபா 12,803 மில்லியனிலிருந்து ரூபா 15,721 மில்லியன் வரை அதிகரித்துள்ள அதேவேளையில் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 22.8% சதவீத வளர்ச்சியாகும். சாதாரண காப்புறுதி வியாபாரம் 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக முதலீடு மற்றும் ஏனைய வருமானங்களின் முறையே ரூபா 9,322 மில்லியன் மற்றும் ரூபா 2,473 மில்லியன்களைப் பதிவுசெய்துள்ளது. சாதாரண காப்புறுதி வியாபாரத்திற்கான நடப்பு ஆண்டின் வரிவிதிப்புக்கு பின்னரான இலாபம் ரூபா 8,926 மில்லியன் ஆகும்.

	2016 ரூபா 000	2015 ரூபா 000	2014 ரூபா 000	2013 ரூபா 000	2012 ரூபா 000
மொத்த எழுதப்பட்ட தவணை	15,720,793	14,049,933	12,544,828	12,953,151	12,803,491
தேறிய சம்பாத்தியத் தவணை	12,333,957	10,086,240	9,820,149	9,504,974	9,487,217
உரப்பட்ட தேறிய உரிமைக்கோரிக்கை	(8,605,127)	(6,628,963)	(6,205,796)	(4,934,075)	(6,194,011)
தொழிற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவுகள்	(3,815,992)	(2,877,500)	(3,977,357)	(3,351,580)	(2,528,520)
முதலீடு மற்றும் ஏனைய வருமானம்	9,322,419	2,472,764	2,224,732	2,516,798	2,064,835
வட்டிச் செலவுகள்	(3)	(1)	(14)	(51)	(110)
வரிவிதிப்புக்கு முன்னரான இலாபம்	9,235,252	3,052,539	1,861,713	3,736,068	2,829,411
வரிவிதிப்பு	(308,911)	(538,488)	(217,101)	(803,033)	(900,971)
வரிவிதிப்புக்கு பின்னரான இலாபம்	8,926,341	2,514,051	1,644,613	2,933,034	1,928,440

மொ.எ.த. - சாதாரண காப்புறுதி வியாபாரம்



வ.பி.இ. - சாதாரண காப்புறுதி வியாபாரம்




நிதி மீளாய்வு

சாதாரண காப்புறுதி வியாபாரத்தின் உறுதிப்பாடு

ஆர்ஐஐ சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் பிரகாரம், சாதாரண மற்றும் ஆயுள் ஆகிய இரண்டு காப்புறுதி வியாபாரத்திற்கும் சிறந்த கடன்தீர்க்கும் அபாயத்தின் அடிப்படையிலான மூலதனத் தகுதி வீதமொன்றை காப்புறுதியாளர்களினால் பேணிவருவது அவசியமானதாகும். கீழே காட்டப்பட்டுள்ளவாறு கடந்த 5 ஆண்டுக் காலப்பகுதியில், சாதாரண காப்புறுதிக்காக சிறந்த கடன்தீர்க்கும் எல்லையை/ அபாயத்தின் அடிப்படையிலான மூலதனத் தகுதி வீதமொன்றை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பேணிவந்துள்ளது.

	2016 ரூபா 000	2015 ரூபா 000	2014 ரூபா 000	2013 ரூபா 000	2012 ரூபா 000
தேறிய சொத்துக்களின் பெறுமதி	46,609,083	44,581,028	45,697,972	38,909,641	30,748,097
கடன்தீர்க்கும் விகிதம்	-	3.93	3.80	4.30	3.25
மூலதனத் தகுதி வீகிதம்	186%	213%	-	-	-

தேறிய சொத்துக்களின் பெறுமதி – சாதாரண காப்புறுதி



சாதாரண காப்புறுதி வியாபாரத்தில் அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள்

	2016 ரூபா மில்.	2015 ரூபா மில்.	2014 ரூபா மில்.	2013 ரூபா மில்.	2012 ரூபா மில்.
தொழில்நுட்ப ஒதுக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள்	21,417	23,708	16,808	22,760	20,720
தோழில்நுட்ப ஒதுக்கப் பெறுமதி	14,641	13,581	11,929	11,881	12,570
தொழில்நுட்ப ஒதுக்கங்களில் அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள்	6,776	10,127	4,879	10,879	8,150

2017 ஆம் ஆண்டுக்கான திட்டம்

ஆற்றலுள்ள வாகனங்களைக் கொள்வனவு செய்வோருக்கு தற்போதைய குத்தகை நடவடிக்கைகள் குறைந்த கவர்ச்சியைக் கொண்டிருப்பதன் காரணமாக மோட்டார் வாகனக் காப்புறுதி நடவடிக்கைகளுக்கு சவால்மிக்க வருடமொன்றுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும். அதன் பிரதிபலனாக, தற்போதிருக்கும் வியாபார நடவடிக்கைகளில் சந்தைப் பங்கிற்காக சகல காப்புறுதியாளர்களும் போட்டிரீதியில் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் பெறுபேறாக விலைக்குரிய போட்டி மிகக் கடுமையான நிலைக்கு மாறக்கூடும். அதற்குப் பதிலளிக்கும் வகையில் இலாபத் தன்மையை குறைக்காமல் புதிய வாடிக்கையாளர்களைக் கவர்ந்தீர்ப்பதற்கும் தற்போதிருக்கின்ற வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் நாம் மேற்கொள்கின்ற முயற்சியின் ஒரு பகுதியாக சேவையின் தரத்தை உயர்நிலைக்குக் கொண்டுவருவதற்காக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் தனது உள்ளக நடவடிக்கைகளை மேம்படுத்தி வருகின்றது.

மோட்டார் வாகனமல்லாத வியாபார நடவடிக்கைகளைக் கவனத்திற்கொள்ளும்போது, தரப்படுத்தப்பட்ட காப்புறுதியாளர்களின் ஒத்துழைப்பு உயர்மட்டத்திலுள்ள கணக்குகளுக்காகப் பயன்படுத்தப்படும். சில்லறை வியாபார நடவடிக்கைகள் குறித்து மேலதிக கவனம் செலுத்தப்படுகின்ற அதேவேளையில் 2017 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் புதிய கிளைகள் சிலவற்றைத் திறப்பதனூடாக இதற்கான வசதிகள் செய்யப்படும்.

முழுமையாக நோக்கும் போது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2017 ஆம் ஆண்டுக்காக விசேட உயர் வளர்ச்சி எல்லையொன்றை இலக்காகக் கொண்டுள்ளது. விலைகுறித்து காணப்படுகின்ற போட்டித்தன்மையைக் குறைப்பதற்காகவும் பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள் குறித்து அதிகளவில் கவனம் செலுத்துவதற்காகவும் புதிய பங்குடைமையாளர்களுடன் உபாயத்திட்ட தொடர்புகளையும் சேவையின் தரத்தை மேம்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் ஆரோக்கியத்தின் உண்மைநிலை குறித்து கவனம்செலுத்தப்படுகின்ற அதேவேளையில் இலாபத்தன்மையைச் செயற்படுத்துவதற்காக சாதாரண காப்புறுதியின் கலப்புத்தன்மை குறித்து தீர்மானிக்கப்படும்.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

செயலாற்றுகை மீளாய்வு – ஆயுள் காப்புறுதி

2016 ஆம் ஆண்டில் ஆயுள் காப்புறுதி வியாபாரத்தின் செயலாற்றுகை மற்றும் எதிர்கால நோக்கு

2016 ஆம் ஆண்டில் ஆயுள் காப்புறுதி நடவடிக்கைகளில் மொத்தத் தவணை ரூபா 10,470 மில்லியனில் இருந்து ரூபா 11,894 மில்லியன் வரை அதிகரித்துள்ள அதேவேளை அது 2015 ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட 13.5% வளர்ச்சியாகும். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 77,858 மில்லியனிலிருந்து ரூபா 87,357 மில்லியன் வரை அதிகரித்து நடப்பாண்டில் காப்புறுதிக் கைத்தொழிலில் அதிகூடிய ஆயுள் காப்புறுதி நிதியம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் ஆயுள் காப்புறுதி நிதியத்தின் அதிகரிப்பு முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது 12.2% ஆகும்.


5 வருட காலப்பகுதியில் ஆயுள் காப்புறுதி வியாபாரத்தின் செயலாற்றுகை

ஆயுள் காப்புறுதிகளில் மொத்தத் தவணை 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் ரூபா. 7,369 மில்லியனிலிருந்து ரூபா 11,893 மில்லியன் வரை அதிகரித்துள்ள அதேவேளை, அது 61.4% வளர்ச்சியாகும். ஆயுள் காப்புறுதி நடவடிக்கைகளின் மூலம் 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முதலீடு மற்றும் ஏனைய வருமானங்கள் முறையே ரூபா 8,772 மற்றும் ரூபா 8,290 மில்லியன்களைப் பதிவுசெய்துள்ளது.


	2016 ரூபா 000	2015 ரூபா 000	2014 ரூபா 000	2013 ரூபா 000	2012 ரூபா 000
மொத்த எழுதப்பட்ட தவணை	11,893,640	10,470,079	8,121,159	8,397,718	7,369,029
தேறிய எழுதப்பட்ட தவணை	11,679,336	10,307,235	7,984,758	8,300,082	7,281,225
முதலீடு மற்றும் ஏனைய வருமானம்	8,772,049	8,290,528	9,272,341	7,659,011	6,811,040
உரப்பட்ட உரிமைக் கோரிக்கைகள்	(5,871,667)	(6,304,648)	(5,733,524)	(4,870,410)	(4,089,231)
தரகுச் செலவுகள்	(1,560,526)	(1,240,955)	(1,127,919)	(1,053,299)	(1,088,644)
முகாமைத்துவச் செலவுகள்	(3,265,087)	(2,443,685)	(2,507,813)	(2,307,020)	(2,147,076)
வரிவிதிப்புக்கு முன்னர் ஆயுள் நிதியத்தில் அதிகரிப்பு	9,754,105	8,608,479	7,887,842	7,728,364	6,767,314
வரிவிதிப்பு	(740,739)	(842,932)	(899,025)	(897,006)	(726,442)
ஆயுள் நிதியத்தில் அதிகரிப்பு	9,013,366	7,765,547	6,988,816	6,831,689	6,040,872

காப்புறுதிதாரர்களுக்கு பகிரக்கூடிய இலாபத்தை உள்ளடக்கியதாக வரிவிதிப்புக்கு முன்னரான மற்றும் வரிவிதிப்புக்கு பின்னரான இலாபங்கள் கணக்கிடப்படுகின்றன.

மொத்தத் தவணை- ஆயுள் காப்புறுதி



இலாபத்தன்மை - ஆயுள் காப்புறுதி



ஆயுள் காப்புறுதி நடவடிக்கைகளின் ஸ்திரத்தன்மை

நிதி மீளாய்வு


ஆயுள் காப்புறுதி நடவடிக்கைகளினூடாக 2016 ஆம் ஆண்டில் 427% அபாயத்தை அடிப்படையாகக்கொண்ட மூலதனத் தகுதி வீதாசாரம் மற்றும் 2015 ஆம் ஆண்டில் 402% வீதம் மூலதனத் தகுதி வீதாசாரம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 77,858 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் காப்புறுதிக் கைத்தொழிலின் அதிகூடிய காப்புறுதி நிதியமாகிய ரூபா 87,357 மில்லியன் தொகை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

	2016 ரூபா 000	2015 ரூபா 000	2014 ரூபா 000	2013 ரூபா 000	2012 ரூபா 000
ஆயுள் நிதியம்	87,357,385	77,858,383	74,706,065	66,511,606	60,084,899
தேறிய சொத்துக்களின் பெறுமதி	16,425,367	19,203,590	18,625,842	14,373,045	17,547,244
கடன் தீர்க்கும் ஆற்றல் வீதம்	-	11.56	13.22	11.48	10.14
மூலதனத் தகுதி வீதம்	427%	402%	-	-	-

ஆயுள் காப்புறுதி வியாபாரத்தில் அனுமதிக்கப்பட்ட சொத்துக்கள்

ஆயுள் நிதியத்தின் அதிகரிப்பு



2017 ஆம் ஆண்டுக்கான திட்டம்

திட்டமிடப்பட்ட கிளை விரிவாக்கத்தின் மூலம் வாடிக்கையாளர்களின் அணுகுகை ஆற்றலை அதிகரிக்கின்ற அதேவேளையில் தற்போதிருக்கின்ற மற்றும் ஆற்றலுள்ள வாடிக்கையாளர்களுக்கான வாடிக்கையாளர் சேவை உயர் நிலைக்குக் கொண்டுவரப்படும். 2017 ஆம் ஆண்டில் கம்பனியின் சந்தை பிரவேசத்தை வலுப்படுத்துவதற்காக இதன்மூலம் கம்பனிக்கு வாய்ப்புக்கள் கிடைக்கும்.

நவீனமயப்படுத்தப்பட்ட ஆயுள் காப்புறுதியை முதன்மையாகக்கொண்ட தொகுதியினூடாக மொத்த வாடிக்கையாளர்களுக்கும் மிகச் சிறந்த அனுபவத்தையும் பெறுமதியையும் வழங்குவதற்காக போட்டித்தன்மையையும் செலவு வினைத்திறனையும் அதிகரிக்கக்கூடிய விசேட உற்பத்தித்திறனையும் பெறுமதிசேர்த்தலையும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கின்றது.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

முதலீட்டு மீளாய்வு

முதலீட்டு உபாயத்திட்டம்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முதலீட்டு உபாயத்திட்டத்தின் இலக்காக இருப்பது பாதுகாப்பு, வருமானம் மற்றும் சொத்துக்களின் வளர்ச்சி பற்றிய அதிகபட்ச அளவை அண்மிப்பதாகும். இலங்கை காப்புறுதிச் சபையின் ஏற்புடையதாகும் ஒழுங்குவிதிகளுக்குள் அறிவுபூர்வமான முதலீட்டு முகாமைத்துவக் கொள்கையின் மூலம் உபாயத்திட்டத்தின் இலக்காக இருப்பது நிதியத்தின் பிணைப்பை நிறைவேற்றுவதாகும்.

முதலீட்டுக் குழு

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முதலீட்டு அளவை முகாமை செய்தல் உபாயத்திட்ட சொத்துக்களை வேறுபடுத்துதல், திருத்தியமைத்தல் மற்றும் அவதானித்தல், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வினைத்திறனுடன் சீராக்கம்செய்தல், அதேபோன்று உபாய ரீதியான முதலீட்டு வாய்ப்புக்களை பிரயோசனப்படுத்துதல் உட்பட பொறுப்புக்கள் தொடரொன்றை முதலீட்டுக் குழுவுக்கு இருக்கின்றது. குழுவானது சீஎப்ஏ நிறுவனத்தின் சொத்து முகாமையாளர்களின் விதிக்கோவையைப் பின்பற்றுகின்ற அதேவேளையில் பின்வரும் நபர்களைக்கொண்டதாகும்.


சொத்து ஒதுக்கீடு

ஆயுள் நிதியம்:

நிதியத்தின் அமைப்பு



முதலீடு செய்யக்கூடிய சொத்துக்களின் வளர்ச்சி




சாதாரண நிதியம்:

நிதியத்தின் அமைப்பு



முதலீடு செய்யக்கூடிய சொத்துக்களின் வளர்ச்சி



சொத்துக்கள் - பொறுப்புக்கள் சீராக்கம்

ஆயுள் காப்புறுதி நிதியம்

ஒப்பீட்டு ரீதியில் குறைவாக வளர்ச்சியடைந்துள்ள நிலையான வருமான பிணையங்களின் சந்தையில் ஆயுள் காப்புறுதி நிதியத்தின் காலாவதியாகும் கட்டமைப்பைச் சீராக்குதல் சவால்மிக்க பணியாகும். எவ்வாறாயினும் வருடத்தினுள் வெளியிடப்பட்ட வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட கடன்கள் குறிப்பிடத்தக்க அளவிலான எண்ணிக்கை, இந்த அபாயம் குறிப்பிடத்தக்க அளவிற்கு மிதமான போக்கை அடைவதற்கு துணைபுரிந்தது. நன்கொடையளிக்கப்பட்ட வருமானம் வரியை நீக்கிய நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்பட்டதன்

முதலீட்டு மீளாய்வு

காரணமாக இந்த வெளியீடுகள் பெரும்பாலும் அதிகூடிய பங்களிப்பைப் பெற்றது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வருடத்தினுள் 03 வருடத்திலிருந்து 10 வருடங்கள் வரையான காலாவதியைக்கொண்ட பட்டியலிடப்பட்ட பங்கிலாபங்களில் ரூபா 5.5 பில்லியன் முதலீட்டைச் செய்துள்ளது.

பல வியாபாரக் கம்பனிகள் இந்த வழிகளினூடாக நிதியங்களைச் சம்பாதிக்க விரும்புகின்றபடியினால் முன்வரும் வருடத்தில் பட்டியலிடப்பட்ட பங்கிலாபங்கள் பாரிய அளவில் வெளியிடப்படும் போக்குகள் காணப்படுகின்றன.

திறைசேரி முறிகளிலும் திறைசேரி உண்டியல்களிலும் தேறிய முதலீடு வருடத்தினுள் ரூபா 11.0 பில்லியன் வரை அண்மித்துள்ள அதேவேளையில் அவற்றின் காலாவதி 19 வருடங்கள் வரை விரிவடைந்தது. ஆயுள் காப்புறுதி நிதியத்தின் சொத்துக்கள் - பொறுப்புக்கள் சீராக்கமின்மையை மேலும் குறைத்துக்கொள்ளும் பொருட்டு 2017 ஆம் ஆண்டிலும் மிகவும் நீண்டகால முறிகளில் முதலீடு செய்வதற்கு கம்பனிகள் எதிர்பார்க்கின்றன.

சாதாரண நிதியம்

ஆயுள் காப்புறுதி நிதியம் சொத்துக்கள் போன்றல்லாது சாதாரண நிதியத்தின் பொறுப்புக்கள், இயற்கையாகவே குறுகிய காலமாக இருக்கின்ற அதேவேளையில் அதனால் நிதியத்தின் கூடுதலான ஒரு பகுதி குறுகியகால சொத்துக்களில் முதலீடு செய்யப்படுகின்றது.


முதலீட்டு செயலாற்றுகை

தேவையற்ற அபாயங்களைத் தவிர்த்து அறிவுபூர்வமாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் முதலீட்டு முகாமைத்துவ பொறிமுறையின்கீழ் ஆயுள் மற்றும் சாதாரண ஆகிய இரண்டு விதத்திலும் நிதியத்திற்காக போதியளவான இலாபத்தை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2016 ஆம் ஆண்டில் சம்பாதித்துள்ளது. வீழ்ச்சியடைகின்ற சாதாரண பங்குச்சந்தையும் வீழ்ச்சியடையும் வட்டிவீதமும் காணப்பட்ட சூழலில் இவ்வாறான செயலாற்றுகை ஒன்றைப் பெற்றுக்கொள்வதும் போற்றத்தக்கதாகும்.

கம்பனியானது, வருடத்தினுள் ரூபா 17.3 பில்லியன் மொத்த முதலீட்டு வருமானமொன்றைப் பதிவுசெய்துள்ளது.

ஆயுள் நிதியம்:


முதலீட்டு வருமானம்



2016 ஆம் அண்டில் ரூபா 7.95 பில்லியன் சிறந்த முதலீட்டு வருமானமொன்றைப் ஆயுள் நிதியம் பதிவுசெய்துள்ள அதேவேளையில். அது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 4.7% சதவீத வளர்ச்சியாகும்.

சாதாரண நிதியம்:

முதலீட்டு வருமானம்



2016 ஆம் ஆண்டில் சாதாரண நிதியத்தினால் ரூபா 8.72 பில்லியன் முதலீட்டு வருமானம் பதிவுசெய்யப்பட்டுள்ள அதேவேளையில், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 380.3% பாரிய வளர்ச்சியாகும். எவ்வாறாயினும் லிட்ரோ கேஸ் லங்கா லிமிட்டட் மற்றும் லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா (ப்ரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றிடமிருந்து கிடைத்த ரூபா 6,750 மில்லியன் அதிவிசேட பங்கிலாப வருமானம் இதில் உள்ளடங்குகின்றது.

முதலீடுகளின் சுருக்கம்:

கம்பனி	2016 ரூபா 000	2015 ரூபா 000	2014 ரூபா 000	2013 ரூபா 000	2012 ரூபா 000
செலவில்					
பட்டியற் படுத்தப்பட்ட துணைக் கம்பனிகள்	2,925,567	2,925,567	2,925,567	2,925,567	2,925,567
பட்டியற் படுத்தப்படாததுணைக் கம்பனிகள்	18,160,337	18,160,337	18,160,337	14,660,337	13,790,250
தேறிய சொத்துப் பெறுமதியில					
இணைக்கம்பனிகள்	138,448	128,090	122,425	105,727	71,697
விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளவை					
பட்டியற் படுத்தப்பட்ட பங்குகள்	30,914,016	31,894,168	35,711,339	24,798,653	22,423,654
பட்டியற் படுத்தப்படாத பங்குகள்	47,972	20,754	20,832	18,753	18,884
அலகுப் பொறுப்புக்கள்	964,320	1,043,587	1,146,236	1,426,408	1,437,209
பட்டியற் படுத்தப்பட்டபங்கிலாபங்கள்	19,566,031	15,228,277	11,880,406	7,190,339	3,424,049
திறைசேரி உண்டியல்கள்	-	-	-	483,700	-
திறைசேரி முறிகள்	4,062,844	5,119,315	4,387,187	5,418,642	11,144,843
இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சராசரிப் பெறுமதி					
பட்டியற் படுத்தப்பட்டபங்குகள்	5,320,606	6,756,655	5,538,348	5,956,726	10,953,886
முதிர்வுக்காக வைக்கப்பட்டுள்ளவை					
திறைசேரி உண்டியல்கள்	-	488,795	487,576	-	969,775
திறைசேரி முறிகள்	49,313,553	38,475,744	25,589,291	19,324,293	14,402,918
கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டியவைகள்					
பட்டியற் படுத்தப்படாத பங்கிலாபங்கள்	500,534	541,717	1,367,205	1,890,781	2,274,245
தவணை வைப்புக்கள்	12,336,280	17,309,842	27,945,442	22,864,910	16,290,231
அபிவிருத்தி முறிகள்	7,158,558	6,815,995	2,428,326	5,254,857	5,106,038
வர்த்தகப் பத்திரங்கள்	-	-	-	-	206,807
நம்பிக்கைச் சான்றிதழ்கள்	-	-	-	37,481	60,767
ஒதுக்கி வைத்தவை	1,035,996	2,629,107	5,130,628	12,530,569	7,852,673
மொத்தம்	**152,445,063**	**147,537,950**	**142,841,145**	**124,887,745**	**113,353,493**

முதலீட்டு அபாய முகாமைத்துவம்

முதலீட்டு அபாயம் என்பது எதிர்பாராத பொருள்கோடலின் மூலம் முதலீட்டு நன்மைகளுக்கு அமைவாக முதலீட்டு அளவில் ஏதேனும் நட்டமொன்று ஏற்படும் அபாயம் அல்லது ஒப்பீட்டு பொருள்கோடலில் பரிந்துரைசெய்யப்பட்ட அளவீடு அல்லது மாற்று முதலீட்டின் அளவிலும்பார்க்க பாரிய நட்டம் ஏற்படும் அபாயம் அல்லது மேற்சொன்ன அளவிலும் பார்க்க குறைந்த இலாபத்தைச் சம்பாதித்தல்.

சொத்து நன்மைகளில் அதிகூடிய ஸ்திரமற்றநிலை சந்தை பற்றிய உணர்வு மற்றும் அபிப்பிராயத்தில் அதிகூடிய இடைத்தொடர்பு மற்றும் விரிவான பரப்பீடு காரணமாக வீழ்ச்சியடைந்த பல்வகைப்படுத்தப்பட்ட நன்மைகளை எடுத்துக்காட்டுகின்ற தற்போதிருக்கின்ற குழப்பமான சந்தையினுள் முதலீட்டு அபாய முகாமைத்துவம் முக்கியத்துவத்தைக் கொண்டதாகும்.

முதலீட்டு குறிக்கோள்களை அடைந்துகொள்வதில் தாக்கம்செலுத்துகின்ற அபாயங்களை உடனடியாக அடையாளம் காணுதல், அளவீட்டுக்கு உட்படுத்துதல், முகாமைத்துவம், அறிக்கையிடுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பன இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அபாய முகாமைத்துவத்தின் நோக்கமாகும். இலங்கை காப்புறுதிச் சபையின் தொடர்புடைய காப்புறுதி ஒழுங்குவிதிகளின் சூழ்நிலையில் காப்புறுதி முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு நிதியத்தின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக சொத்துக்களின் வளர்ச்சிக்கும் வருமானத்திற்கும் இடையில் பொருத்தமான சமநிலையொன்றைப் பேணுவதற்காக அபாயநிலையைப் பெறுதல், தவிர்த்துக்கொள்ளுதல், இலகுபடுத்துதல் மற்றும் பொருத்தமான விதத்தில் தயாரித்துக்கொள்ளுதல் இந்த நோக்கங்களில் உள்ளடங்கியுள்ளது.

வட்டிவீத அபாயம்


அபாயமில்லாத வட்டிவீதம் வினைத்திறன் சக்கரத்தினுள் கடன் விரிவடையும் அளவு அல்லது ஸ்திரமற்ற நிலையினால் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஆகியவற்றின் காரணமாக சொத்து மற்றும் பொறுப்புக்களின் பெறுமதிகளில் உணர்வுத்தன்மையை கடன் விரிவடையும் அபாயம் தெளிவுபடுத்தப்படுகின்ற அதேவேளையில் வினைத்திறன் சக்கரங்களின் வடிவிலுள்ள வேறுபாடுகள் உட்பட வட்டிவீதத்தில் ஏற்படுகின்ற வேறுபாடுகளின் பிரதிபலனாக ஏற்படுகின்ற நட்ட அபாயம் வட்டி வீத அபாயமாகும்.

ஒவ்வொரு முதிர்வடையும் அளவுகள் மற்றும் அபாய எல்லைகளைக்கொண்ட ஒன்றுதிரண்ட நிலைமைகளுக்கு இணங்குவதன் அடிப்படையில் வட்டி வீதாசார அபாயம் முகாமைசெய்யப்படுகின்றது.


ஆண்டின் இறுதியில் இலங்கை மத்திய வங்கியினால் தனது நிலையான வைப்பு வசதிகளின் வீதாசாரத்தையும் நிலையான கடன் வசதிகளின் வீதத்தையும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.00% மற்றும் 8.50% வரை அடைவதற்காக இரண்டு முறை அதிகரிக்கப்பட்டது.

அதன் பிரகாரம், திறைசேரி உண்டியல்களின் விகிதாசாரம் செப்டம்பர் மாதத்தில் மெதுவாக வீழ்ச்சயடைதல் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆகஸ்ட் மாத இறுதி வரையில் அதிகரிக்கும் போக்கு காணப்பட்டது. எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதிகள் மற்றும் ஏனைய வெளிநாட்டு நிதிகள் நாட்டினுள் உட்பாய்ந்ததைத் தொடர்ந்து செலாவணி வீதத்தின் அடிப்படையிலான அழுத்தம் தளர்வடையும் என எதிர்பார்க்கப்பட்ட அதேவேளையில், வட்டி வீதம் ஸ்திரநிலையை அடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

1 வருட திறைசேரி உண்டியல் வீதம்



புள்ளிக்குப் புள்ளி மற்றும் வருடாந்த சராசரித் தகவல் (%)



ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் வருமானத்தைச் சம்பாதிக்கின்ற நீண்டகால நிலையான வருமானப் பத்திரங்களின் குறைபாடு மற்றும் அபாயத்தின் மூலம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் காலஎல்லையில் ஆயுள் நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்படாது கொண்டுவரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த நிலையைப் பகுப்பாய்வு செய்து கவர்ச்சிகரமான இலாபத்தைச் சம்பாதிப்பவர்களும் சீராக்கம் செய்யப்படாத காலஎல்லையில் நெருங்கியதாக மேற்பார்வை செய்து வருமானத்தின் அடிப்படையில் வட்டிக்கு உள்ள அழுத்தத்தை இலகுபடுத்தி ஒருசில நீண்டகால காரணிப் பத்திரங்களில் முதலீடு செய்வதன் மூலம் நிலையான வருமான முதலீட்டின் காலஎல்லை குழுவொன்றினால் ஏக காலத்தில் நீடிக்கப்பட்டது.

மேலும் இந்த சகல பிரிவுகளையும் உள்ளடக்கியதாக விரிவான சொத்துக்கள், பொறுப்புக்கள் முகாமைத்துவக் கொள்கையொன்றை ஏற்படுத்துவதற்கு கம்பனியினால் ஏற்கனவே ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.


வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

முதிர்வுத் தோற்றம்
ஆயுள் நிதியம்:



< 1 வருடம்	17.73%
1 - 2 வருடங்கள்	24.74%
2 - 5 வருடங்கள்	14.93%
5 - 10 வருடங்கள்	19.99%
> 10 வருடங்கள்	22.62%

முதிர்வுத் தோற்றம்
சாதாரண நிதியம்



< 1 வருடம்	35.21%
1 - 2 வருடங்கள்	35.88%
2 - 5 வருடங்கள்	28.90%


சந்தை அபாயம்

பங்கு விலைகளின் நிலையற்றதன்மையின் காரணமாக பங்கு முதலீடுகளில் ஏற்படுகின்ற அபாயம் சந்தை அபாயமாகும். பல்வேறு துறைகளினதும் கம்பனிகளினதும் பங்கு முதலீடுகளை பல்வகைப்படுத்துவதன் மூலம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சந்தை அபாயத்தைக் குறைத்துக்கொண்டுள்ளது.


உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் காணப்பட்ட சவால்மிக்க பொருளாதார நிலைமைகளின் பெறுபேறாக பங்கு முதலீட்டின் வீழ்ச்சி நூற்றுக்கு 9.66% வீதத்தினால் விரிவடைந்தது. எவ்வாறாயினும் ஒருசில பிரதான நடவடிக்கைகளில் நியமிக்கப்பட்ட விலைகள் கவர்ச்சிகரமானதாக இருந்தபடியினால் அதற்கடுத்த காலாண்டில் பங்கு விலைகள் அதிகரித்தமை தொடர்பில் எதிர்பார்ப்புகள் தற்பொழுதும் காணப்படுகின்றது. பங்குகளில் முதலீடு செய்வதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்ந்திருக்கின்ற தொகையின் அளவு தேய்மானமடைந்ததன் மூலம் இந்நிலை தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நிலையான சந்தை நன்மைகள் மற்றும் நடுத்தரகால மூலதன சம்பாத்தியம் ஆகியவற்றுக்கான சாத்தியத்தின் மூலம் கவரப்பட்டுள்ள இந்த முதலீடுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் பாய்ந்து வந்தபடியினால் பிரதானமாக வலுவான முதலீடாக இருக்கின்றது.

2016 நிதியாண்டின் ஏஎஸ்பீஐ அசைவுகள்




துறைசார் ஒதுக்கீடு – பட்டியல்படுத்தப்பட்ட உரிமைப்பங்கு ஆயுள் நிதியம்



நிதி	76.08%
நுகர்வோர் விருப்பம்	6.58%
கைத்தொழில்	6.52%
சுகாதாரப் பாதுகாப்பு	5.90%
தொடர்பாடல் சேவைகள்	2.66%
சாதனம்	1.31%
நுகர்வோர் விருப்பம்	0.58%
உண்மைச் சொத்து	0.28%
சக்தி	0.00%
தகவல் தொழில்நுட்பம்	0.00%

* இ.கா. கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியாகிய லங்கா ஹொஸ்பிட்டல் கோப்பரேஷன் பீஎல்சீ உட்பட

துறைசார் ஒதுக்கீடு – பட்டியல்படுத்தப்பட்ட உரிமைப்பங்கு சாதாரண நிதியம்



நிதி	83.02%
சுகாதாரப் பாதுகாப்பு	10.84%
கைத்தொழில்	4.44%
சாதனம்	1.08%
தொடர்பாடல் சேவைகள்	0.51%
நுகர்வோர் விருப்பம்	0.11%
சக்தி	0.00%

* இ.கா. கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியாகிய லங்கா ஹொஸ்பிட்டல் கோப்பரேஷன் பீஎல்சீ உட்பட

முதலீட்டு அபாய முகாமைத்துவம்

கடன் அபாயம் மற்றும் கடன்குவிதல் அபாயம்

கடன் அபாயம் என்பது வாடிக்கையாளர்கள் தமது நிதிப் பிணைப்பை மேற்கொள்வதற்கு முடியாதுபோவதன் காரணமாக ஏற்படுகின்ற நட்டம் அல்லது ஏற்படுகின்ற அல்லது ஏற்படக்கூடிய நட்டமாகும்.

அபாயத்தின் தரம், கைத்தொழில், காலாவதியாகுதல் மற்றும் பாரிய வெளிப்படுத்தலுக்கு அமைவாக உறுதிப்பாட்டை வரையறுத்து முதலீட்டின் அளவை சமப்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு கடனாளிகளின் மட்டத்திலும் முதலீட்டு அளவின் மட்டத்திலும் கடன் அபாயத்தை மேற்பார்வை செய்து முகாமை செய்யப்படுகின்றது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் தனி வெளியீட்டாளர்களினதும் உறுதியான சொத்து குழுமத்தின் மூலம், அதேபோன்று திரவத்தன்மையான துறைகளின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற முதலீடுகளின் எல்லைகளை வரையறுப்பதற்கு தனது எல்லையை விதித்துள்ளது.

- அதிகாரம்பெற்ற வணிக வங்கிகளும் அதிகாரம்பெற்ற விசேட வங்கிகளும் தவிர்ந்த தவணை வைப்புகனின் மூலம் எந்தவொரு முதலீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- கூட்டுறவுப் பங்கிலாபங்கள் மற்றும் வணிக பத்திரங்களில் சகல முதலீட்டாளர்களுக்காகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் வகைப்படுத்தல் நிறுவனமொன்றின் மூலம் வெளியிடப்படுகின்ற நிறுவன மற்றும் வெளியீடு ஆகிய இரண்டிற்கும் முதலீட்டு மட்டத்தில் கடன் வகைப்படுத்தலொன்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- தொடர்புடைய எந்தவொரு கம்பனியிலம் கடன் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- கடன் பிணையமொன்றில் ஏதேனும் முதலீடொன்றை மேற்கொள்வதற்கு முன்னர் விபரமான கடன் பகுப்பாய்வொன்றை உள்ளகரீதியில் மேற்கொள்ளப்படுகின்றது.

திரவத்தன்மையான அபாயமாகும்

கம்பனிக்கு தனது பிணைப்பைச் செலுத்துவதற்கு விதிக்கப்படுகின்ற போது அதனைச் செலுத்துவதற்காக போதியளவான பணம் அந்தக் கம்பனியிடம் இல்லாதிருப்பின் அல்லது அவ்வாறு செலுத்துவதற்கு அதிக செலவுகளை மேற்கொள்ளவேண்டி ஏற்படுகின்றமை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் முகங்கொடுக்கப்படுகின்ற அபாயம் திரவத்தன்மையான அபாயமாகும்.

ஆயுள் காப்புறுதி நிதியம்

சம்பிரதாய ரீதியில் இந்த நிதியத்திற்கு திரவத்தன்மை அவசியமானதாகும். தவணை வருமானத்தின் மூலமும் ஏனைய வழிகளின் மூலமும் வருடாந்தம் நிதி உட்பாய்வது நிதி வெளிப்பாய்வதைவிட தாண்டியுள்ளது. வியாபார வளர்ச்சியின் அளவு, பொறுப்புக்களின் நீண்டகாலதன்மை, சொத்துக்கள் காலாவதியாகும் போது மீண்டும் முதலீடு செய்தல் மற்றும் ஏனைய விதத்தில் மூலதனத்தை செலுத்துதல் போன்றவை இதன் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

எவ்வாறாயினும், அடுத்த சில வருடங்களினுள் நிதியத்தின் கொள்கை காலாவதியாகும் சக்கரத்தில் புதிய படிமுறையொன்றை பிரிதிநிதித்துவப்படுத்துகின்ற சாதாரண அளவிலும்பார்க்க கூடுதலான அளவைக்கொண்ட காப்புறுதி மற்றும் காப்பீட்டுக் காலாவதியடைதல் மற்றும் நிதி வெளிப்பாய்வது எதிர்பார்க்கப்படுகின்றது.

காப்புறுதிக் காப்பீடு காலாவதிக்கு இணையாக இந்த எதிர்பார்க்கப்படுகின்ற விசேட நிதி வெளிப்பாய்வதனை சீராக்கம் செய்வதற்கு திறைசேரி முறிகளைப் பயன்படுத்த முடியும்.

காப்புறுதி காப்பீடுகள் தொடர்பான இணைப்பு வரிகளுக்காக இணைப்பு மற்றும் முதலீட்டு தேவைகளை முழுமையாக நிறைவேற்றுவதற்காக அடைந்துகொள்வதற்காக குறுகியகால வேறுபடுத்தலினுள் சுமார் ரூபா 850 மில்லியனுக்கு அதிகமான திரவத்தன்மையைக் கொண்ட நிதியளிப்பை உள்ளடக்கியுள்ளது.

சாதாரண காப்புறுதி நிதியம்

நிதி வெளிப்பாயும் நிச்சயமற்றதன்மையின் காரணமாக திரவத்தன்மை சாதாரண காப்புறுதி நிதியத்திற்கு முக்கியமானதாகக் காணப்படுகின்றது. அவசர திரவத்தன்மை ஒதுக்கமாக குறுகியகால பிணையப்பத்திரத்தின் அளவைப் பெணுவது நிதியத்திற்கு முக்கியமானதாகும்.

அதேபோன்று நிதியத்தினால் தவணை நிதிப்பாய்ச்சல் தேவைப்பாடு (பொருத்தமான விதத்தில்) சொத்துக்கள் காலாவதியாவதை சீராக்கம்செய்து பல்வேறு கால இடைவெளிகளில் காலாவதியாகின்ற அட்டவணையைக்கொண்டதாக இலகுவாக விற்பனை செய்யக்கூடிய திறைசேரி முறிகளின் அளவும் பேணப்பட்டு வருகின்றது.

செயற்பாட்டு அபாயம்

செயற்பாட்டு அபாயம் என்பது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மக்கள், செயன்முறைகள் மற்றும் தொகுதி சார்ந்த அபாயமாகும்.

சகல செயற்பாட்டு அவதானமும் அபாயமாயினும் திறைசேரி சொத்து முகாமைத்துவ மென்பொருள் மொடியுள் நடைமுறைப்படுத்துவதன் மூலம் செயற்பாட்டு அபாயம் நீக்கப்பட்டுள்ளது.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

செயற்பாட்டு மீளாய்வு

2016 ஆம் ஆண்டில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் உபாயத்திட்ட நிறுவனரீதியான நோக்கம் ஆயுள் மற்றும் சாதாரண காப்புறுதி தொகுதிகள் இரண்டிலும் சந்தையில் முன்னணியாளராகத் திகழ்தல்.

மாற்றமடைந்துவருகின்ற போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் உபாயத்திட்ட தீர்மானங்கள் பலவற்றுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது. ஆயுள் மற்றும் சாதாரண காப்புறுதி ஆகிய இரண்டு பிரிவிலும் 01 ஆம் இடத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சந்தைப் பங்குகளை மீண்டும் அடைந்துகொள்வது அதன் நோக்கமாகும்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வலையமைப்பு

2016 ஆம் ஆண்டின் இறுதியில் நாடுபூராகவும் விரிவடைந்து சென்ற 117 கிளைகளை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கிளை வலையமைப்பைக் கொண்டுள்ளது. மீளாய்வு வருடத்தில் புதிய கிளைகள் திறக்கப்படவில்லை. எவ்வாறாயினும், நாட்டினுள் சகல பிரதான உபாயத்திட்ட இடங்கள் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானதாகும். தயவுசெய்து அறிக்கையிடுகின்ற திகதியில் கிளைகள் பற்றிய முழுமையான பட்டியலை உள்ளடக்கியதாக 236 இலிருந்து 245 வரையான பக்கங்களிலுள்ள கிளைகளின் பட்டியலைப் பார்க்க.

கிளை வலையமைப்புக்கு மேலதிகமாக, 15 சேவை நிலையங்கள், மோட்டார் வாகன காப்புறுதி உரிமை நிலையத்திற்காக ஒதுக்கப்பட்ட கண்டியில் அமைந்துள்ள கிளை, 2,600 அளவிலான செயலார்ந்த பிரதிநிதித்துவ செயலணி, சந்தைப்படுத்தல் நிறைவேற்றுனர் மற்றும் 235 கிளை உத்தியோகத்தர்கள் அதேபோன்று 56 தரகர்களையும் 2016.12.31 ஆம் திகதியில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கிளை வலையமைப்பு உள்ளடக்கியுள்ளது.

3 - வருட நிறுவன உபாயத்திட்டம்

வளர்ச்சியடையும் உபாயத்திட்ட பிரிவுகளில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப தீர்வினுள் உள்ள முதலீடு, கிளை வலையமைப்பின் விரிவாக்கத்தினூடாக சந்தை அணுகுகை, புதிய விசேட காப்புறுதித் திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் அடையாளம் காணுதல், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் மற்றும் பதவியணி ஆகியவற்றுக்காக மேம்படுத்தப்பட்ட செயலாற்றுகை சுட்டியொன்று உள்ளடங்கியுள்ளது.

தரச் சான்றிதழ்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தரமான கொள்கைகள்

ஒவ்வொரு திணைக்களத்திற்கும் கிளைகளுக்கும் காட்சிப்படுத்தப்பட்டுவருகின்ற தரமான கொள்கையினுள் கம்பனியின் கொள்கைகள் தெளிவாக பிரதிபலிக்கின்றன. தரமான கொள்கை வரைசட்டகத்தினுள் தனது நடவடிக்கைகளை பதவியினரால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை சிரேட்ட முகாமையாளர்கள் சான்றுப்படுத்துகின்றனர்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சர்வதேச தரநிர்ணய அமைப்பில் சான்றிதழ்பெற்ற நிறுவனம் என்பதைப் பெருமையுடன் அறிவிக்கின்றது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2009 ஆம் ஆண்டில் ஐஎஸ்ஓ சான்றிதழைப் பெற்றுள்ள அதேவேளையில் ஒவ்வொரு 3 வருடங்களுக்கும் ஒருமுறை அதனைப் புதுப்பிக்கின்றது. தற்போது காணப்படுகின்ற சான்றிதழ் 2017 நவம்பர் மாதம் வரை செல்லுபடியாகின்ற அதேவேளை அதன்பின்னர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஐஎஸ்ஓ 9001:2015 புதிய வெளியீடு மாற்றமடையும்.

இந்தச் சான்றிதழ், ஆயுள் மற்றும் ஆயுள் அல்லாத மீள்காப்புறுதி, உரிமைப் பங்குகளைச் செலுத்துதல் மற்றும் தலைமை அலுவலகத்தினதும் அதன் கிளைகளினதும் உதவிச் சேவைகளை உள்ளடக்குகின்றது. சகல திணைக்களங்களுக்கும் நிறுவனரீதியான நோக்கத்துடன் ஒன்றாகப் பயணிக்கின்ற தனக்குரிய நோக்கம் காணப்படுகின்றது.

நுகர்வோர் பாதுகாப்பு ஐஎஸ்ஓ முறைமையினுள் செயற்படுத்தப்படுகின்றது. நுகர்வோர் முறைப்பாடுகள் ஆவணப்படுத்தப்படுகின்ற அதேவேளையில் தலைமை அலுவலகத்திலுள்ள சகல திணைக்களங்களிலிருந்தும் கிளைகளிலிருந்தும் அது சம்பந்தமான வினைத்திறன்மிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பின்னூட்டல்களைப் பெற்றுக்கொள்வதற்காக வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தக்கூடிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உள்ளக வலையமைப்பில் பதவியினருக்காக சகல நடவடிக்கைமுறை வழிகாட்டிகளும் மாதிரிகளும் வழங்கப்பட்டுள்ளன.

செயற்பாட்டு மீளாய்வு

சாதாரண காப்புறுதி செயற்பாட்டு மீளாய்வு – 2016

சாதாரண காப்புறுதி வகுதி இரண்டு பிரதான உபாயத்திட்ட வியாபார அலகுகளை உள்ளடக்கியுள்ளது. அவை 'மோட்டார் வாகன' மற்றும் 'மோட்டார் வாகனமல்லாத' என்பதாகும். இந்த இரண்டு வகுதிகளும் பல்வேறு பண்பியல்புகளைக் கொண்டதாகும். அதனால் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சாதாரண காப்புறுதி உபாயத்திட்ட திட்டமிடல் மோட்டார் வாகன மற்றும் மோட்டார் வாகனமல்லாத ஆகிய இரண்டுக்கும் வெவ்வேறாக கவனத்தைச் செலுத்துகின்றது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சாதாரண காப்புறுதி விற்பனை உபாயத்திட்டம்

2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ஒட்டுமொத்த சாதாரண காப்புறுதி சந்தைப்படுத்தல் உபாயத்திட்டம் பின்வரும் உபாயத்திட்ட வழிகள் குறித்து கவனம்செலுத்தி மேம்படுத்தியுள்ளது.

- போட்டிக்குரிய உபாயத்திட்டம்
- வளர்ச்சி உபாயத்திட்டம்
- சந்தைப்படுத்தல் தொடர்பாடல் உபாயத்திட்டம்
- புத்தாக்க உபாயத்திட்டம்

மோட்டார் ப்ளஸ் விருது 2009 ஆம் ஆண்டில் தேசியமயமாக்கப்பட்டதற்குப் பின்னர் அது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதைத் "தேசிய மோட்டார் காப்புறுதி விருது" எனத் தாபிக்கப்பட்டது.

மோட்டார் அல்லாத வாகனங்களுக்காக இலகுபடுத்தப்பட்ட ஒழுங்குவிதிகளையும் பிரபலமான போட்டித்தன்மையையும் கொண்டதாக நிறுவனரீதியான காப்புறுதித்திட்டத்தை முகாமைசெய்தல் தற்போதுள்ள விற்பனை நியதிகளின் கீழ் இனியும் போட்டித்தன்மைக்கு போதுமானதல்ல. அதனால் தொடர்ந்தும் நிறுவனரீதியான வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்தி அடுத்துவரும் 3 வருட காலப்பகுதியில் சில்லறைச் சந்தையை மேம்படுத்துவதற்காக பிரதானமாகக் கவனம் செலுத்தப்படும்.

பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி

சாதாரண காப்புறுதியின் பொருட்டு வெற்றிகரமான விற்பனைகளுக்காகவும் உயர்மட்ட பயிற்சியளித்தலுக்காகவும் போட்டிக்குரிய நடைமுறைகளையும்கொண்ட அறிவினை மேம்படுத்துவதன் மூலம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது பிரதான நடவடிக்கையாகும். மிக நன்றாக கட்டமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி மாதிரிகள் இவ்வாறு கவனம்செலுத்தப்பட்ட பிரிவுகளில் தொடர்ச்சியாக இற்றைப்படுத்துவதனை மேற்கொண்டு நிர்மாணித்து செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சாதாரண காப்புறுதி பயிற்சியளிக்கும் குழுவினால் வருடத்தினுள் ஊக்கப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட தலைமைத்துவ மற்றும் விற்பனை முகாமத்துவ அபிவிருத்தி குறித்தும் கவனம்செலுத்தப்படும்.

மீள்காப்புறுதி

நிதிரீதியாக நிலையான மீள்காப்புறுதியாளர்களுக்கு உரிமைகளை அறவிட்டுக்கொள்ளும் போது தன்னுடன் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற காப்புறுதியாளர்கள் குறித்து பாரிய நேரடியான தாக்கமொன்றை ஏற்படுத்த முடியும். அதனால், உலகளாவிய ரீதியில் உயர் பதவிகளை வகிக்கக்கூடிய ஒப்பந்தம் செய்யப்பட்ட முக்கியஸ்தர்களாகிய உயர் நிதி தரப்படுத்தலைக்கொண்ட மீள்காப்புறுதியாளர்களுடன் எமது மீள்காப்புறுதி நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

நுகர்வோர் பாதுகாப்புச் சேவையை மேம்படுத்துதல்

வாடிக்கையாளர்களுக்கு மிகவும் சிறந்ததும் மிக அவசரமானதுமான சேவையை வழங்குவதற்காக திடீர் விபத்து சேதங்களை பரிசீலனை செய்கின்ற மோட்டார் வாகனத் திணைக்களத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது சுகாதார உரிமைக் கோரிக்கைகளைக் கூட்டிணைப்பவர்களுக்கும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் 132 சுசுகி மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டுள்ளன.

சந்தை அடிப்படையிலான அணுகுகை

கம்பனியின் வர்த்தக முன்னெடுப்புகள் 2016 ஆம் ஆண்டில் உயர்மட்டத்தில் காணப்பட்டது என்பதையும் உறுதிப்படுத்துவதற்காக தெளிவான விற்பனை உபாயத்திட்டங்கள் பயன்படுத்தப்பட்டன. வலுவான வியாபார நடவடிக்கைகளை முன்கொண்டுசெல்வதற்குக் காரணமாக அமைந்த அவ்வாறான பல நடவடிக்கைகளைக் கொண்டதாக மிகத் தெளிவான விதத்தில் பாரிய சந்தையில் பிரவேசிப்பதற்காக அந்த உபாயத் திட்டங்களின் மூலம் கம்பனிக்கு பல்வேறு ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக் குழுக்களிடையே அதிகூடிய இலக்குகளை அடைந்துகொள்ளும் அதிகூடிய வெற்றியாளர்களுக்கு கௌரவமளிப்பதற்காக ஜூலை மாதத்தில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட 2016 நட்சத்திர விருது விழா அவ்வாறான நடவடிக்கைகளில் ஒன்றாகும். 2015 ஆம் ஆண்டில் தமது விற்பனைக் குழுக்களின் உன்னத மற்றும் சிறப்பான செயலாற்றுகையை அடையாளம் காண்பதற்கும் கௌரவிப்பதற்கும் இந்த வருடாந்த விழாக்கள் ஒழுங்குசெய்யப்பட்டன. வழங்கப்படுகின்ற விற்பனை இலக்குகளையும் தரங்களையும் நிறைவேற்றுவதனை அடிப்படையாகக்கொண்டு தமது உன்னத விற்பனைச் செயலாற்றுகையின் பொருட்டு 426 குழுக்களின் தலைவர்கள் இந்த விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

மக்களுக்கிடையே சின்னப் பெயர் பற்றி தெளிவுபடுத்துவதனை அதிகரிப்பதற்காக நாடுபூராகவும் மேம்படுத்தல் நடவடிக்கைகளும் ஒழுங்குசெய்யப்பட்டன. மேற்சொன்ன ஒருசில நடவடிக்கைகள் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விழாக்களுக்கு வரையறுக்கப்பட்டதாக மாத்திரம் காணப்பட்ட அதேவேளையில் இலங்கை காப்புறுதிக்

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

கூட்டுத்தாபனத்தினால் தன்னிச்சையாகப் பங்குபற்றிய ஏனைய தரப்பினரால் ஒழுங்குசெய்யப்பட்ட ஒருசில விழாக்களும் காணப்பட்டன. அதன்போது தமது சின்னப் பெயர் காட்சிப்படுத்தப்பட்டன. நிர்மாணத் துறையினால் ஒழுங்குசெய்யப்பட்டு, மே மாதத்தில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட பில்ட் எஸ்எல் 2016 நிர்மாணத் துறைக் கண்காட்சி அவ்வாறான விழாக்களில் ஒன்றாகும்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தமது விற்பனை நடவடிக்கைகளை புதிய மட்டத்திற்குக் கொண்டுவருவதற்கு வலுவான தகுதிறன்களை அடையாளப்படுத்துவதற்கும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய பிரிவு விளையாட்டு மற்றும் கலாச்சார விழாக்களாகும். ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை ரக்கர், உதைபந்தாட்ட கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஸ்ரீ லங்கா சுப்பர் செவன் - 2016 சர்வதேச ரக்பி சுற்றுப்போட்டி, அக்டோபர் மாதத்தில் நடாத்தப்பட்ட ரேசிங் ட்ரைவேஸ் அன்ட் ரைடர்ஸ் லங்கா சங்கத்துடன் இலங்கை இராணுவப் படையின் கொமாண்டர் படையணியினால் ஒழுங்குசெய்யப்பட்ட கொமாண்டோ சவால் சுபர் க்ரொஸ் மோட்டார் வாகன ஓட்டப் போட்டி மற்றும் ஏனைய சமய மற்றும் களியாட்ட விழாக்களுக்கும் அணுசரணையை வழங்கி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இணைந்துள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி ஆகிய இடங்களிலும் அவற்றைச் சூழவுள்ள இடங்களிலும் இருக்கின்ற எரிபொருள் நிலையங்களில் செப்டம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடாத்தப்பட்ட இலவச எரிபொருள் ஊக்கவிப்புக்காக மாபெரும் பிரதிபலிப்பக் காணப்பட்டது. ஒவ்வொரு பிரச்சார நடவடிக்கையும் ஒவ்வொரு நாளும் நியமிக்கப்பட்ட எரிபொருள் நிலையத்திற்கு வரும் மோட்டார் ஓட்டுநர்களிடமிருந்து 10 அதிஷ்டசாளிகளைத் தெரிவுசெய்யும் நிகழ்வையும் கொண்டிருந்தது. அவர்கள் ரூபா 5,000 பெறுமதியான இலவச எரிபொருளைப் பெற்றனர்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் செய்தியை எல்லா இடங்களுக்கும் பரப்புவதற்காக வருடத்தினுள் கம்பனியினால் நடாத்தப்பட்ட சிண்ணத்தை செயற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களிடையே வியாபார நடவடிக்கைகள் பற்றிய நுகர்வோர் சங்கங்களும் காணப்பட்டன. இந்த பேரவைக்காக அணுசரணையை வழங்கிய ஒருசில பிரதேசங்கள் கொழும்பு 1 மற்றும் 3 மத்திய 1 மற்றும் 2, நீர்கொழும்பு மற்றும் மாத்தறை என்பனவாகும்.

செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் ஹெல க்ளோதிங் தொழிற்சாலைகளில் காப்புறுதி பற்றிய தெரியப்படும் நிகழ்ச்சித்திட்டமொன்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட அதேவேளையில், பிரதேச மட்டத்தில் விருதுகளை வழங்கும் வியாபாரத்தின் ஒரு பகுதியாக கொழும்பு, கண்டி மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் செயற்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

உலகம் பூராகவும் விற்பனைத் துறையில் ஏற்பட்டுள்ள புதிய போக்குகளுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு விற்பனைக் கருவியொன்றாக டிஜிட்டல் ஊடகத்தைப் பயன்படுத்தும் நடவடிக்கை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. சமூக ஊடகங்களை முழுமையாகப் பயன்படுத்தும் ஆற்றல்களைப் பயன்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தினால் முகநூல் மற்றும் டுவிட்டர் கணக்குகள் பயன்படுத்தப்படுகின்றது. மேம்படுத்தப்பட்ட இணையத்தளத்தின் மூலமும் அச்சு மற்றும் இலத்திரணியல் ஆகிய இரண்டு துறைகளிலும் பிரதான ஊடக வழிகுறித்து இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கவனத்தைச் செலுத்தியதன் மூலம் இந்த முயற்சிகளுக்காக மேலதிகமாக தேவையான ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டுக்காக பல விற்பனை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ள அதேவேளையில் சிலோன் மோட்டார் ரோ 2017 வும் ஒன்றாகும். கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2017 சனவரி மாதத்தில் நடாத்தப்பட்ட சிலோன் கிலசிக் மோட்டார் வாகன சங்கம் மற்றும் இலங்கை மோட்டார் வாகன விற்பனையாளர்களின் சங்கம் ஆகியவற்றினால் ஒழுங்குசெய்யப்பட்ட ப்ரீமியர் மோட்டார் ஓட்டப்போட்டியின் நன்காவது முறையாகவும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மோட்டார் ப்ளசன்ட் பதவிப் பெயர் பங்குதாரராகக் காணப்பட்டது.

மிணிமுது தாயாத ட்ரீம் களக்'ன்



மிணிமுது தாயாத சிறுவர் காப்புறுதித் திட்டத்தை வெளியிடுவதனைக் குறிக்கம் முகமாக 2016.02.14 ஆம் திகதி முதல் 2016.03.31 ஆம் திகதி வரை மிணிமுது தாயாத ட்ரீம் கலக்ஷன் போட்டியொன்று இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டது. இந்தப் போட்டியின் மூலம் தமது எதிர்கால எதிர்பார்ப்புகளை அடிப்படையாகக்கொண்ட சிறுவர்களின் ஆக்கங்கள் 5,000 இற்கும் கூடுதலான அளவு கவர்ந்தீர்க்கப்பட்டது. பெற்றோர் ஒருவரை அல்லது பாதுகாவலர் ஒருவரை அழைத்துவந்து நான்கு இரவுகளும் ஐந்து பகல்களையும்கொண்ட பக்கேஜ் ஒன்றைக்கொண்டதாக சிங்கப்பூரிலுள்ள யூனிவர்சல் ஸ்ரூடியோவைப் பார்ப்பதற்காக 10 வெற்றியாளர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

செயற்பாட்டு மீளாய்வு

கொமாண்டோ சவால்களுக்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சக்தி



இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விற்பனைப் பிரிவின் பிரதிப் பொதுமுகாமையாளர் நிரோசன் பெதியாகொட அவர்களினால் கொமாண்டோ படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் ரெலப் நுகேரா அவர்களுக்கு அனுசரணை காசோலையொன்றை வழங்கியமை.

ஒக்டோபர் மாதத்தில் நடாத்தப்பட்ட உயர்-அட்ரீனல் கமாண்டோ சவால் சுப்பர் க்ரொஸ் மோட்டார் வாகனப் போட்டியில் ஒரேயொரு காப்புறுதிப் பங்காளர் மற்றும் அனுசரணையாளர் என்ற வகையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மோட்டார் ப்ளஸ் பிரிவு அடியெடுத்து வைத்தது.

இலங்கை மோட்டார் வாகன போட்டி சாரதிகளினதும் செலுத்துனர்களினதும் சங்கத்துடன் 'இலங்கை இராணுவப் படையின் கொமாண்டோ படையணியினால் ஒழுங்குசெய்யப்பட்ட கொமாண்டோ வீரர்களுடனான ஓட்டம்' என்ற கருப்பொருளின் கீழ் ஒரு நிமிட பரபரப்புப் போட்டி நடாத்தப்பட்டது.

முதல் முறையாக தனிப்பட்ட மாதிரியின் கீழ் இது ஒழுங்குசெய்யப்பட்ட அதேவேளையில் இரண்டு கட்டங்களின் கீழ் நடாத்தப்பட்டது. மிகவும் விநோதமானதும் மிதமானதுமான போட்டியாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட சாரிக்கா குழுவினால் ஒக்டோபர் 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த மூன்று நாள் ஓட்டப் போட்டிகளில் முதலாவது கட்டத்தைக்கொண்டுள்ளது. நான்கு மாகாணங்கள் அதாவது மேற்கு, மத்திய, கிழக்கு மற்றும் ஊவா ஊடாக தமது பயணத்தை விரிவுபடுத்தி வேறுபடுகின்ற உலகளாவிய மற்றும் காலநிலை நிலைகளை உள்ளடக்கியதாக 560 கிலோமீற்றர் பயணக்குழு உள்ளடக்கப்பட்டது.

இரண்டாவது கட்டம் ஒக்டோபர் 09 ஆம் திகதியன்று நடைமுறைப்படுத்தப்பட்ட அதேவேளையில், மோட்டார் சைக்கிள் மற்றும் கார் ஓட்டப் போட்டிக்கான சுப்பர் க்ரொஸ் போட்டி சவல்களைக் கொண்டதாக அமைந்தது. நாட்டிலுள்ள மிக நீளமானதும் அதிவேகமானதுமான தடதளம் என நம்பப்படுகின்ற ஊவா மாகாணத்தின் குடா ஓயாவில் அமைந்துள்ள கொமாண்டோ படையணியின் பயிற்சிப் பாடசாலையிலுள்ள 1.68 கி.மீ. நீளமான தடதளத்தில் இந்தப் போட்டி நடாத்தப்பட்டது. இந்த தடதளம் சர்வதேச தரத்திற்கு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. சுபர் க்ரொஸ் போட்டி 12 இற்கும் மேற்பட்ட மோட்டார் கார்களையும் 10 மோட்டார் சைக்கில்களைக் கொண்ட போட்டியாளர்களை உள்ளடக்கியதாக இருந்த அதேவேலையில் 100 இற்கும் மேற்பட்ட சாரதிகளையும் மோட்டார் சைக்கிள் சவாரி செய்பவர்களையும் பங்குபற்றுவதை காணக்கூடியதாக இருந்தது.

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் போட்டார் ப்ளஸ், மோட்டார் கார் போட்டிக்காக அனுசரணை வழங்குகின்ற சந்தர்ப்பங்களில் எப்பொழுதும் முன்னிலையில் நிற்கின்றது. பிரதான மோட்டார் காப்புறுதி வழங்குனர் என்ற வகையில் அவ்வாறான போட்டிகளுக்கு தனது தலையீட்டின் ஊடாக அந்தப் போட்டிகளுக்கும் போட்டியாளர்களுக்கும் பாரிய நற்பெயரை வழங்கியுள்ளது.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் சுபர் செவன் ரகர் போட்டிகளின் பங்குதாரராகத் திகழ்தல்.



இதற்காக அனுசரனை பெகேஜ், இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனத்தின் இணை பொது முகாமையாளர் கீத் பேர்னாட் அவர்களினால் தொலைதொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஹரீன் பிரனாந்து அவர்களின் முன்னிலையில் இலங்கை ரக்பி உதைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் அசன்த செனவிரத்ன அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.

இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனம் ஸ்ரீலங்கா சுபர் செவன் - 2016 சர்வதேச ரகர் சுற்றுப் போட்டியின் உத்தியோகப்பூர்வ காப்புறுதி பங்காளர் என்ற வகையில் வெற்றிகரமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இந்த சுற்றுப் போட்டி இலங்கை ரகர் உதைப்பந்தாட்ட சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட அதேவேளையில் அது இரண்டு கட்டங்களின் கீழ் நடாத்தப்பட்டது. சுற்றுப் போட்டியின் முதலாவது கட்டம் கொழும்பு குதிரை ஓட்டப் பந்தய விளையாட்டு மைதானத்தின் ஆகஸ்ட் மாதம் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட அதேவேளையில் இரண்டாவது கட்டம் அதே இடத்தில் ஆகஸ்ட் மாதம் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

பங்குடமைக்கு அமைவாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மோட்டார் ப்ளஸ் பிரிவின் மூலம் தீடிர் விபத்து காப்பீடு மற்றும் வைத்தியசாலை / சத்திர சிகிச்சை நன்மைகள் மற்றும் ஏற்பாடுகளைக் கொண்டதாக ஒரு மில்லியன் ரூபா தொகையைக் கொண்ட முழு உருப்புரிமையைக் கொண்ட அணிகள் ஒவ்வொரு வீரர்களையும் உள்ளடக்குகின்றது. பாடசாலை அணிகளின் உறுப்பினர்களும் காப்புறுதி காப்பீட்டை பெறுகின்றனர். இது உள்நாட்டு விளையாட்டை மேம்படுத்துவதற்கும் கட்டியெழுப்புவதற்குமான தனது பயணத்தில் அரசாங்கத்தின் காப்புறுதியாளர்களினால் எடுக்கப்பட்டுள்ள மற்றுமொரு நடவடிக்கையாகும்.


செயற்பாட்டு மீளாய்வு

ஆயுள் காப்புறுதி செயற்பாட்டு மீளாய்வு – 2016

2016 ஆம் ஆண்டில் இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனத்தினுள் தன்னிகரற்ற ஆயுள் காப்புறுதி மிகையூதிய கொடுப்பனவொன்றை பதிவு செய்துள்ளது.

உள்நாட்டுக் காப்புறுதி கைத்தொழில் உள்ள சகல முக்கியமான கட்டங்களையும் வீழ்த்தி இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனத்தினால் ஒரு வருடத்திற்கு முன்னர் வெளியிடப்பட்ட தனது சாதனை மிக்க ரூபா 5.4 பில்லியன் தொகையைத் தாண்டி 2016 ஆம் ஆண்டில் ரூபா 6.2 பில்லியன் ஆயுள் காப்புறுதி மிகையூதிய கொடுப்பனவொன்றை உறுதி செய்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டிலிருந்து ஆயுள் காப்புறுதி மிகையூதிய கொடுப்பனவாக மொத்தமாக ரூபா 35 பில்லயனுக்கும் கூடுதலான தொகை இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனத்தினால் உறுதிபடுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அறிவு பூர்வமான முதலீட்டு முகாமைத்துவத்தினூடாக தனது காப்புறுதி காப்பீட்டு உரிமையாளர்களின் பாதுகாப்பு அதிகூடிய நன்மைகளை வழங்குவதற்காக கூட்டுத்தாபனத்தின் அர்ப்பணிப்புக்கு இது போதுமான சான்றாகும்.

போனஸ் எப்வீ



புதிய உற்பத்திகள்

சிறுவர்களின் பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்கில் 2016 ஆம் ஆண்டில் புதிய சிறுவர் காப்புறுதி திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மினிமுது தாயாத என அழைக்கப்படுகின்ற இந்தத் திட்டம் சிறுவர்களின் கல்வி மற்றும் தொழில் பரீட்சைகள் சார்ந்த அதிகூடிய செலவுகளுக்கு உதவி வழங்குவதற்கான உன்னத நிதியமாகும். இந்த காப்புறுதி காப்பீட்டின் மூலம் சிறுவர்களுக்காக வைத்தியவாலையில் அனுமதிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களிலும் அதேபோன்று சிறுவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆகிய காப்புறுதி காப்பீட்டு உரிமையாளருக்கு ஏற்படுகின்ற தீவர் விபத்து அல்லது சுகயீன நிலைமைகளின் காரணமாக தீவர் விபத்து மரணத்திற்கான நன்மைகள் மற்றும் பூரண நிலையான அங்கவீன நிலைக்கு உட்படும் போது வழங்கப்படும் நன்மைகளைக் கொண்டதாக இயற்கையான சுகாதார காப்பீடு ஒன்றை வழங்குகின்றது. முதிர்வடையும் திகதியிலிருந்து ஆரம்பித்து அதற்கடுத்த 5 வருடங்களுக்கும் கூடுதலான ஐந்து வருடாந்த தவணையின் மூலம் முதிர்வுக்கான கொடுப்பனவு செயற்படுகின்றது. தவனைக் கொடுப்பனவைச் செலுத்துகின்ற அல்லது முதிர்வுக் கொடுப்பனவை மேற்கொள்கின்ற காலப்பகுதியில் பெற்றோர் / பாதுகாவலர் மரணத்திற்கு அல்லது அங்கவீன நிலைக்கு உட்படும் போது செலுத்தப்பட்டு வருகின்ற தவணைக் கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்படும்.

விற்பனை படையை தொழிற்படுத்துதல்.

சந்தை பிரவேசத்தை மேம்படுத்துவதற்காக ஆயுள் விற்பனை அணி மீண்டும் புனர்வாழ்வளிக்கப்பட்ட அதேவேளையில் 2016 ஆம் நிதியாண்டில் பிரதேச மட்டத்தின் கட்டமைப்பு ரீதியான விற்பனை மேம்பாட்டு பயிற்சியளிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த தேசிய விற்பனைப் பிரச்சாரம் மற்றும் மேற்குறிப்பிட்ட நிரல் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விற்பனை பயிற்சி மற்றும் அபிவிருத்தி.

தனது உற்பத்தி ஏனைய கைத்தொழில்களுடன் ஒப்பிடும் போது காப்புறுதி காப்பீட்டுத் திட்டம், நன்மைகள் மற்றும் தொழிநுட்ப நடவடிக்கைகள் பற்றி ஆழமான அறிவைக் கொண்ட உயர்மட்டத்திலான திறமைகளும் ஊக்கப்படுத்தல்களும் காப்புறுதி கைத்தொழிலின் விற்பனை அணிக்கு அவசியமானதாகும். உற்பத்தியை வழங்குவது அதனை கொள்வனவு செய்கின்ற கால எல்லையில் இடம்பெறாதபடியினால் வாடிக்கையாளர்களை தூண்டும் ஆற்றலை மேம்படுத்த வேண்டிய பிரதான திறமையாகும். திறன்விருத்தி தொழிநுட்ப ஆற்றலை வளர்த்தல், குழுக்களின் தலைமைத்துவ விருத்தி மற்றும் விற்பனை முகாமைத்துவ திறமைகளின் விருத்தி ஆகியவற்றைக் கொண்ட தொடர்ச்சியான இற்றைப்படுத்தலைக் கொண்டதாக 2017 ஆம் ஆண்டுக்காக நல்ல முறையில் கட்டமைப்பு செய்யப்பட்ட பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி மாதிரிகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தியுள்ளது. முகவர்கள் முதல் சிரேட்ட மட்டத்தில் உள்ள முகாமையாளர்கள் வரை விற்பனை பதவிகளினூடாக சகல மட்டங்களுக்கும் அறிவை வழங்குகின்ற கற்கை நெறிகள் பல இதில் உள்ளடங்கியுள்ளது.

ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

2016 ஆம் ஆண்டு முதல் அரையாண்டுக்காக புதிய வியாபார நடவடிக்கைகளின் மூலம் கைத்தொழிலில் அதிகூடிய நிதியாண்டில் வளர்ச்சியொன்றை பதிவு செய்வதற்காக வருடத்தின் முதல் அரையாண்டிற்கு உயிர் கொடுப்பதற்காக சிறந்த வருடாந்த விற்பனை மேம்பாடாகக் காணப்பட்ட ஆயுள் விற்பனை அணிக்காக ஆயுள் காப்புறுதி காங்கிரஸ் போட்டி உதவியாக அமைந்தது. மேலும் வருடத்தினுள் உற்பத்தித் திறன் விருதுப் போட்டி மற்றும் ஜயசிறி பிளஸ் ஊடாக போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட அதேவேளையில் செயற்பாட்டு மற்றும் பயன்மிக்க ஊழியர்கள் / குழுக்கள் தலைமைத்துவ செயற்பாடுகளின் மூலம் உயர் வியாபார மேம்பாட்டு சக்தியை வைத்துக் கொள்வதற்கும் 2016 ஆம் ஆண்டின் இரண்டாவது

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

அரையாண்டுக்கும் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு உதவியது.

விசேட காப்புறுதிக் காப்பீட்டு மீட்புப் பிரச்சாரம்
உலகம் பூராவும் ஆயுள் காப்புறுதி கைத்தொழிலில் நடைமுறைப்படுத்துகின்ற செயலூக்க நிலையின் கீழ் ஆயுள் காப்புறுதி காப்பீட்டை பேணுவதற்காக எமது வாடிக்கையாளர்கள் தொடர்ச்சியாக ஊக்குவிக்கப்படுகின்றனர். 2016 ஆம் ஆண்டில் இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனத்தின் ஆயுள் பிரிவினால் விசேட மீட்சியை கட்டியெழுப்பும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட் அதேவேளையில், நடைமுறையிலுள்ள காப்புறுதிக் காப்பீடு வெற்றிகரமாக மீண்டும் உயிர்பிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டிலும் இந்த உயிர்பிப்பு நிலைக்கு மாறும் நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். கடந்த 36 மாத காலத்தினுள் செயற்படாதிருந்த தனது காப்புறுதி காப்பீட்டை உயிர்பிப்பதற்கு இடமளித்த வாடிக்கையாளர்களுக்காக அதி கூடிய மிகையூதிய கொடுப்பனவைக் கொண்டதாக இந்த விசேட காப்புறுதிக் காப்பீட்டை சுமுகநிலைக்கு கொண்டுவரும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பணியாகக் காணப்படுகின்றது.

மாற்று விநியோகம்
வங்கிக் காப்புறுதி (ஆயுள்)

ஆயுள் காப்புறுதி மேம்பாட்டுக்காக 23 வங்கிக் காப்புறுதி உத்தியோகத்தர்களைக் உள்ளடக்கியதாக கிளையொன்றைக் கொண்டதாக இலங்கை வங்கியுடன் பிரதான கருத்திட்டம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் 1 ஆவது காலாண்டில் வங்கிக் காப்புறுதியின் (ஆயுள்) சிரேட்ட முகாமையாளர் - நியமிக்கப்பட்ட அதேவேளையில் இந்த வங்கிக் காப்புறுதி - விற்பனை பதவியணியை வழுவூட்டுவதற்காக புதிய வங்கிக் காப்புறுதி விற்பனை உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஊழியப் படையை மேம்படுத்தும் புதிய வங்கியுடன் விற்பனை எல்லையை மேம்படுத்துவதற்காக திட்டங்கள் வகுக்கப்படுகின்ற அதேவேளையில் வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்தி, ஒரே வழியில் தங்கியிருக்கும் அபாயத்தை குறைத்து, சம்பிரதாயமற்ற அணுகுகை செயற்பாடுகள் இந்த வங்கியினால் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

குழு – ஆயுள்.

அலைவரிசை அபிவிருத்தி குறித்து மேலும் கவனத்தை செலுத்தி குழு ஆயுள் வியாபார நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்துவதற்காக குழு மற்றும் மொத்த விற்பனை அலகு தாபிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியச் சந்தை, வேலைத்தளச் சந்தை ஆகியவற்றின் மூலம் 2016 ஆம் ஆண்டின் 1.5 பில்லியனைக் கொண்டதாக 25மூ வளர்ச்சியை எடுத்துக்காட்டியுள்ளது. அதேபோன்று ஓய்வூதியத்தை திட்டமிடுதல் மற்றும் ஏனைய தொடர்புடைய திட்டங்களுக்காக அரசாங்க, கூட்டுத்தாபன துறையிலுள்ள நிறுவனங்களின் பிரிவுகளில் உள்ள ஆற்றல்களை முன்கொண்டு செல்வதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளது.

கிளை வளையமைப்பின் ஊடாக விற்பனை அணுகுகையினை வலுவூட்டுதல்.

2016 ஆம் ஆண்டில் இதற்காக தொடர்ச்சியாக கவனம் செலுத்தப்பட்டது. 20 புதிய கிளைகளினூடாக 2017 ஆம் ஆண்டில் இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனத்தின் சேவை நிலையங்களை 160 கிளைகள் வரை அதிகரிப்பது நடப்பு ஆண்டில் பிரதான நோக்கமாக உள்ளது. அதேபோன்று கைத்தொழிலின் அபிவிருத்திக்கு இணையாக தற்போது இருக்கும் கிளைகளை உயர் தரத்திற்கு கொண்டு வரவேண்டிய அதேவேளையில் தோற்றத்தை மேம்படுத்துதல், பழுதுபார்த்தல் மற்றும் வசதிகளை அதிகரித்தல் உட்பட கிளைகள் தொடர்ச்சியாக பௌதீக ரீதியில் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. வருடத்தினுள் ஒரு சில கிளைகள் உபாய ரீதியில் மிகவும் சாதகமாக புதிய இடங்களுக்கு மாற்றப்பட்டது. வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக நேர்மறையாக பங்களிப்புச் செய்வதை இந்த நடவடிக்கைகளின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

சந்தைப்படுத்தல் உபாயத் திட்டம்.

தேசிய காப்புறுதியாளர் என்ற வகையில், சகலருக்கும் பெற்றுக்கொள்ளக்கூடிய நெகிழ்வுத் தன்மைமிக்க, தாங்கிக்கொள்ளக்கூடிய ஆயுள் காப்புறுதி ஒன்றை வழங்குவதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொள்கின்றோம். இலத்திரனியல், அச்சு மற்றும் ஏனைய தொடர்புடைய வளர்ந்து வருகின்ற ஊடகங்களில் பிரச்சாரம் செய்வதினூடாக மாத்திரம் வாடிக்கையாளர்களை ஓரளவிற்கு ஆயுள் காப்புறுதி விற்பனையின் பக்கம் ஈடுபடுத்த முடியும். எமது விற்பனை குழுவை ஊக்குவிப்பதற்காக மேம்படுத்தப்பட்ட விற்பனை மேம்பாட்டு திட்டங்களை இலக்காகக் கொண்டு ஈடுபடுத்தும் உபாயத்திட்ட எதிர்பார்ப்புக்களில் இருந்து விற்பனை வகைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் நாட்காட்டி பல முக்கியமான நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. ஒரு சில பிரதான நிகழ்ச்சித் திட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

- ஆயுள் காங்கிரஸ், 6 மாத போட்டி.
- மனிதவலு மற்றும் உற்பத்தித் திறன் அபிவிருத்தி ஆகியவற்றைச் செயற்படுத்துவதனை ஊக்குவிக்கும் காலாண்டுத் திட்டங்கள்
- வருட இறுதியில் கிளை மட்டத்தில் மொத்த தவணை போட்டி.
- டொலர் மில்லியன் வட்ட மேசை நிகழ்ச்சித் திட்டம்.
- வருடாந்த விருது வழங்குதல்

துணை கம்பனிகளின் செயலாற்றுகை

லங்கா ஹொஸ்பிடல் கோபரேசன் பிஎல்சீ

லங்கா ஹொஸ்பிடல் குழுமம் 2016 - 2017 ஆம் ஆண்டுகளில் தனது அதிகூடிய இலாபம் ஆகிய ரூபா 972 மில்லியன் மற்றும் 16% ஐந்தொகை வளர்சியொன்றை பதிவு செய்துள்ளது. ரூபா 14.5 மில்லியனாகக் காணப்பட்ட சந்தை மூலதனமயமாக்கல் கம்பனியின் தேறிய பெருமதியாகிய ரூபா 5.8 பில்லியன்களை தாண்டியுள்ளது. பங்கொன்றின் உள்ளார்ந்த பெறுமதி உயர்மட்டத்தில் வாடிக்கையாளர் திருப்தியை தற்போதிருக்கும் தேர்ச்சி மற்றும் விசேட அறிவு அதே போன்று மெய்ப்பிக்கப்பட்ட செயலாற்றுகைகளுக்கு வசதிகளை வழங்குகின்ற பாதுகாப்பு பற்றி உலகாலாவிய ரீதியில் ஏற்று கொள்ளப்பட்ட தரங்களுக்கு இணங்குதல், கட்டமைப்புகள், தொகுதிகள் மற்றும் நடவடிக்கைகள் போன்ற நிதி அல்லாத சொத்துக்களை அடிப்படையாகக் கொண்ட தனது ஆற்றல்களை பிரதிபலிக்கின்றது.

வருடத்தினுள் பங்கிலாப விதத்தில் இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனத்திற்கு லங்கா ஹொஸ்பிடல் பிஎல்சீயினால் ரூபா 220 மில்லியன் தொகை பங்களிப்பு செய்யப்பட்டுள்ள அதேவேளையில் அது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 33% வளர்ச்சியாகும்.

இந்த வைத்தியசாலை அதிசபட்ச கொள்ளளவுடன் செயற்படுகின்ற அதேவேளையில் அதனை வெளிப்படுத்துவதற்காக முன்னுரிமையை வழங்குகின்றது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விரிவாக்கும் போதுபுதிய தொழில்நுட்பம் மற்றும் ஆளுக்குரிய வளர்ச்சி ஆகியவற்றுக்காக வளங்கள் ஒதுக்கப்படுகின்றன. சேவைகளின் விடயப் பரப்பை விரிவுபடுத்துவதும் இதில் அடங்குகின்றது.

லிற்றோ கேஸ் லங்கா லிமிடட்.

2016-2017 நிதியாண்டில் லிற்றோ கேஸ் லங்கா லிமிடட்டின் மொத்த திரவ பெற்றோலிய வாயு விற்பனை ரூபா 24,890 மில்லியன்கள் வரை 4.21% இனால் அதிகரித்துள்ளது.

2016-2017 நிதியாண்டில் ரூபா 4,847 மில்லியன் வரிவிதிப்பிற்கு முன்னரான இலாபத்தையும் ரூபா 3,433 மில்லியன் வரி விதிப்பிற்கு பின்னரான இலாபத்தையும் லிற்றோ கேஸ் லங்கா லிமிடட்டினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மீளாய்வு வருடத்தில் பங்கிலாபத்தின் படி ரூபா 5,178 மில்லியன் லிற்றோ கேஸ் லங்கா லிமிடட்டினால் இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதேவேளையில் அது 1,826% சதவீத வளர்ச்சியாகும்.

லிற்றோ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவட் லிமிடட்.

லிற்றோ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவட் லிமிடட்டினால் 2016-17 வருடத்தில் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 39.3% சதவீத வளர்ச்சியைக் கொண்டதாக ரூபா 1,780 மில்லியன் வரி விதிப்பிற்கு முன்னரான இலாபத்தையும் 44.2% வளர்ச்சியையும் எடுத்துக்காட்டியுள்ள அதேவேளையில் ரூபா 1,560 வரிக்கு பின்னரான இலாபத்தையும் பதிவு செய்துள்ளது.

லிற்றோ கேஸ் டேமினல்ட் லங்கா பிரைவட் லிமிடட்டினால் பங்கிலாபத்தின்படி ரூபா 2,499 மில்லியன் தொகை ஒன்றை இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனத்திற்கு வழங்கியுள்ள அதேவேளையில் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வு வருடத்தில் அது ரூபா 3,837 மில். வளர்ச்சியாகும்.

கெனொவின் ஹொடெல்ஸ் என்ட் ஸ்பாஸ் பிரைவட் லிமிடட்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெளிப்பன்னையிலுள்ள 44.ஆம் மைல்கல் எனுமிடத்தில் இருமருங்கிலும் அமைந்துள்ள கெனொவின் ஆர்கடே, கெனோவின் ஹொடெல்ஸ் என்ட் ஸ்பாஸ் பிரைவட் லிமிடட்டினால் செயற்படுத்தப்படுகின்றது. இந்த வளவு உணவகம், சிறப்புச் சந்தை, வங்கி தன்னியக்க இயந்திரம், உடுதுணி நிறுவனம், முதலுதவி மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகளை உள்ளடக்கியுள்ளது.

இந்த கெனொவின் ஆர்கடே கடைத் தொகுதி 2016-17 நிதியாண்டில் ரூபா 81 மில்லியன் வருமானம் ஒன்றை உருவாக்கியுள்ள அதேவேளையில் கடந்த வருடத்தில் ரூபா 77 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடும் போது 5.12% வளர்ச்சியாகும். கெனோவின் ஹொடெல்ஸ் என்ட் ஸ்பாஸ் பிரைவட் லிமிடட்டின் கடந்த வருடத்தின் ரூபா 19 மில்லியனாக காணப்பட்ட வரி விதிப்பிற்கு முன்னரான இலாபம் இந்த வருடத்தில் ரூபா 12 மில்லியனாக காணப்பட்டது. கடந்த நிதியாண்டில் கம்பனியின் வரிக்கு பின்னரான இலாபமாகிய ரூபா 19 மில்லியனுடன் ஒப்பிடும் போது நடப்பு ஆண்டின் ரூபா 12 மில்லியனாகக் காணப்பட்டது.

கெனொவின் ஹொடெல்ஸ் என்ட் ஸ்பாஸ் பிரைவட் லிமிடட்டினால் பங்கிலாபமாக ரூபா 15 மில்லியன் இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனத்திற்கு வழங்கியுள்ளது.

கென்வில் ஹோல்டின்ஸ் பிரைவட் லிமிடட்.

தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கிரான் ஹைட்ஸ் கலம்பு ஹொடெல், கென்வில் ஹோல்டின்ஸ் ப்ரைவட் லிமிடட் நிறுவனத்திற்கு சொந்தமானதாகும். 47 மாடிகள் வரை விரிவடைகின்ற பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற 1.1 மில்லியன் சதுர அடிகளைக் கொண்ட இந்த சொத்தின் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் 240 மில்லியன் ஆகும். மேலும், மொத்தம் 220 மேலதிக அறைகளைக் கொண்டதாக 453 அறைகள், 61 அறைத் தொகுதிகள் மற்றும் 100 சேவை திணைக்களங்கள் (1 முதல் 3 வரையான படுக்கையறைகள்) இந்த ஹோட்டலுக்கு உரித்தானதாகும். அதனால் குறகிய காலம் மற்றும் நீண்ட காலம் தங்கியிருக்கின்ற வர்த்தக துறைக்கு தேவையான வசதிகளை வழங்குகின்ற கிராண்ட் ஹைட் கலம்பு, இலங்கையினுள் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலாகும். 43/44 மாடிகளில் தாபிக்கப்படுகின்ற 3 உணவகங்கள் உட்பட 10 உணவகங்கள் இந்த அதி சொகுசு ஹோட்டலுக்கு உரித்தானதாகும். முன்னனி அமெரிக்க விருந்தோம்பல் கம்பனி ஆகிய ஹைட் ஹொடெல் கூட்டுத் தாபனத்தின் மூலம் இந்த ஹோட்டல் நிருவகிக்கப்படுகின்றது.

நடப்பு நிதியாண்டில் இந்த ஹோட்டலில் பிரதான மாதிரி முழுமையாக பூர்த்தி செய்யப்படுகின்ற அதேவேளையில் வழங்கப்படுகின்ற இறுதித் திகதியாகிய 2018 ஆம் ஆண்டின் முன்றாவது காலாண்டின் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்திசெய்வதற்காக பல ஒப்பந்தக் குழுக்கள் ஒரே நேரத்தில் உள்ளக பகுதிகளில் வேலை செய்து வருகின்றது.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன அணி

எமது மனித வளங்கள்

இலங்கையின் காப்புறுதித் துறையானது தொடர்ந்தும் மிகவுமே போட்டித்த தன்மைமிக்கதொரு துறையாக மாறிவருவதோடு வாடிக்கையாளர்கள் பணத்திற்கான அதிக பெறுமதியை கோரி நிற்கின்றனர். இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தேசிய காப்புறுதியாளர் என்ற வகையில் காப்புறுதி உற்பத்திகளினூடாக மட்டுமல்லாமல் தொழில்வாண்மைமிக்க, வினைத்திறன்மிக்க சேவைகளினூடாகவும் பொதுக் காப்புறுதி தேவைகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

நடப்பு வருட நிதியாண்டின் கீழ் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது எமது சேவைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் கம்பனியின் முழுதுமளாவிய போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்காகவும் எமது மனித வளங்களை தொடர்ந்தும் பயிற்றுவித்தும் விருத்தி செய்தும் வந்திருக்கின்றது. எமது மனித வளத் தளமானது உள்ளுர் காப்புறுதிக் கைத்தொழிலில் மிகவுமே சிறந்ததொரு தளமாக இருக்கின்றதென்பதை பதிவு செய்வதில் நாம் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். விசேட முகாமைத்துவ ஆளணியினரால் வழிநடாத்தப்படும் எமது குழுமமானது தொழில்நுட்ப ரீதியாகவும் கல்விசார் ரீதியாகவும் தகைமை பெற்றுள்ளதோடு எமது ஊழியர்கள் ஒழுங்குமுறையான தொடரான பயிற்சிக்கும் திறன் அபிவிருத்திக்கும் உட்பட்டு சேவையின் தரம் தொழில்வாண்மை என்பவற்றை தொடர்ந்தும் பேணி வருகின்றார்கள்.

கூட்டு ஒப்பந்தம் 2016 - 2019

2016-2019 கூட்டு ஒப்பந்தமானது இலங்கை காப்பறுதிக் கூட்டுத்தாபனத்திற்கும் அத்தோடு அங்கத்துவர்களாக இருக்கின்ற 8 தொழில்சங்கங்களுக்குமிடையே 2017.01.11 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதோடு இவர்கள் தமது அங்கத்துவத்தில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத பகுதிகளிலுள்ள ஊழியர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

ஒப்பந்தமானது 2016.12.01 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருவதோடு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன முகாமைத்துவத்தின் நோக்கம் யாதெனில் மேற்படி வகுதியின் கீழ்வருகின்ற அனைத்து ஊழியர்களுக்கும் அவர்கள் எந்த தொழில் சங்கத்துடன் இணைந்திருக்கின்றனர் என்ற வேறுபாடின்றி திருப்தியளிக்கின்ற அனுகூலங்களை வழங்குவதுமாகும். அவர்கள் கூட்டு ஒப்பந்தத்திக்கு கைச்சாத்திட்டு உள்ளனரா இல்லையா என்பது தாக்கம் செலுத்தாது. தகைமை கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் மீள் புதிப்பிக்கப்பட்ட ஊழியர்களின் அடிப்படையில் புதிய ஒப்பந்தங்களின் நியதிகளை அவர்கள் ஏற்றிருக்கின்றனர் என்பதை கருதுவதோடு இதில் அவர்களது நியதிகள் மற்றும் தொழில் நிபந்தனைகள் தொடர்பில் பின்பற்றுவதற்கு கடப்பாடு கொண்டுள்ளனர். இது காப்புறுதிக் கம்பனியின் கைத்தொழில் அமைதி நிலைமையையும் பாதுகாப்பதாக அமையும்.

தொழில் நடைமுறைகள்

கம்பனியின் தொழில் நடைமுறைகள் தொழில் விபரங்கள் தற்போதுள்ள கொள்கைகள் நடைமுறைகள் உள்ளிட்டு ஊழியர்களின் தொழில் ஒப்பந்தங்களில் விசேடமாக குறித்துக்காட்டப்பட்டவையாக இருக்கும் என்பதில் தொழில் வழங்குநர்களும் ஊழியர்களும் இணங்கியுள்ளதோடு தற்போதுள்ளவையும் காலத்திற்கு காலம் கம்பனியினால் வேறுபட்டு அமைகின்றதுமான புதிய கோட்பாடுகளின் அறிமுகம் அல்லது தற்போதுள்ள கொள்கைகள், நடைமுறைகள், செயற்பாடுகள் தொழில் விபரங்கள் பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் என்பவற்றுக்கான திருத்தங்களின் புதிய நோக்கு சிறந்த ஆளுகை நடைமுறைகளுக்கு கட்டுப்பட்டு கம்பனியின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான செயலாற்றுகை மதிப்பீடுகளையம் உள்ளடக்கியிருக்கும்.

பதிவியினர் நலனோம்புகை

எமது ஊழியர்களின் ஊக்குவிப்பு மட்டங்களை மிகவும் உயர்ந்த தரத்தில் வைத்துக்கொள்வதற்காக நலனோம்புகை வசதிகளில் பெரும் பகுதியொன்றை நாம் வழங்குகின்றோம். இது வீட்டுப்பாவனை பொருட்களை சலுகை அடிப்படையில் வழங்குதல், கம்பனியினால் பேணப்பட்டு வருகின்ற விடுமுறை பங்குகளை சலுகைக் கட்டத்தில் வழங்குதல் போன்ற நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டமல்லாத நலனோம்புகைத் திட்டங்களை உள்ளடக்குகின்றது. நியதிச்சட்ட நலனோம்புகைத் திட்டங்கள் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான உரிய நேரத்திலான கொடுப்பனவுகளைச் செலுத்துதல் ஊழியர் சேமலாப நிதி பணிக்கொடை நிதி, பிரசவ கால விடுமுறைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. ஏனைய நியதிச் சட்டமல்லாத நலனோம்புகைத் திட்டங்களில் உடற்கட்டு வசதிகள் உணவக வசதிகள், உள்ளக மருத்துவ நிலைய வசதிகள் மருத்துவத் திட்டங்கள் காப்புறுதி போன்றவற்றை சலுகை அடிப்படையில் வழங்குதல் என்பவற்றை உள்ளடக்குவதோடு பல்வேறுபட்ட சங்கங்கள் உதாரணமாக சிக்கன சங்கம், விளையாட்டுச் சங்கம், இலக்கிய சங்கம் போன்றவற்றினூடான நலனோம்புகைகளையும் உள்ளடக்குகின்றன.

ஊழியர் சிறப்புக் குறிப்பு

தொடர்புகொள்ளும் வகையில் ஊழியர்கள்

ஊழியர் வகை	2016	2015	2014
நிரந்தரப் பதவியினர்	2,308	2,177	2,163
ஒப்பந்தப் பதவியினர்	124	107	186
மொத்தம்	**2,432**	**2,284**	**2,349**

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன அணி

தரம் மற்றும் பால் அடிப்படையில் வேலைவாய்ப்பு

	எண்ணிக்கை			வகுப்பாக்கம் %	
	பெண்	ஆண	மொத்தம்	பெண்	ஆண
சிரேட்ட முகாமைத்துவ	14	54	68	20.6	79.4
முகாமையாளர்	34	114	148	23.0	77.0
உதவி முகாமையாளர்	42	99	141	29.8	70.2
நிறைவேற்றுத் தரம்	363	192	555	65.4	34.6
அதிவிசேட *	34	1	35	97.1	2.9
அதிவிசேட ** (தேர்ச்சிபெற்ற)		6	6	0.0	100.0
எழுதுநர்	649	449	1098	59.1	40.9
தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம்		169	169	0.0	100.0
எழுதுநர் அல்லாத தரம்	24	138	162	14.8	85.2
சிற்றூழியர்தரம்	2	48	50	4.0	96.0
மொத்தம்	**1162**	**1270**	**2432**	**47.8**	**52.2**

**நிறைவேற்றுத் தரங்களுக்கு சமாந்தரமான எழுதுநர் பதவிகளிலிருந்து பதவியுயர்வுபெற்ற ஊழியர்கள் இதனைப் பிரதிநிதித்தவப்படுத்துகின்றனர்.*

***எழுதுநர் தரங்களுக்கு சமாந்தரமான எழுதுநர் அல்லாத தரங்களிலிருந்து உயர் மட்டத்தை அடைந்த ஊழியர்கள் இதனைப் பிரதிநிதித்தவப்படுத்துகின்றனர்.*

வயதுப் பகுப்பாய்வு

வயதுப் பிரிவு	பெண்	ஆண்	மொத்தம்
18-25 வயது	81	73	154
26-35 வயது	337	408	745
36-45 வயது	252	428	680
46-55 வயது	393	278	671
55 வயது மற்றும் அதற்கு மேல்	99	83	182
மொத்தம்	**1162**	**1270**	**2432**

பிரதேச ரீதியில் ஊழியர்கள்

பிரதேசம்	ஊழியர்கள்	
	எண்ணிக்கை	%
அநுராதபுரம்	94	3.9
பதுளை	67	2.8
மத்திய -i	92	3.8
மத்திய-ii	51	2.1
கொழும்பு-i	90	3.7
கொழும்பு-ii	62	2.5
கொழும்பு-iii	83	3.4
கொழும்பு-iv	12	0.5
கிழக்கு	40	1.6
காலி	70	2.9
கம்பஹா	61	2.5
ஹம்பாந்தோட்டை	11	0.5
யாழ்ப்பாணம்	40	1.6
களுத்துறை	61	2.5
குருநாகல்	105	4.3
மாத்தறை	89	3.7
நீர்கொழும்பு	95	3.9
இரத்தினபுரி	72	3.0
தலைமை அலுவலகம்	1237	50.8
மொத்தம்	**2432**	**100.0**

பயிற்சி

நடப்பு ஆண்டு காலத்தில் இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனமானது ஊழியர்களின் பயிற்சிக்காக உள்ளக மற்றும் தேசிய, சர்வதேச அடிப்படையில் சுமார் ரூபா 8.7 மில்லியன்களை முதலீடு செய்தது. இதில் முக்கிய கவனமாக எடுத்துக்கொள்ளப்பட்ட விடயம் யாதெனில் வியாபாரத்தின் நீடித்த நிலைமைக்கும் வளர்ச்சிக்குமான கனிட முகாமையாளர்களின் அடுத்த கட்டத்தை விருத்தி செய்வதாகும். இது தொடர்பில் முன்னனி கல்வி நிலையங்களுடன் கனிட முகாமையாளர்களின் திறன்கள் மற்றும் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக முன்னனி கல்வி நிலையங்களின் பங்குபற்றுதலுடன் முன்னைய நிதியாண்டில் ஒரு தொடர் முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு

வகை	2016 (ரூபா)	2015 (ரூபா)
வதிவிடப் பயிற்சி	707,255	2,344,749
வெளிவாரியான பயிற்சி	40,125	1,041,044
மாநாடுகள்	423,743	281,696
வெளிநாட்டுப் பயிற்சி	5,094,421	18,787,230
காப்புறுதி மற்றும் தொழிற் கல்வி	2,474,365	1,296,918
தொழில் உறுப்புரிமைகள்	1,102,642	842,616

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

	2016	2015
நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	93	95
மணித்தியாலங்களின் எண்ணிக்கை	1,151	1,459

தூண்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்

	2016	2015
நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	2	0
மணித்தியாலங்களின் எண்ணிக்கை	15.5	0

மில்லியன் டொலர் வட்ட மேசை அமர்வில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பங்கேற்றல்

MDRT®

Sri Lanka Insurance
Like a father - Like a mother

2016 யூன் 12 முதல் 15 வரை கனடாவின் வென்குவர் நகரில் இடம்பெற்ற சிரேஷ்ட மில்லியன் டொலர் வட்ட மேசை வருடாந்த மாநாட்டுக்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதி விற்பனை அடைவாளர்கள் 42 பேர் மீண்டுமொருமுறை சர்வதேச அரங்கில் அதன் கொடியை பறக்கவிட்டனர். இது முன்னனி நிதி கைத்தொழில் நிகழ்வொன்றில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை பிரதிநிதித்துவம் செய்வதற்கான மிகப் பெரிய பாக்கியமாகும்.

மில்லியன் டொலர் வட்ட மேசை மாநாட்டுக்கான அங்கீகாரமானது ஒரு சிறப்புரிமையாக இருப்பதோடு, இது ஆயுள் காப்புறுதியிலும் மற்றும் ஏனைய நிதிக் கைத்தொழில் துறையிலும் மிகச் சிறந்தவர்களுக்கான ஒரு மதிப்பாகும். பொது மக்களுக்கு எமது அங்கத்தவர்களின் அலாதிய தொழில்சார் அறிவு கட்டுப்பாடான ஒழுக்கவியல் நடத்தை மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை என்பவற்றை உத்தரவாதப்படுத்த வழங்கப்பட்ட ஒரு விருதாகும்.

இந்த சிறப்புமிகு ஒன்றுகூடலுக்கு தகைமை பெறுவதற்கு இலங்கையின் காப்புறுதி ஆலோசகர்கள் ரூபா 4.8 மில்லியனுக்கு மேற்பட்ட தவணை இலக்குகளை அடைய வேண்டிய தேவை இருந்ததோடு, ரூபா 14.4 மில்லியன் மற்றும் 28.8 மில்லியன் போன்ற இலக்குகளைத் தாண்டிச் சென்றவர்கள் வட்ட மோசை மன்றத்திற்கும் வட்டமேசையின் மிகச் சிறந்ததோர் அங்கத்துவவத்திற்கும் முறையே தகுதிபெற்றனர். சுமார் 71 நாடுகளிலுள்ள 470 க்கும் மேற்பட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 43,000 க்கும் மேற்பட்ட தொழில்வாண்மையாளர்களைக் கொண்ட ஓர் அமைப்பே மில்லியன் டொலர் வட்டமேசை மாநாடாகும்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன அணி

இலங்கை காப்பறுதிக் கூட்டுத்தாபன நச்சத்திர விருது 2016



இலங்கை காப்பறுதிக் கூட்டுத்தாபன நச்சத்திர விருது 2016 இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன விற்பனைக் குழுக்களின் மிகச் சிறந்த அடைவாளர்களை கௌரவிப்பதற்காக பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

நட்சத்திர விருதானது இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அதன் விற்பனைக் குழுவின் கீர்த்திமிக்க செயலாற்றுகையை செய்தவர்களை அங்கீகரிப்பதற்காக ஏற்பாடு செய்யப்படுகின்ற ஒரு வருடாந்த நிகழ்வாகும். 2015 ஆம் ஆண்டில் அவர்களது விற்பனை செயலாற்றுகைக்காக அங்கீகரிக்கப்பட்டு விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளனர். நட்சத்திர விருதுகள் இரவு 426 மிகச் சிறந்த காப்புறுதி விற்பனை செயலாற்றுகையாளர்களை அடையாளங் கண்டதோடு செயலாற்றுகையாளர்களையும் குழு தலைவர்களையும் அடையாளங் கண்டு அவர்களது மிகச்சிறந்த விற்பனை செயலாற்றுகைக்கான விருதுகள் வழங்கப்படுகின்றன. அவர்கள் விற்பனை இலக்குகள் மற்றும் தராதரங்களை அடைதலில் அடிப்படையில் விருது வழங்கி வைக்கப்படுகின்றனர். முதலாவது மற்றும் இரண்டாவது இடத்திலுள்ளவர்களுக்கும் விருது வழங்கப்படுவதோடு அவர்களின் சகாக்களின் அடைவுகளை பாராட்டுவதற்கு பிரசன்னமாக இருக்கின்றனர்.

மிகச் சிறந்த பிராந்திய விற்பனை முகாமையாளர்கள், விற்பனை முகாமையாளர்கள், குழுத் தலைவர்கள் மற்றும் ஆலோசகர்கள் ஆகியோர் அவர்களது தொடர்புடைய வியாபார பகுதியின் கீழ் அங்கீகரிக்கப்படுவதோடு ஆயுள் மற்றும் ஆயுள் அல்லாத காப்புறுதி வியாபாரங்கள் போன்றவற்றுக்கு சான்றுதழ்கள் மற்றும் பண விருதுகளும் வழங்கப்படுகின்றன. இந்த வகுதிகளின் கீழ் மிகச் சிறந்த விருதுபெறுபவர் விருதையும் அத்தோடு இணைந்ததாக ஒரு நினைவுச் சின்னத்தையும் பெறுகின்றார். இந்த நிகழ்ச்சியானது அடைவாளர்கள் கழக அங்கத்தவர்கள் பிளட்டினம் நட்சத்திர கழகம் பிளட்டினம் கழகம் ஆகியோரைப் பாராட்டுவதோடு, 2016 ஆம் ஆண்டில் கனடாவில் எக்குவார் நகரில் இடம்பெற்ற சர்வதேச மில்லியன் டொலர் வட்ட மேசை மாநாட்டில் பங்குகொண்ட அமைப்புக்களின் 42 அங்கத்தவர்களும் இதில் பாராட்டப்பட்டனர். ஏனைய அடைவாளர்கள் இந்த மிகச் சிறப்புமிக்க நிகழ்ச்சியில் விருது வழங்கப்பட்ட ஏனைய அடைவாளராக கூட்டாண்மை வியாபார அபிவிருத்திப் பிரிவு தொழில்நுட்ப விற்பனைப் பிரிவு மற்றும் நிதி வியாபார அபிவிருத்திப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களையும் உள்ளடக்குகின்றது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கபீர் ஹாசீம் அவர்களும் பொது முயற்சிகள் அபிவிருத்திப் பிரதி அமைச்சர் திரு. இரான் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சின் செயலாளர் திரு ரவீந்திர ஹேவாவிதாரண ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர். இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபையானது திரு அமரசூரிய அவர்களின் தலைமையில் வழிநாடாத்தப்படுவதோடு கூட்டாண்மை முகாமைத்துவ விற்பனை ஆலோசகர்கள் ஊழியர்கள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இதில் நாடு முழுவதிலுமிருந்து சுமார் 1,600 இற்கும் மேற்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் **220-248**

கூட்டாண்மை சமுகப் பொறுப்புடைமை

வருடாந்தம் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது பல தனவந்த தாராண்மைக் கொடுப்பனவுகளுக்குப் பங்களிப்புச் செய்வதோடு, பல கூட்டாண்மை சமுகப் பொறுப்பு கருத்திட்டங்களையும் நடாத்தி வருகின்றது. இவற்றின் சில செயற்பாடுகள் சில விசேடமாக கீழே தரப்பட்டிருக்கின்றது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன புலமைப்பரிசில் திட்டம்



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன சுபபெத்தும் புலமைப்பரிசில் திட்டத்தின் மூன்றாவது விருது வழங்கும் வைபவம் நவம்பர் மாதத்தில் நெழும் பொகுண கலையரங்கில் இடம்பெற்றதோடு இது 25 மாட்டங்களைச் சேர்ந்த சுமார் 307 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த தனித்துவமான புலமைப்பரிசில் திட்டமானது 2013 யூன் மாதத்தில் கல்விசார் ரீதியாக சிறப்பு வாய்ந்த பரம்பரையொன்றை போசிப்பதற்கான நிகழ்ச்சியொன்றாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிதிசார் புலமைப்பரிசில்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த நான்கு மிகச் சிறந்த அடைவாளர்களுக்கும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் மாவட்ட அடிப்படையில் மிகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற 4 மாணவர்களுக்கும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 100 மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றது. இதில் 25 மிகச் சிறந்த தரப்படுத்தல் மாணவர்கள் உயிரியல், விஞ்ஞானம், கணிதம், வர்த்தக மற்றும் கலை ஆகிய துறைகளை உள்ளடக்கியதாக இருக்கின்றன. ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் விருதானது தலா மாணவர்களுக்கு ரூபா 20,000 உம் சாதாரண தர புலமைப்பரிசிலானது தலா மாணவர்களுக்கு ரூபா 40,000 உம் உயர்தரத்தில் தகுதிபெற்ற மாணவர்களுக்கு ரூபா 50,000 உம் கொடையாக வழங்கப்படுகின்றது.

மாணவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இலங்கைக் காப்புறுதி ஆயுள் கொள்கை வைத்திருப்பவராயின், அனுகூலமானது வருடாந்த கொடுப்பனவாக தொடரான காலங்களுக்கு மாணவர் அடுத்து வரும் தேசிய மட்ட பரீட்சையை எதிர்கொள்ளும் வரை வழங்கப்படும். தகுதியுடைய மாணவர்கள் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சுப பெத்தும் புலமைப்பரிசில் திட்டத்தைப் பெறுவதற்கு விண்ணப்பித்தல் வேண்டும். இந்தத் திட்டமானது அத்தகைய கைத்தொழிலில் அத்தகைய திட்டங்களில் மிகவுமே பயன்மிக்க திட்டமொன்றாக இருப்தோடு இது வருடாந்தம் சுமார் 300 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஆதரவளிக்கின்றது. மொத்தமான புலமைப்பரிசில் வழங்கலின் தொகையானது ரூபா 18 மில்லியனுக்கும் மேற்பட்டதாகக் காணப்படுகின்றது.

நன்கொடை வழங்குவதற்கான அழைப்பு



2015 ஆம் ஆண்டில் நன்கொடை வழங்குவதற்கான பிரச்சார அழைப்பினூடாக கொண்டு வரப்பட்ட CPAP இயந்திரமானது புற்றுநோய் மருத்துவமனையின் உடற்கட்டிசார் சிகிச்சைப் பிரிவின் சிரேட் உசாவுணர் கலாநிதி தயமந்த பீரிஸ் அவர்களிடம் கையளிக்கப்பட்டதோடு, இலங்கை உடற்கட்டிசார் சிகிச்சைப் கல்லூரியின் தலைவர் இணைந்த முகாமைத்துவப் பணிப்பாளர் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கீத் பெனாட் (இடது) மற்றும் தலைவர் ஹேமக அமரசூரிய (வலது) ஆகியோரும் காணப்படுகின்றனர்.

2016 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் 1 ஆந் திகதி இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட நன்கொடை வழங்குவதற்கு அழைப்பு விடுக்கும் இயக்கமானது நவம்பர் 30 ஆம் திகதிய கடைசித் திகதிக்கு மிகவும் முன்னரே இரண்டு வார குறுகிய காலப்பகுதியினுள் 500,000 இற்கும் மேற்பட்ட தவறிய அழைப்புக்களுக்கு கவர்ந்திழுத்து மிகப் பெரிய வெற்றியைக் கண்டுள்ளது.

நன்கொடை வழங்குவதற்கு அழைப்பு விடுக்கும் கருத்திட்டமானது ஊசுசுவு இயந்திரத்திற்கு நிதியளிப்பதற்கான கருத்திட்டத்திற்கான பொதுமக்கள் ஈடுபாட்டைப் பெறுவதற்காக, தவறிய அழைப்பு என்ற புதிய பொறிமுறையொன்றைப் பயன்படுத்தியது. இது மஹரகம தேசிய புற்றுநோய் நிறுவத்திற்குரியதாகும். மக்கள் “1357” என்ற ஒரு தவறிய அழைப்பை விடுத்து அத்தகைய ஒவ்வொரு தவறிய அழைப்பிற்கும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 10 ரூபாவை புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்புச் செய்கின்றது.

கடந்த வருடம் நவம்பர் மாத்தில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட நன்கொடை வழங்குவதற்கு அழைப்பு விடுவதற்கான பிரச்சாரத்தின் முதலாவது அழைப்பு 350,000 தவறிய அழைப்புக்களை கவர்ந்திழுத்து இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் புற்றுநோய் வைத்தியசாலைக்கு ரூபா 3.5 மில்லியன் தொகையொன்றை நன்கொடையளிப்பதற்கு இயலச் செய்தது.

கூட்டாண்மை சமுகப் பொறுப்புடைமை

இதன் வெற்றியானது இரண்டாவது கட்டத்தில் சுமார் 500,000 இற்கும் மேற்பட்ட அழைப்புக்களுக்காக நிறுவனத்தை விரிவுபடுத்துவதற்கு இட்டுச் சென்றது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஊயீ இயந்திரமான ரூபா 775,000 பெறுமதியான இயந்திரத்தையும் ரூபா 1.8 மில்லியன் பெறுமதியான செயற்கை உறுப்புக்களையும் முதல் கட்டத்தில் புற்றுநோய் நோயாளிகளுக்கு மிகவுமே தேவைப்படுகின்ற மருந்துப் பொருட்களையும் அன்பளிப்புச் செய்தது. CPAP (தொடரான சாதகமான வான் வழி அழுத்த்) இயந்திரமானது தூக்க க்ட்டத்தில் மூச்சை எடுப்பதற்கு அவதிப்படுகின்ற புற்றுநோய் நோயாளிகளுக்கு இலகுவாக உறங்குவதற்கு உதவி செய்வதாக அமைகின்றது. இதற்கு முன்னர் இத்தகைய ஓர் இயந்திரத்தை புற்றுநோய் ஆஸ்பத்திரி கொண்டிருக்கவில்லை.

புற்றுநோய் ஆஸ்பத்திரியிலுள்ள மிகப்பெரும் முக்கிய தேவைகளிலொன்றாக வைத்தியர்களினால் அடையாளங்காணப்பட்டவாறு ஊசுசுவு (தொடரான நரம்பு மாற்றுகை என்பமச்சை சிகிச்சை) இயந்திரமாக அடையாளங் காணப்பட்டு சிறுநீரக தொழிற்பாட்டில் கூடிய மோசமான நிலையிலுள்ள புற்றுநோய் நோயாளிகளுக்கு ஆதரவளிப்பதாக அமைகின்றது. ஆதலால் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் இரண்டாவது நன்கொடை அளிப்பதற்கான அழைப்பு ஊசுசுவு இயந்திரமொன்றை நன்கொடையாக வழங்குவதற்கு நிதி திரட்டுவதற்காக அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

"பரிசமின் கிஹிங் என்ன" கருத்திட்டம்



இலங்கையின் ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்களின் அனுசரனையின் கீழ் "பரிசமின் கிஹிங் என்ன" என்ற வீதிப்பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் இணை முகாமைத்துவ பணிப்பாளர் கீத் பேர்னாட் அவர்களும் படத்தில் காணப்படகின்றார்.

2015 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட வீதி விபத்துக்களினால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2,722 ஆக அதிகரித்துள்ளது. இதில் 814 பேர் மோட்டார் துவிச்சக்கர வண்டி ஓட்டுநராகவும் 777 பேர் பாதசாரிகளாகவும் 486 பேர் முச்சக்கரவண்டி பயணிகளாகவும் இருந்திருக்கின்றனர். தினமும் வீதி விபத்துக்களில் 8 பேர் மரணத்தைத் தழுவுகின்றனர். ஒவ்வொரு வருடமும் பொலிசாருக்கு சுமார் 40,000 இற்கும் மேற்பட்ட அறிக்கைகள் அறிக்கை செய்யப்படுகின்றன. இவைற்றுள் மேலும் அதிகமானவை பதிவு செய்யப்படாமலேயே செல்கின்றன. வீதி விபத்துக்களினால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் சுமார் 300 என்ற தொகையால் அதிகரித்து வருகின்றது.

"பரிசமின் கிஹிங் என்ன" என்ற கருத்திட்டமானது இலங்கை காப்புறுதி மோட்டார் ப்ளஸின் அடையாளாச்சின்னத்தின் கீழ் இலங்கை ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்களின் அனுசரணையுடன் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் வெகு விமர்சையாக திசெம்பர் 01 ஆம் திகதியன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதேவேளையில் இந்நிகழ்ச்சி சமகாலத்தில் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன் நோக்கம் வீதிப் பாதுகாப்பு தொடர்பாக பொதுமக்களின் விழிப்புணர்வை கட்டியெழுப்புவதாகும். இந்த நிகழ்ச்சி திட்டமானது இலங்கை ரூபவாஹிக் கூட்டுத்தாபனம், இலங்கைப் பொலிஸ் ஆகியவற்றின் இணை அனுசரணையுடன் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரச்சாரமானது சாரதிகளுக்கான சுகாதார முகாம்கள், பேரூந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கான செயலமர்வு, வீதி அடையாளங்கள் மற்றும் கடவைகளை மேம்படுத்துதல் பாடசாலை உள்ளிட்ட வீதிப் பாதுகாப்பு வட்டங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாகவும் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய மாநாடு மற்றும் வீதிப் பெயர்ப் பலகைகள் மற்றும் வீதி நாடகங்கள் என்பனவற்றை குறித்துக் காட்டிய கோட்பாடாக இருக்கின்றது.

முன்னணி மோட்டார் சைக்கிள் காப்புறுதி வழங்குநரான இலங்கை காப்புறுதி, மோட்டார் பிளஸ் வீதிகளின் பாதுகாப்பை மேம்படுத்துகின்ற நிகழ்ச்சித் திட்டத்தில் எப்போதும் முன்னணியில் இருந்து வருகின்றது. சந்தையில் மோட்டார் காப்புறுதி தீர்வுகளுக்கான மிகவும் விரிந்தொரு தீர்வாளராக இலங்கை காப்புறுதி மோட்டார் பிளஸ் நாடளாவிய ரீதியிலான காப்பு 24 மணித்தியால சேவை காப்புறுதித் திட்டத்தில் தெரிவு செய்வதில் நெகிழ்வுத் தன்மை மூன்றாம் தரப்பு கோரிக்கை தீர்வு போன்ற காப்புறுதி வைப்பாளர்களுக்கான பல்வேறுபட்ட அனுகூலங்களை எவ்வித தயக்கமுமின்றி வழங்குவதோடு இது அர்ப்பணிப்புடன் கூடிய வாடிக்கையாளர் சார்ந்த கவனிப்புக் குழுவையும் கொண்டிருக்கின்றது.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

கலாசார பண்டிகைகளை போசித்தல்



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் இணை முகாமைத்துவப் பணிப்பாளர்களான டி.எம்.ஆர். பங்சா ஜயாஹ் மற்றும் கீத் பேர்னல்ட் ஆகியோரும் ஏனைய அதிகாரிகளும் அனுதாபத்தில் இடம்பெற்ற இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன கூட நிகழ்ச்சியில் காணப்படுகின்றனர்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது நாட்டின் கலாசார பாரம்பரியங்கள் அவை பௌத்த, இந்து சயமயத்தவராக அல்லது ஏனைய சவமயத்தவராக சமயத்தவராக இருந்தாலும் அவற்றை மேம்படுத்தி தரமுயர்த்துகின்ற செயற்பாட்டில் எப்போதும் முன்னணியில் இருந்து வருகின்றது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் இது தொடர்பான செயற்பாடுகள் யூன் மாதத்தில் அனுராதபுரத்தில் இடம்பெற்ற போயா பண்டிகை நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையதாக ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பிரதேச சபை மற்றும் பொலீஸ் என்பவற்றின் ஒத்துழைப்புடன் தமது குடும்பத்தாரை இழந்த அல்லது குடும்பத்திலிருந்து பிரிந்த அல்லது ஏனைய குழுக்களுடன் ஒன்றிணைய இருக்கின்ற யாத்திரிகர்களுக்கு உதவுவதற்கான சேவையொன்றை வழங்கி வருகின்றது. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது உதாரணமாக அட்டமஸ்தான போன்ற அனுராதபுரத்திலுள்ள பொசன் பண்டிகைகளோடு தொடர்புடைய முக்கிய மத இடங்களிலிருந்து சுமார் 30 வருடங்களுக்கு மேலாக இந்த சேவையை வழங்கி வருகின்றது.

இதைத்தொடர்ந்து றுகுணு மகா கதரகம தேவாலயவின் மற்றும் தெவிறுவர சிறி விஸ்னுமாக தேவாலைய எசல பெரஹர, யூலை மாத்தில் இது இடம்பெற்றது. இந்த நிகழ்ச்சிகளில் பௌத்த பக்தர்களும் நாட்டின் இந்து சமுகங்களும் கலந்து கொண்டனர். இந்தப் பண்டிகைக் காலத்தின் உச்ச கட்டம்தான் கண்டி எசல பெரஹரவாகும். இது வருடாந்தம் பௌத்தரின் புனித தந்தம் கண்டி புனித தலதா மாளிகை போன்றவற்றை மதிப்பிடுவதற்காகவும் கௌரவிப்பதற்காகவும் வருடாந்தம் இடம்பெற்று வருகின்றது. இந்த பெரஹராவானது உலகின் மிகப்பெரிய மிக அதிகமான யாத்திரிகைகள் ஒன்று கூடுகின்ற பெரஹரவாக பிரபல்யம் பெற்றிருப்பதோடு உலகெங்கிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளையும் கவருவதாக அமைகின்றது.

அனுசரணையாளராக செயற்படுவதற்கு மேலதிகமாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வகிபாகமானது பெரஹராக்களில் பூமியில் சமுகமளித்திருகின்ற அனைவருக்குமான ரூபா 50,000 தனியாள் விபத்துக் காப்பையும் வழங்குவதையும் உள்ளடக்குகின்றது. இதில் பெரஹராவில் பங்குகொள்கின்ற அனைத்து ஆட்கள் அதிகாரிகள் பார்வையாளர்கள் ஆகியோரையும் உள்ளடக்குவதாக அமைகின்றது. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் இந்த சேவையானது "இர ஹந்த பவதின துரு" கொள்கையின் கீழ் மிக நீண்ட காலமாக வழங்கி வரப்படுகின்றது.


இந்த நிகழ்ச்சிகளில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஈடுபாடானது அவர்களது வெற்றிக்கு பங்களிப்பு செய்வதோடு, நாட்டின் வேறுபட்ட சமுகங்களின் மரபு ரீதியான கிரியைகள், கலாசார நடைமுறைகள், பாரம்பரியங்கள் பல எதிர்கால சந்ததியினருக்கும் அனுபவிப்பதற்காக பேணிப் பாதுக்கப்பட்டு வருவதை உறுதி செய்வதாகவும் அமைகின்றது.

ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள்

கூட்டாண்மை ஆளுகை

கம்பனியின் நீண்டகால இலக்குகள், பங்குடைமையாளர்களின் நம்பிக்கை மற்றும் நேர்மறையான மூதலிட்டு பாய்ச்சல்கள் என்பவற்றை அடைந்துகொள்வதற்கான கம்பனி கூட்டாண்மை ஆளுகை வரைசட்டம் விசேட பணியொன்றை வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாக, ஆளுகை வரைசட்டகமானது உன்னத அடிப்படையொன்றின் மீது வழுவான நீண்டகால மூதலிட்டு கொள்கை, பொறுப்புக்கள் மற்றும் மீள்காப்புறுதி அபாயம் என்பவற்றை பேணுவதற்கு உதவுகின்றது. 2013 ஆம் ஆண்டில், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்தனை ஆணைக்குழு என்பவற்றினால் கூட்டாக வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறை கோவை பற்றி பணிப்பாளர் சபையினால் வழிநாடாத்தப்படுகின்றது

சபை, முகாமைத்துவம், பங்குதாரர்கள் மற்றும் ஏனைய பங்குடைமையாளர்கள் ஆகியோருக்கிடையிலான அடிப்படை தொடர்பு எமது ஆளுகை கட்டமைபின் முலம் கீழே காட்டப்பட்டுள்ளவாறு தாபிக்கப்பட்டுள்ளது



பணிப்பாளர் சபை

ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கும் பணிப்பாளர் சபை பொறுப்புக்கூறுகின்ற அதேவேளையில், பங்குதாரர்களுக்கு நீண்டகால மதிப்பை வழங்குவதற்கு சபையின் உபகுழுவின் ஊடாக நேரடியானதும் மறைமுகமானதுமான தலைமைத்துவத்தை வழங்குகின்றது. சபையின் மேற்பார்வை, திட்டமிடல் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு சபையானது நான்கு குழுக்களை தாபித்துள்ளது. அவை கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக்குழு, அபாய முகாமைத்துவக் குழு, முதலிட்டுக் குழு மற்றும் மனித வளக் குழு என்பனவாகும். குழுவானது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சலுகைகள் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் நிருவாக சபைக் கூட்டங்களின் போது அறிக்கைவிடுதல் என்பவற்றின் மூலம் நிருவகிக்கப்படுகின்றது.

சபையின் உப குழுக்கள்

மேலே பெயர்குறிப்பிடப்பட்ட செயற்குழுக்கள் நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்களினால் நிருவகிக்கப்படுகின்ற அதேவேளையில் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழு நிறைவேற்று தரமல்லாத பணப்பாளர்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ளது மனித வளக் குழு, நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர் ஒருவரினால் தலைமைவகிக்கப்படுகின்ற அதேவேளையில் நிறைவேற்றுத் தரப் பணிப்பாளர்களையும் நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களையும் உள்ளடக்கியுள்ளது. எவ்வாறாயினும், நல்லாட்சி கோட்பாடுகளுக்கு இணங்க மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகிய நிறைவேற்றுத்தர பணிப்பாளர்கள், நிறைவேற்றுத்தர பணிப்பாளர்களின் சம்பளத்தை தீர்மானிப்பது சம்பந்தமாக நிதி அமைச்சு மற்றும் பொது தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் இணக்கத்துடன் நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சபைக் கூட்டங்கள், சபையின் உப குழுக் கூட்டங்கள் எனபவற்றின் எண்ணிக்கை மற்றும் இந்தக் கூட்டங்களின் பங்குபற்றிய ஒவ்வொரு பணிப்பாளர்களினதும் வருகை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

சபைக் கூட்டங்கள் – *2016*

2016 ஆம் ஆண்டினுள் 6 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளரின் பெயர்	வரவு
திரு. ஹேமக டீ.எஸ் அமரசூரிய (தலைவர்)	06
திரு. டீ.எம்.ஆர்.பங்கசா ஜாயா (கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளர்)	06
பேராசிரியர் எல்.ஜீ.சந்திரசேன (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)	05
திரு. பீ.அல்கம (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)	05
திரு. கீத் டீ பேர்னாட் (கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளர்)	05
திரு. அசேல எஸ். பத்மபெரும (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)	04
திரு. பிரதீப் ஏ. லியனமான்ன (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)	04

(திரு. கீத் டீ. பேர்னாரட் அவர்கள் 2016.12.20 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக கம்பனியின் சேவையிலிருந்து விலகியுள்ள அதேவேளையில் திரு டீ.பீ. அருண பீ.எஸ். சிறிவர்தன அவர்கள் 2016.12.20 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக நியமிக்கப்பட்டுள்ளார்.)

கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் கூட்டம்' (ACCM) – 2016

2016 ஆம் ஆண்டினுள் 04 கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு கூட்டங்கள் இடம்பெற்றுள்ள அதேவேளையில் பணிப்பாளர் சபையின் திறைசேரி பிரதிநிதி திரு. பீ. அல்கம அவர்கள் சங்கத்தின் தலைவராக செயற்பட்டுள்ளார்.

பணிப்பாளரின் பெயர்	வரவு
திரு.பீ.அல்கம (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)	04
பேராசிரியர் எல்.ஜீ.சந்திரசேன (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)	04

முதலீட்டு குழு கூட்டம் - 2016

2016 ஆம் ஆண்டினுள் 24 முதலீட்டு குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ள அதேவேளையில் கூட்டமானது நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் திரு. பிரதீப் ஏ. லியனமான்ன அவர்கள் தலைவராக செயற்பட்டுள்ளார்.

பணிப்பாளரின் பெயர்	வரவு
திரு. ஹேமக டீ.எஸ் அமரசூரிய (தலைவர்)	19
திரு. டீ.எம்.ஆர்.பங்கசா ஜாயா (கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளர்)	18
திரு. பீ.பீ.ஜே.பெரேரா (நிறைவேற்றுப் பணிப்பாளர்)	09
திரு. பிரதீப் ஏ. லியனமான்ன (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)	13
திரு. கீத் டீ பேர்னாட் (கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளர்)	16

(திரு. பீ.பீ.ஜே.பெரேரா அவர்கள் 2016.03.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக கம்பனியின் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகியுள்ள அதேவேளையில் திரு. கீத் டீ. பேர்னாரட் அவர்கள் 2016.12.20 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக பணிப்பாளர் பதவியிலிருந்து விலகியுள்ளார்)

அபாய முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் - 2016

2016 ஆம் ஆண்டில் 03 அபாய முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் இடம் பெற்றுள்ள அதேவேளையில், அதில் நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர் பேராசிரியர் எல்.ஜீ. சந்தரசேன அவர்களினால் தலைமை தாங்கப்பட்டுள்ளது. நிதி, முதலீடு, ஆயுள் கணிப்பீடு, மில்காப்புறுதி, இணக்கப்பாடு, உள்ளக கணக்காய்வு, மனித வள முகாமைத்துவம் மற்றும் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத் திணைக்களங்கள் போன்றவற்றிலுள்ள அபாய முகாமையாளர்களின் பல்வேறு பிரிவினரை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற விரிவான உறுப்புரிமை ஒன்றினை குழு தன்னகத்தை கொண்டுள்ளது

பணிப்பாளரின் பெயர்	வரவு
திரு. ஹேமக டீ.எஸ் அமரசூரிய (தலைவர்)	02
திரு. டீ.எம்.ஆர்.பங்கசா ஜாயா (கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளர்)	03
பேராசிரியர் எல்.ஜீ.சந்திரசேன (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)	03
திரு. பீ.அல்கம (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)	02

மனிதவள குழுக்கூட்டங்கள் - 2016

நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் பேராசிரியர். லால் சந்திரசேன அவர்களின் தலைமையில் 2016 ஆம் ஆண்டில் 04 மனிதவள குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளரின் பெயர்	வரவு
பேராசிரியர் எல்.ஜீ.சந்திரசேன (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)	04
திரு. அசேல எஸ். பத்மபெரும (நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)	00
திரு. கீத் டீ பேர்னாட் (கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளர்)	01

(திரு. கீத் டீ. பேர்னாரட் அவர்கள் 2016.12.20 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக பணிப்பாளர் பதவியிலிருந்து விலகியுள்ளார்)

ஏனைய செயற்பாட்டுக் குழுக்கள்

மேலே குறிப்பிடப்பட்ட சபையின் உபகுழுக்களுக்கு மேலதிகமாக ஏனைய செயற்பாட்டுக் குழுக்கள், கணக்காய்வு பின்னூட்டல் குழுக்கள், கிளை முகாமைத்துவ விசாரணைக் குழு, முகாமைத்துவ குழு, சட்டக்குழு மற்றும் விற்பனை, சந்தைப்படுத்தல் மீளாய்வுக்குழு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இவை அனைத்தும் ஆளுகைக்கட்டமைபின் மிக முக்கியமாக பணியொன்றை நிறைவேற்றுகின்றது.

பணிப்பாளர் சபை



01

திரு.ஹேமக டீ.எஸ் அமரசூரிய
தலைவர்



02

திரு.டீ.எம்.ஆர்.பங்கசா ஜாயா
கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளர்



03

திரு. அருண சிறிவர்தன
கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளர்



04

பேராசிரியர் எல்.ஜீ.சந்திரசேன
நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248



05

திரு. பிரியங்க அல்கம
நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்



06

திரு.சஞ்ஜய பத்மபெரும
நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்



07

திரு. பிரதீப் லியனமான்ன
நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

பணிப்பாளர் சபை

01. திரு. ஹேமக டீ அமரசூரிய

தலைவர்

மதிப்பிற்குரிய உத்தியோகத்தராகிய திரு. ஹேமக அமரசூரிய அவர்கள் கொழும்பு ரோயல் கல்லூரியின் அபிமானியாக இருக்கின்ற அதேவேளையில் செயல்திறன்மிக்க நிருவாகியாக அவர் தனது தொழிலை ஆரம்பித்துள்ளார். இலங்கையில் சிங்கர் குழுமத்தின் தலைவராகவும் முகாமைத்துவ பணிப்பாளராகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள அதேவேளையில், தேசிய அபிவிருத்தி வங்கியின் தலைவராகவும் இருந்துள்ளார். பாட்டா சூ கம்பனி ஒப் சிலோன் லிமிட்டட், பாட்டா எக்ஸ்போட் பிரைவேட் லிமிட்டட், ஏ சீ எல் கேபல்ஸ் பீஎல்சீ, சீ டப்ளியு மக்கீ பீஎல்சீ, லங்கா அலுமினியம் பீஎல்சீ அன்ட் ஏடீஎம்ஈ பிரின்டிங் அன்ட் பக்கேஜ் பீஎல்சீ மற்றும் ஏனைய பட்டியல்படுத்தப்படாத கம்பனிகளில் திரு.அமரசூரிய அவர்கள் பணிப்பாளர் பதவியை வகிக்கின்றார். அவர் ரிடேல்ஸ் ஹோல்டிங் லிமிட்டட், ஐக்கிய அமெரிக்க சிங்கர் ஏசியா லிமிட்டட் நிறுவனத்தில் உப தலைவராக நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அதேவேளையில் உலகம்பூராகவும் உள்ள சிங்கர் வியாபார சபைகளில் முன்னாள் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார்.

அவர் இலங்கை கைத்தொழில் சங்கத்தின் ஆரம்ப தலைவருமாவார். தற்போது திரு. அமரசூரிய அவர்கள் தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வணிக அமைச்சின் பிராந்திய வர்த்தக சேவைக் குழுவின் தலைவராகவும் சேவையாற்றுகின்றார். அதற்கு மேலதிகமாக அவர் இலங்கை சுகாதார சங்கத்தின் தலைவராகவும் சேவையாற்றியுள்ள அதேவேளையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் பற்றிய ஜனாதிபதி செயலாற்றுகை அணி, பிணைங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கம்பனிச் சட்டம் பற்றிய ஆலோசனைக் குழுவிலும் சேவையாற்றியுள்ளார்.

அவர் இலங்கை அதிகாரம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினராக இருக்கின்ற அதேவேளையில் ஐக்கிய இராச்சியத்தின் அதிகாரம்பெற்ற முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் உலகளாவிய அதிகாரம்பெற்ற முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்திலும் அதேபோன்று ஐக்கிய இராச்சியத்தின் விற்பனை பற்றிய அதிகாரம்பெற்ற நிறுவனத்தின் உறுப்பினருமாவார். அவர் ஐக்கிய அமெரிக்க நியுயோர்க் பல்கலைக்கழகத்தின் விற்பனை முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமாதாரியுமாவார். அதிகாரம்பெற்ற விற்பனை நிறுவனத்தின் ஆசியாவில் விற்பனை சம்பந்தமான அவரின் பங்களிப்பின்பொருட்டு (இலங்கை பிராந்தியம்) ஆரம்பத் தலைவராகவும் அவரை நியமித்ததன் மூலமும் ஆசிய விற்பனை காங்கிரஸினால் தலைமைத்துவத்திற்கு நியமித்ததன் மூலமும் நுகர்வோர் சந்தையினுள் புரட்சிகரமான மாற்றமொன்றை ஏற்படுத்தி விற்பனை தொழிலுக்கு அவரால் மேற்கொள்ளப்பட்ட உன்னத பங்களிப்பின்பொருட்டு ஐக்கிய இராச்சியத்தின் விற்பனை பற்றிய அதிகாரம் பெற்ற நிறுவனத்தின்மூலம் அவரை தூரநோக்குள்ள வியாபார தலைவராக பெயர்குறிப்பிட்டதன் மூலம் விற்பனைத் துறையில் அவரது பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டில் இலங்கை பட்டயர் கணக்காளர் நிறுவனத்தினால் இலங்கையில் தனியார் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் பல தசாப்தங்களாக உன்னத தொழில் தொழிலுக்கும் பொது மக்களுக்கும் தனது சேவையை வழங்கியதன் மூலம் மேண்மைக்கு உரித்தான வாழ்நாள் விருது வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 2013 ஆம் ஆண்டில் அதிசிறந்த வியாபாரப் பெயரின் உரிமையாளராக முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தினால் அவருக்கு விருது வழங்கப்பட்டது

அதேபோன்று அவர் சிறந்த, விளையாட்டு வீரருமாவார்.

02. திரு. டீ.எம்.ஆர். பங்கசா ஜாயா

கூட்டு முகாமைத்துவ பணிப்பாளர்

பொலிஸ் சேவையில் 29 வருடகால அனுவபத்தைக் கொண்டுள்ள திரு. டீ.எம்.ஆர். பங்கசா ஜாயா அவர்கள் ஓய்வுபெற்ற பொலிஸ் அத்தியட்சகர் ஆவார். பொலிஸ் திணைக்களத்தில் அவரது சேவைக்காலத்தினுள் பிரதி சபாநாயகருக்கும், வடகிழக்கு ஆளுநருக்கும் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தராக நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

குருநாகல் புனித அந்தோனியார் வித்தியாலயத்தில் கீர்த்திமிக்க மாணவராக இருந்துள்ள அதேவேளையில் கொழும்பு அக்வைனாஸ் வித்தியாலயத்தில் மேலதிக கல்வியைப் பெற்றுள்ளார் அவர் தனது பாடசாலை வாழ்க்கையில் கிரிக்கட் மற்ற்றும் உதைபந்து போன்ற விளையாட்டுக்களில் சிறப்பான திறமைகளைக் காட்டியுள்ளார். அவர் பாடசாலையின் சாரணர் குழுவில் உறுப்பினராகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் பாடசாலை நடவடிக்கைகளின் பின்னர் அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தில் சட்ட பட்டத்தைப் பூர்த்திசெய்துள்ளார்.

திரு.பங்சா அவர்கள் நிர்மானக் கைத்தொழிலில் 15 வருடத்திலும் கூடுதலான அனுபவத்தைக்கொண்டுள்ள அதேவேளையில் அவர் பிரசித்திபெற்ற பைலி நிறுவனமொன்றின் பிரதான பங்குதாரருமாவார். திரு. ஜயா அவர்கள் களம்பு டொக்கியாட் பீஎல்சீ, மற்றும் மெனேஜ்மன்ட் சேர்விசஸ் இன்சூரன்ஸ் பிரைவேட் லிமிட்டட் போன்ற நிறுவனங்களிலும் பணிப்பாளர் சபைகளிலும் சேவையாற்றுகின்றார்.

அவர் சிலோன் எஸ்ஸட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டடின் தலைவருமாவார்.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

03. திரு. அருண சிறிவர்தன
கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளர்

திரு அருண சிறிவர்தன அவர்கள் இலங்கையில் மாத்திரமன்றி தென் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளிலும் முதலாவது கையடக்கத் தொலைபேசி தொடர்பாடல் சேவை வழங்குநராகிய செல்டல் லங்கா லிமிட்டடின் (தற்போது எடிசலாட்) நிறுவனத்தின் முதலாவது தலைவர் ஆவார். இந்த வலையமைப்பை ஆரம்பிப்பதற்காக 1980 களின் பிற்பகுதியில் ஐக்கிய நாடுகளின் மில்கொம் இன்டன'னல் நிறுவனத்திற்கு அறிமுகப்படுத்தவதற்கு பொறுப்பாக இருந்தார்.

நாட்டினுள் பரீட்சாத்தமான சிகிச்சை முறையைப் பேணுவதற்காக அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட முதலாவது கம்பனியாகிய ரெமடியம் வன் லிமிடட் நிறுவனத்தில் அவர் இணை ஸ்தாபகராகவும் அதேபோன்று பணிப்பாளராகவும்/ பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் இருக்கின்ற அதேவேளையில், டிஜிடல் இன்பொமே'ன் ரெக்னோலோஜீஸ் லிமிடட், பிரசிசன் மோட்டர்ஸ் லிமிடட், டைனாமெட் லிமிடட் மற்றும் இன்டபிரைட் (பிரைவட்) லிமிடட் ஆகியவற்றில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் சேவையாற்றியுள்ளார். திரு அருண சிறிவர்தன அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவகத்திலும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலையரங்க நிறுவனத்தில் பொருளியல் விரிவுரையாளராகவும் சேவையாற்றுகின்றார். அதேபோன்று அவர் த லங்கா ஹொஸ்பிட்டல் கோப்பரே'ன் பீஎல்சீயின் பணிப்பாளருமாவார்.

திரு. அருண சிறிவர்தன அவர்கள் முன்னாள் உயர்மட்ட சிவில் உத்தியோகத்தராகிய காலஞ்சென்ற திரு.டீ.பீ.ஜ.பீஎஸ். சிறிவர்தன அவர்களினதும் எழுத்தாளராகவும் கல்வியியலாளராகவுமான காலஞ்சென்ற திருமதி. எலீன் சிறிவர்தன அவர்களினதும் புதல்வராவார். அவர் கல்கிசை சென் தோமஸ் கல்லூரியின் பழைய மாணவராக இருக்கின்ற அதேவேளையில், புகழ்பெற்ற சங்கீதக் கலைஞராகவும் ஜெஸ் அன்லிமிட்டடின் தலைவருமாவார். இசையின் மீது அவர்கொண்டுள்ள அன்பை அடுத்த பரம்பரைக்கும் கொண்டுசெல்வதற்காக மாணவர்களுக்கு இலவசமாக அவரிடமுள்ள இசை பற்றிய அறிவை வழங்குகின்றார்.

04. வித்யாஜோதி பேராசிரியர். லால் சந்திரசேன
(நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்)

பேராசிரியர். சந்திரசேன அவர்கள் தொழில்ரீதியான மருத்துவ உயிர் இரசாயனவியளாராக இருக்கின்ற அதேவேளையில் பல்கலைக்கழக கல்விச் சேவையில் 24 வருட அனுபவத்தையும் வைத்தியசாலை, சுகாதார பாதுகாப்பு நிர்வாகம், அதேபோன்று ஆய்வுகூட விஞ்ஞானம் பற்றிய 22 வருடத்திற்கும் கூடுதலான அனுபவத்தையும் அவர் பெற்றுள்ளார். அவர் களனி பல்கலைக்கழகத்தில் உயிர் இரசாயன விஞ்ஞானத்தில் இரசாயன விஞ்ஞான மன்றத்தின் பேராசிரியராகவும் மருத்துவ பீடத்தின் சிரேஸ்ட பேராசிரியராகவும் 2011 ஜுன் மாதத்தில் ஓய்வுபெற்றுள்ள அதேவேளையில் தற்போது விருதுபெற்ற பேராசிரியர் என்ற கௌரவ பெயரையும் பெற்றுள்ளார்.

பேராசிரியர் சந்திரசேன அவர்கள் லிவர்பூல் (ஐக்கிய இராச்சியம்) பல்கலைக்கழகத்தில் (சிறப்பு) பட்டத்தைப் பெற்றுள்ள அதேவேளையில் இலங்கை இரசாயன விஞ்ஞான நிறுவனத்தில் உறுப்புரிமையை வகிக்கின்ற அதிகாரம்பெற்ற இரசாயனவியலாளருமாவார். அதற்கு மேலதிகமாக அவர் இரசாயன விஞ்ஞானம் பற்றிய ரோயல் சங்கத்தின் (ஐக்கிய இராச்சியம்) உறுப்புரிமையையும் இலங்கையில் விஞ்ஞானம் பற்றிய தேசிய நிறுவனத்திலும் ஐக்கிய அமெரிக்காவின் கொலராடோ ஸ்டேட் பல்கலைக் கழகத்தின் பட்டப்பின் முதுகலைமாணி உறுப்பினருமாவார். அவர் அதிகாரம்பெற்ற தொழில் முகாமையாளர்களின் நிறுவனத்தின் உறுப்பினராக இருக்கின்ற அதேவேளையில் அஹமதாபாத்திலுள்ள முகாமைத்துவ நிறுவனத்திலிருந்து வைத்தியசாலை முகாமைத்துவம் பற்றிய சான்றிதழையும் பெற்றுள்ளார். அவர் இலங்கை தனியார் வைத்தியசாலை சங்கத்தின் தற்போதைய தலைவருமாவார். அதேபோன்று சுகாதார அமைச்சின் தனியார் சுகாதாரசேவை ஆணைக்குழுவின் உறுப்பினருமாவார்.

அவர் நவலோக ஹொஸ்பிட்டல் பீஎல்சீ, நவலோக ஹொஸ்பிட்டல் இன்டர்நெஷனல் பிரைவேட் (லிமிட்டட்), நவலோக கொலேஜ் ஒப் ஹயர் ஸ்டடீஸ் பிரைவேட் (லிமிட்டட்), நவலோக கார்டியன் இன்டர்நெஷனல் பிரைவேட் (லிமிட்டட்), மற்றும் நவலோக வைத்தியசாலையின் ஆராய்ச்சி மற்றும் கல்வி மன்றம் ஆகியவற்றின் பணிப்பாளரும் ஆவார்.

பணிப்பாளர் சபை

05. திரு. பிரியங்க அல்கம

நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்

திரு. அல்கம அவர்கள் தற்போது நிதி அமைச்சின் பொதுத் திறைசேரியிலுள்ள அரச நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றுகின்றார். அவர் கென் யெங்ங் தொழிநுட்ப (சிங்கப்பூர்) பல்கலைக்கழகத்தில் எம்ஜ (ஐக்கிய அமெரிக்கா) வியாபார நிர்வாகம் பற்றிய பட்டப் பின்படிப்பு பட்டத்தையும் களனி பல்கலைக்கழகத்தில் வர்த்தகமாணி (விசேட) பட்டத்தையும் பெற்றுள்ளார். அவர் அவுஸ்திரேலியாவின் அதிகாரம்பெற்ற கணக்காளர்களின் சங்கத்தில் (சீபீஏ) உதவி உறுப்பினருமாவார். நிதி பரிவர்த்தனை பற்றிய தொகுதி மற்றும் நடவடிக்கைமுறை, அரசாங்கத்தின் பெறுகை கொள்கை வரைசட்டகம், அரசாங்கத்தின் சொத்து முகாமைத்துவம், அரசாங்க நிறுவனங்களின் கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் இணைந்த திட்டம் போன்றவை பற்றிய மிக விரிவான அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

06. திரு. சஞ்சய பத்மபெரும

நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

திரு. சஞ்சய அவர்கள் வடகரோலினா கல்லோபியில் உள்ள மேற்கு கரோலினா பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகம், பிரதானமாக கணனி தகவல் தொகுதி பற்றிய விஞ்ஞானமாணிப் பட்டமொன்றையும் (டீளுஉ) கலிபோர்னியாவின் பிளசன்ட் ஹில் இல் உள்ள டியப்லோவெளி கல்வி நிறுவனத்திலிருந்து கணனி தகவல் பற்றிய தகைமைச் சான்றிதழ் உட்பட வியாபார முகாமைத்துவம் பற்றிய தேசிய நிறுவனத்திலிருந்து (ஜேடீஆ) கணனித்தொகுதி பகுப்பாய்வு மற்றும் திட்டமிடல் பற்றிய டிப்ளோமாவொன்றையும் பெற்றுள்ளார். அவர் சௌத் ஏசியன் டெக்னோலொஜீஸ் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருமாவார். தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் பல்வேறு பக்கத் தோற்றங்களையும் பற்றிய 22 வருடங்களுக்கும் கூடுதலான அனுபவத்தை அவர் பெற்றுள்ள அதேவேளையில் மேற்கு கரோலினா பல்கலைக்கழகத்தில் சிக்மா வீ இன்டர்நெஷனல் பேர்டலிடி கப்பா கம்மா செப்டர் (Kappa Gamma Chapter) சங்கத்தின் அதிகாரம்பெற்ற உறுப்பினருமாவார். சஞ்சய அவர்கள் ரக்பி விளையாட்டில் மேற்குக் கரோலினா பல்கலைக்கழகத்தையும் கூடைப்பந்து விளையாட்டின் செலான் வங்கியையும் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

07. திரு. பிரதீப் லியனமான

நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்

திரு. லியனமான அவர்கள் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையிலும் வெளிநாட்டிலும் தொழிற்சேவை அனுபவத்தைக் கொண்டுள்ள அபிவிருத்தி பொருளாதார நிபுணராவார். போட்டித்தன்மை, முதலீட்டை அதிகரித்தல், உற்பத்தித்திறன் மற்றும் தொழில் ஈடுபாட்டை அதிகரித்து கைத்தொழில் துறைகள் பலவற்றில் சேவையாற்றியுள்ளார். திரு.லியனமான அவர்கள் கொள்கை மறுசீரமைப்பை மேற்கொள்வதிலும் விரிவுபடுத்துவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் அரசாங்க மற்றும் தனியார்துறைகளிடையே பங்குபற்றுதலை அதிகரித்துள்ளார். அதற்கு மேலதிகமாக கொள்கை மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது உடன்பாட்டைக் கட்டியழுப்புவதற்காக தொழிற்சங்கங்கள், தனியார் மற்றும் அரசதுறை உட்பட பல்வேறு தரப்பினர்களுடனும் அவர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். திரு.லியனமான அவர்கள் பங்கு முதலீடுகளுக்கு வழியமைக்கக்கூடிய அரசாங்க மற்றும் தனியார்துறையின் பங்குடைமை வியாபாரங்களுக்குரிய அடிப்படை நடவடிக்கைகள் பலவற்றை முகாமை செய்துள்ளார்.

திரு. லியனமான அவர்கள் கிங்ஸ்விலே டெக்சான் ஏ.என்ட்.எம். பல்கலைக் கழகத்திலிருந்து விவசாய பொருளாதார விஞ்ஞானம் பற்றிய பட்டப்பின்படிப்பு பட்டத்தையும் டெக்சான் சென் அன்டோனியோ இன் காணோட் வேர்ட் பல்கலைக்கழகத்தில் விற்பனை மற்றும் முகாமைத்துவத் தகவல் முறையில் பட்டப்படிப்பையும் பெற்றுள்ளார்.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

சிரேட்ட முகாமைத்துவ அணி

இல.	பெயர்	பதவி	தகைமைகள்
1.	திருமதி.சுரேஷ் பரணவிதாண	பிரதம உத்தியோகத்தர்-ஆயுள்/தலைமை உத்தியோகத்தர்	FCII, MBA, DipM, FCIM, M.I. Mgt, CMA (Aus)
2.	திருமதி. ருவன்தி குணரத்ன (2017.01.16 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக நியமிக்கப்பட்டுள்ளார்.)	பிரதம உத்தியோகத்தர் - சாதாரண காப்புறுதி	FCII, Chartered Insurer
3.	திரு. ரஞ்சித் பெரேரா (2017.04.30 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக ஓய்வுபெற்றுள்ளார்.)	சிரேட்ட பி.பொ.மு. - நிதி பிரதம நிதி உத்தியோகத்தர்	BSc (Hons) (Pub.Admin.Sp.), MBA, MA, PG. Dip. in Corp. Finance, FCMA, FCA
4.	திருமதி. ஈ.எம்.மாலனீ தென்னகோன் (2017.03.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக நியமிக்கப்பட்டுள்ளார்.)	பிரதம நிதி உத்தியோகத்தர்	MBA, FCA (SL), CPA (AUS), CIMA (UK)
5.	திருமதி. நிரோஷா பெதியாகொட	பி.பொ.மு.- சந்தைப்படுத்தல்	MBA (MGSM, Syd), FCIM (UK), DipM (UK), Chartered Marketer
	திரு. அஜித் விஜேசுந்தர	பி.பொ.மு.-தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல்	Bsc (Eng.), MBA
6.	திருமதி. தனுஜா ஹிங்குலகே	பி.பொ.மு.- சாதாரண காப்புறுதி	BSc. (Hons), FCII (UK), Chartered Insurer, ANZIIF (Fellow)
7.	திரு. நலீன் சுபசிங்ஹ	பி.பொ.மு.- ஆயுள் கணிப்பீடு மற்றும் அபாய முகாமைத்துவம்	MSc in Actuarial Management. (UK), BSc (Hons. Mathematics Special), Dip. in Computer Studies
8.	திரு. தனுக லியனகமகே	பி.பொ.மு.- முதலீடுகள்	BSc (Eng) (Hons), MBA (Finance), CFA, Member of the CFA Institute (USA) and CFA Sri Lanka Society
9.	திருமதி. ருவணி தர்மவர்தன	பி.பொ.மு.- இணக்கப்பாடு ∴ கம்பனிச் செயலாளர்	LLB, Attorney-at-law, MBA, ACISI (UK)
10.	திரு. தயரத்ன பெரேரா	பி.பொ.மு. - ஆயுள் (தொழில்நுட்பம்)	BSc (Hons), FCII, Dip. In BA, Chartered Insurer, MBA (USJ), AUKP (UK)
11.	டாக்டர் (திருமதி.) செரிகா பெர்னான்டோ	பி.பொ.மு. - மருத்துவம்	MBBS (SL), MSc -Community Medicine (SL), ACII (UK), MRCGP (INT)(UK),Ad. Dip in Insurance-CII, Dip in Life & Disability claims
12.	திரு. ஹசன்த பெரேரா	பி.பொ.மு. - தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் ஆளுகை மற்றும் நிருவாகம்	MSc (IT), MSC (Const. P.Mgmt.), MBA, BSc (Eng.), AIPMSL, AIESL, Dip. in Credit Mgmt. (IBSL)
13.	திரு. ரசிக ரணதுங்க	பி.பொ.மு. - வசதிகள் முகாமைத்துவம்	Member (ASHRAE) (USA), Member (ASHRAE) (SL), Dip. HVAC (USA)
14.	திரு. ஜெரோன் வின்சன்ட்	பி.பொ.மு. - விற்பனை ஆதரவு	B.com (Special - Hons), MBA, Dip. in Journalism, Dip. in Marketing (UK) MCIM, AIII
15.	திரு. சமிந்த அதாஉத	பி.பொ.மு. - ஆயுள் (தொழில்நுட்பம்)	BSc.(Hons), FCII, AIII, ANZIIF (Fellow), MBA (Colombo), Chartered Insurer
16.	திருமதி. சம்பா கன்னங்கர	பி.பொ.மு. - தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முறை அபிவிருத்தி	BSc, Msc (Comp.Sc.), MBCS
17.	திருமதி. நாமலி சில்வா	பி.பொ.மு. - சந்தைப்படுத்தல் மற்றும் கூட்டுறவுத் தொடர்பாடல்	MCIM (UK), Chartered Marketer, Prof. Dip. in Marketing-CIM, ACIB (UK)
18.	திரு. சமிந்த குணசிங்ஹ	பி.பொ.மு. - நிதி	B.B.Mgt. (Accountancy) Sp. (Hons), FCA, ACMA, MBA(Finance)
19.	திரு.மாலக பண்டார	பி.பொ.மு. - முகாமைத்துவக் கணக்கீடு மற்றும் வரவுசெலவுக் கட்டப்பாடு	BSc. - Accountancy (Sp.), FCA, MBA (Colombo)
20.	திரு.லலித் டீ சில்வா	பி.பொ.மு. - மோட்டார்	P.G. Dip. In Finance & Bus. Admin., MBA
21.	திரு.ரொ'ான் கொல்லாஸ்	பி.பொ.மு. -தேசிய விற்பனை (ஆயுள்)	MBA, CMA (Aus), Dip. In Marketing(SLIM), MSLIM, FCPM, MIM (SL)
22.	திரு. மஹேந்திர சில்வா	பி.பொ.மு. - நிருவாகம் மற்றும் தொழிலாளர் உறவுகள்	Attorney-at-Law, LLB (SL), MBA in HRM (OUSL), PG . Dip in HRM, NDES, MIIE (SL), I ENG, AMIPM (SL)
23.	திரு. சுதத் சி'ான்த (2016.08.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக நியமிக்கப்பட்டுள்ளார்.)	பி.பொ.மு. - தேசிய விற்பனை (ஆயுள் அல்லாத)	B.Sc. (B/Admin.)(Sp.), MIM (SL), PG. Dip. in Labour Relations & HRM
24.	திரு. லக்ஷ்மன் ரணசிங்ஹ (2017.04.03 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக நியமிக்கப்பட்டுள்ளார்.)	பி.பொ.மு. -ஆழவழச (தொழில்நுட்பம்)	MIE (SL), MIIE (SL), FIAE (SL)
25.	திரு. சந்ரசிறி கன்னிலே (2017.03.31 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக விலகியுள்ளார்.)	பிரதான உத்தியோகத்தர்-நிருவாகம் மற்றும் மனித வளம்	MBA, B.LE (Sp.), FCMI (UK), FIMSL, FIPM, Dip. In Journalism, National Dip. In PM (IPM), HNDA, National Dip. in Teaching (NIE), MITD (SL)

சிரேட்ட முகாமையாளர்கள்

இல.	பெயர்	பதவி
26.	திரு. ட‌ப்ளியு.டீ.சீ.விதானகே	சிரேட்ட முகாமையாளர் -பிரதான கணக்குகள்
27.	திரு. சீ.வீ.எஸ்.பெர்னான்டோ	பிரதிப் பிரதம மோட்டார் பொறியியலாளர்
28.	திரு. எஸ்.பீ.ஏ.ரொட்ரிகோ	சிரேட்ட முகாமையாளர் - பாதுகாப்பு
29.	திரு. ட‌ப்ளியு.ஆர்.எம்.எச்.பி.வீரசூரிய	சிரேட்ட முகாமையாளர் - விசேட கருத்திட்டங்கள்
30.	திரு. கே.ஜீ.டீ.ஜீ.கந்தெகம	சிரேட்ட முகாமையாளர் - தகவல் தொழில்நுட்ப தரவு நிலையம்
31.	திருமதி. ட‌ப்ளியு.எஸ்.குலசிங்ஹ	சிரேட்ட முகாமையாளர் - நிதி
32.	திரு. கே.எஸ்.பு'பகுமார	சிரேட்ட முகாமையாளர் - விசேட கருத்திட்டங்கள் (ஆயுள்)
33.	திரு. டீ.பீ.ஜே.எஸ்.மைத்ரீரத்ன	சிரேட்ட முகாமையாளர் - சாதாரண விபத்து
34.	திருமதி. டீ.என்.சீ.ஏ.குணவர்தன	சிரேட்ட முகாமையாளர் - கடல் அபாயக் கப்புறுதி
35.	திரு. என்.ஜீ.கே.பண்டார	சிரேட்ட பிராந்தியப் பொறியியலாளர்
36.	திரு. ஆர்.எம்.ஏ.கே.ராஜபக்'	சிரேட்ட முகாமையாளர் பொறியியலாளர்
37.	திரு. எம்.டீ.சந்திரம்	சிரேட்ட முகாமையாளர் - எம்ஈ மாற்று வழிப் பிரிவு (சாதாரண)
38.	திரு. ஏ.ஜீ.எம்.எம்.கமகே	சிரேட்ட வகுதி முகாமையாளர் - சாதாரண
39.	திரு. ஆர்.என்.சேனாதீர	சிரேட்ட மோட்டார் பொறியியலாளர்
40.	திருமதி. எம்.டீ.அத்தநாயக்க	சிரேட்ட முகாமையாளர் - சட்டம் (ஆயுள்)
41.	திரு. பீ.ஏ.எம். பீ.ட‌ப்ளியு.குணதிலக	சிரேட்ட முகாமையாளர் - வலையமைப்பு மற்றும் தொலைத்தொடர்பு
42.	திரு. எம்.ஜே.எஸ். தபரேரா	சிரேட்ட முகாமையாளர் - வங்கிக் காப்புறுதி (ஆயுள்)
43.	திருமதி. ஜீ.கே.எம்.எஸ்.நானயக்கார	சிரேட்ட முகாமையாளர் - ஆயுள்
44.	திரு. ஜீ.ட‌ப்ளியு.ஆர்.சீ.டீ சில்வா	சிரேட்ட முகாமையாளர் - ஆயுள்
45.	திரு. ஜீ.ஏ.பீ.தே'ப்பிரிய	சிரேட்ட முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு
46.	திருமதி. எச்.எல்.ஆர்.ஏ.விஜேவர்தன	சிரேட்ட முகாமையாளர் - சட்டம் (நிருவாகம்)
47.	திருமதி. எஸ்.பதிரண	சிரேட்ட முகாமையாளர் - சட்டம் (தலைப்புக் காப்புறுதி)
48.	திருமதி. என்.டீ.கே.எம்.ஜயதிலக	சிரேட்ட முகாமையாளர் - சட்டம் (சட்டவாக்கம்)
49.	திரு. எம்.கே.எஸ்.பெர்னாண்டோ	பிராந்திய விற்பனை முகாமையாளர்
50.	திரு. ட‌ப்ளியு.எல்.ஜே.ட‌ப்ளியு.கே.வெல்கம	பிராந்திய விற்பனை முகாமையாளர்
51.	திரு. எம்.டீ.பீ.நவகமுவ	பிராந்திய விற்பனை முகாமையாளர்
52.	திரு. ரீ.டீ.பீ.பீரிஸ்	பிராந்திய விற்பனை முகாமையாளர்
53.	திரு. யூ.ஜீ.யூ.ஆர்.குமார	பிராந்திய விற்பனை முகாமையாளர்
54.	திரு. எம்.பீ.என்.குமார	பிராந்திய விற்பனை முகாமையாளர்
55.	திரு. டீ.என்.கே.நாரங்கம்மன	சிரேட்ட முகாமையாளர் -வுளுனு
56.	திரு. ட‌ப்ளியு.எம்.ஏ.யூ.கே.குலசேன	பிராந்திய விற்பனை முகாமையாளர்
57.	திரு. ஆர்.ஹேவாபதிரணகே	பிராந்திய விற்பனை முகாமையாளர்
2. முதலீட்டுக் கொள்கைகள் எந்தவொரு நிதியத்தின் தேவைப்பாட்டுக்கும் ஆதரவளிப்பதற்குத் தேவையான சொத்துக்கள்-பொறுப்புக்கள் முகாமைத்துவத்துடன் இணங்குகின்றது என்பதை உறுதிப்படுத்துதல்.
3. எதிர்காலத்தில் முதிர்வடைதல் மற்றும் வட்டி வீதங்கள் என்பவற்றை மீளாய்வுசெய்வதற்கும் முதலீடுகளை.. அகற்றல்களை அனுமதிப்பதற்கும் தேவையான விதத்தில் அடிக்கடி, இருப்பினும் ஒரு மாதத்திற்கும் குறைவான காலப்பகுதியில் குழுக் கூட்டங்களை நடாத்துதல்.
4. வெவ்வேறான வங்கிக் கணக்குகளினூடாக நிதியத்தின் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்.
5. முதலீட்டுச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் தேவைப்பாடுகள் என்பவற்றை மீளாய்வுசெய்வதற்கு பணிப்பாளர் சபைக்கு காலாண்டுரீதியில் அறிக்கைகளை வழங்குதல்.
6. தொழில்முறை நடத்தை பற்றிய சீஎப்ஏ நிறுவனத்தின் சொத்து முகாமைத்துவக் கோவைக்கு இணங்க செயற்படுதல்.
7. அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கைகள் மற்றும் பணிப்பாளர் சபையினால் வேண்டப்படுகின்ற வேறு ஏதேனும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் முகாமைசெய்வதற்கும் முதலீட்டு ந்வடிக்கைகளில் ஒதுக்கப்பட்ட வளங்கள் போதுமானது எனபதை உறுதிப்படுத்துதல்.

கண்காணிப்பு மற்றம் கட்டுப்பாடு

முதலீட்டுக் குறிக்கோள்களை அடைந்துகொள்வதில் தொடர்ச்சியான சாத்தியவளத்தையும் அவற்றின் குறிக்கோள்களையும் அடைந்து கொள்வதற்காக முதலீட்டுக் கொள்கைக் கூற்றின் பொருத்தப்பாட்டை தீர்மானிப்பதற்காக முதலீட்டுச் செயலாற்றுகை அவ்வப்போது மீளாய்வு செய்யப்படுகின்றது.

கம்பனியினால் தனது முதலீட்டை தனித்தனியாகவோ அல்லது தொகுதியாகவோ முறையாகக் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதந்கும் முதலீட்டுத் தொகுதியை வினைத்திறனுடனும் பயன்மிக்கதாகவும் மேற்பார்வை செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் முகாமைத்துவ நடைமுறைகளைத் தாபித்துள்ளது.



திரு. பீ.ஏ. லியனமான்ன
தலைவர் - முதலீட்டுக் குழு
2017 மே மாதம் 25 ஆம் திகதி

நிதிக் கூற்றுக்கள்

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

கம்பனியின் பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

பொது

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம், 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை முறைப்படுத்தும் சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தரச்சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கும் தேவைகளுக்கும் கூட்டாண்மை ஆளுகையின் சிறந்த நடைமுறைகளுக்கும் இணங்கியதாக கம்பனியினதும் கூட்டு வியாபாரத்தினதும் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் அந்த நிதிக் கூற்றுக்களுடன் அந்த நிதிக் கூற்றுக்களின் மீதான கணக்காய்வாளரின் அறிக்கையுடன் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் தமது அறிக்கை உறுப்பினர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2016.12.31 ஆம் திகதியில் கம்பனியின் பங்குகளில் நூற்றுக்கு 99.97% இலங்கை அரசாங்கத்தின் பொருட்டு திறைசேரியின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

வரையறுக்கப்பட்ட லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா தனியார் நிறுவனம், கெனொவின் ஹொட்டெல்ஸ் மற்றும் ஸ்பா தனியார் நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட முகாமைத்துவ சேவை காப்புறுதி தனியார் நிறுவனம் ஆகிய கம்பனிகள் முழுமையாக கம்பனிக்குச் சொந்தமான துணைக்கம்பனிகளாகும். வரையறுக்கப்பட்ட லிட்ரோ கேஸ் லங்கா நிறுவனத்திடமிருந்து நூற்றுக்கு 99.94% பங்கு உரிமைகளில் மற்றும் லங்கா ஹொஸ்பிட்டல் கோபரேசன் பீ.எல்.சீ நிறுவனத்தின் நூற்றுக்கு 54.61% பங்கு உரிமை வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானதாகும். மேலும், வரையறுக்கப்பட்ட கென்வில் ஹோல்டிங்க்ஸ் தனியார் நிறுவனத்தின் நூற்றுக்கு 45.95% பங்குரிமை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானதாகும்.

கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமும் தலைமை அலுவலகமும் கொழும்பு 02 வோக்ஷோல் வீதி, இலக்கம் 21 இலுள்ள "ரக்ஷன மந்திர" யில் அமைந்துள்ளது.

இந்த அறிக்கை பணிப்பாளர் சபையினால் 2017.04.21 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

கம்பனியினதும் குழுமத்தினதும் வியாபாரத்தின் பிரதான செயற்பாடுகள்

இலங்கையினுள் ஆயுள் காப்புறுதி மற்றும் ஆயுள் அல்லாத காப்புறுதிக் (சாதாரண காப்புறுதி) கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவது கம்பனியின் பிரதான பணியாகும். மீளாய்வு வருடத்தினுள் கம்பனியின் பிரதான செயற்பாடுகளில் முன்னணி மாற்றங்கள் எதுவும் கிடையாது.

வரையறுக்கப்பட்ட லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா தனியார் நிறுவனம் திரவ பெற்றோலிய வாயு களஞ்சியப்படுத்தல் வரையறுக்கப்பட்ட லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா தனியார் நிறுவனம் வீட்டு, வர்த்தக மற்றும் தொகை என்ற விதத்தில் திரவ பெற்றோலிய வாயுவை இறக்குமதி செய்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது.

லங்கா ஹொஸ்பிடல் கோபரேசன் பீ.எல்.சீ நிறுவனம் சுகாதார பாதுகாப்பு சேவைகளை வழங்குவதிலும் வரையறுக்கப்பட்ட முகாமைத்துவ சேவைக் காப்புறுதி தனியார் நிறுவனத்தினால் சம்பளக் கொடுப்பனவு முகாமைத்துவ சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

வரையறுக்கப்பட்ட கென்வில் ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனத்தின் நிதி ஹோட்டல் கருத்திட்டத்தை முகாமை செய்வதில்/ முதலீடு செய்வதில் கெனொவின் ஹொட்டெல்ஸ் மற்றும் ஸ்பா தனியார் நிறுவனம், ஆரம்பத்தில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஓய்வெடுக்கும் துறையை நிர்வகிக்கின்றது.

நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளரின் பொறுப்புக்கள்

கம்பனியினதும் பங்குடைமை வியாபாரத்தினதும் நடவடிக்கை பற்றிய உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்துவதற்காக நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பது பணிப்பாளர்களின் பொறுப்பாகும். பொருத்தமான விதத்தில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்யும் போதும் பயன்படுத்தும் போதும் சந்தர்ப்பத்திற்கேற்ற விதத்தில் கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போதும் தவறுகள் மற்றும் மோசடி ஆகியவற்றின் காரணமாக ஏற்படக்கூடிய பிழையான கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதும் நியாயமான முறையில் சமர்ப்பிப்பதும் பற்றிய உள்ளக நிர்வாகத்தைத் திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதனைப் பேணிவருதல் இந்தப் பணிப்பாளர்களின் பொறுப்புக்களில் உள்ளடங்குகின்றன.

நிதி நிலைமைக் கூற்று, இலாப நட்ட மற்றும் ஏனைய விபரமான வருமானக் கூற்று, பங்குரிமையாளர்களின் உரிமை மாற்றம் பற்றிய கூற்று, நிதிப் பாய்ச்சல் கூற்று. இந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள், இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் முறைப்படுத்தல் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் ஆகியவற்றுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயமாகும்.

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கை

இலங்கை அதிகாரம்பெற்ற கணக்காய்வாளர்களின் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை நிதி பணிக்கொடைத் தரங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பிரதான நிதி உத்தியோகத்தர் மற்றும் பணிப்பாளர்கள் ஆகியோரினால் கையொப்பமிடப்பட்ட பங்குடைமை வியாபாரத்தினதும் கம்பனியினதும் நிதிக் கூற்றுக்கள் இந்த வருடாந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர்களின் அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளராக கணக்காய்வாளர் அதிபதி நியமிக்கப்பட்டுள்ளார். 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் பற்றிய வருடாந்த கணக்காய்வை மேற்கொள்ளும் போது கணக்காய்வாளர் அதிபதிக்கு உதவியளிப்பதற்காக இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(4) ஆம் பிரிவின் பிரகாரம் தகைமைபெற்ற கணக்காய்வாளராக பீஎஓ பார்ட்னர் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் அறிக்கையின் ஒரு முக்கியமான பகுதியாக இருக்கக்கூடிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கை ஆண்டறிக்கையில் தரப்படுகின்றது.

கம்பனியின் பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

கணக்காய்வு மற்றும் ஏனைய தொடர்புடைய சேவைகளுக்கான கட்டணம்

மீளாய்வு வருடத்தினுள் கணக்காய்வுக் கட்டணம் மற்றம் ஏனைய தொடர்புடைய சேவைகளுக்காக வழங்கப்பட்ட நிதித் தொகைகள் கீழே காட்டப்பட்டுள்ளன. இந்த அத்தியாயத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தொடர்புடைய உரிமைகளுக்கு மிகவும் கூடுதலான உரிமைகள் கம்பனி குறித்து கணக்காய்வாளர்களிடம் காணப்படுவதில்லை என்பதை பணிப்பாளர்கள் அறிந்துவைத்துள்ளனர்.

	2016	2015
	ரூபா 000	ரூபா 000
நியதிச்சட்ட கணக்காய்வுக் கட்டணம்	3,700	3,900
கணக்காய்வு சம்பந்தமான சேவைகள்	1,000	2,095
கணக்காய்வு அல்லாத சேவைகள்	-	4,740

கணக்கீட்டுக் கொள்கைகள்

இந்த நிதி கூற்றுக்கைகளைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்ட பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த ஆண்டறிக்கையில் தரப்படுகின்றன.

அபாயம் மற்றும் உள்ளக நிர்வாகம்

நிறுவனத்தின் அபாய முகாமைத்துவ செயற்பாடுகள் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றது. அபாய முகாமைத்துவ அத்தியாயத்தின் கீழ் பின்பற்றப்படுகின்ற கொள்கைகள் மற்றும் நடவடிக்கை முறைகள் விபரிக்கப்படுகின்றது.

சிறந்தமுறையில் உள்ளக நிர்வாக முறையொன்று உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டுள்ள அதேவேளையில் கம்பனியின் கணக்காய்வு இணக்கக் குழுவினால் உள்ளக நிர்வாக முறைமை மேற்பார்வை செய்யப்படுகின்றது.

மீளாய்வு வருடத்தினுள் நிறுவனத்தினுள் காணப்பட்ட வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகம் மற்றும் அபாய நடவடிக்கை செயற்பாடுகள் தொடர்பில் பணிப்பாளர் சபை திருப்தியடைகின்றது.

தொடர்ச்சியாக மேற்கொள்வதன் தேவை

கம்பனி மற்றும் பங்குடைமை வியாபாரத்தினால் நிதி ரீதியான நிலைமைகள் மற்றும் செயலாற்றுகை, பணப்பாய்ச்சல் மற்றும் நியமங்கள், தாபனக்கோவை விடயங்களைக் கவனத்திற்கொண்டு அறிந்துகொள்ளக்கூடிய எதிர்காலம் வரையான அதன் செயற்பாடுகளை முன்கொண்டு செல்வதற்கு போதியளவு வளங்கள் கம்பனிக்கும் பங்குடைமை வியாபாரத்திற்கும் இருக்கின்றது என்பதை சபையினால் எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது தொடர்ச்சியாக மேற்கொள்வதன் தேவை என்ற அடிப்படையைப் பயன்படுத்துகின்றது.

விற்பனைப் புறழ்வு / மொத்தத் தவணைத் தொகை

மீளாய்வு வருடத்திற்காக கம்பனியின் மொத்த விற்பணைப் புறழ்வு ரூபா. 42,107 மில்லியன்களைப் பதிவுசெய்துள்ள அதேவேளை ஒப்பீட்டுரீதியான (2015) எண்ணிக்கைக்காக ரூபா. 31,156 மில்லியன் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டுக்காக மொத்தத் தவணைத் தொகையாகிய ரூபா 27,614 மில்லியன்களில் ரூபா 11,893 மில்லியன் ஆயுள் காப்புறுதி மொத்தத் தவணையாகவும் ரூபா 15,720 மில்லியன் ஆயுள் காப்புறுதியல்லாத காப்புறுதியின் மொத்தத் தவணைத்தொகையையும் உள்ளடக்கியுள்ளது. 2015 இல் பதிவாகிய மொத்தத் தவணைத் தொகையின் பெறுமதி ரூபா 24,520 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளையில் அதில் ரூபா 10,470 மில்லியன் ஆயுள் காப்புறுதி மொத்தத் தவணைத் தொகையாகவும் ரூபா 14,050 மில்லியன் ஆயுள் காப்புறுதியல்லாத காப்புறுதியின் மொத்தத் தவணைத் தொகையாகப் பதிவாகியது. கம்பனியினால் அடையப்பெற்ற முழுமொத்த தவணைத் தொகையின் விபரமான பகுப்பாய்வொன்று நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

நிதிப் பெறுபேறுகளும் ஒடுக்கீடுகளும்

	2016	2015
	ரூபா 000	ரூபா 000
வரிவிதிப்புக்கு முன்னரான இலாபம்	13,791	4,820
வருமான வரிச் செலவுகள்	1,050	1,381
வரிவிதிப்புக்கு பின்னரான இலாபம்	12,741	3,439
ஏனைய முழுமையான வருமானம்	(159)	8
பங்குதாரர்களுக்கான மாற்றல்கள்	600	500
முன் கொண்டுவரப்பட்ட பகிரப்படாத இலாபம்	24,338	23,954
ஒதுக்கீடுகளுக்காகவுள்ள இலாபம்	37,520	27,901
ஒதுக்கீடுகள்		
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	10,011	2,003
மிகை இலாப வரி	-	635
ஆயுள் காப்புறுதியிலிருந்து பங்குதாரர்களுக்கு மாற்றக்கூடிய மிகை	3,845	925
முன் கொண்டுவரப்பட்ட பகிரப்படாத இலாபம்	23,664	24,338

பங்கிலாபம்

2016.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்காக பங்கொன்றுக்கு ரூபா 10.01 வீதம் (மொத்தம் ரூபா 6,003,429,432 தொகை) வழங்கப்பட்ட சாதாரண பங்கின் மீது செலுத்த வேண்டியதும் 2016.08.30 ஆம் திகதியில் உள்ளவாறு முழுமையாகச் செலுத்தப்பட்ட முதலாவது இடைக்கால பங்கிலாபம் பணிப்பாளர் சபையினால் வெளிப்படுத்தப்பட்டது. 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்காக பங்கொன்றுக்கு ரூபா 1.67 வீதம் (மொத்தம் ரூபா 1,001,571,144 தொகை) வழங்கப்பட்ட சாதாரண பங்கின் மீது செலுத்த வேண்டியதும் 2016.10.31 ஆம் திகதியில் உள்ளவாறு முழுமையாகச் செலுத்தப்பட்ட இரண்டாவது இடைக்கால பங்கிலாபம் பணிப்பாளர் சபையினால் வெளிப்படுத்தப்பட்டது. மேலும், 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்காக பங்கொன்றுக்கு ரூபா 1.67 வீதம் (மொத்தம் ரூபா 1,001,571,144 தொகை) வழங்கப்பட்ட சாதாரண பங்கின் மீது செலுத்த வேண்டியதும் 2016.11.30 ஆம் திகதியில் உள்ளவாறு முழுமையாகச் செலுத்தப்பட்ட முதலாவது இடைக்கால பங்கிலாபம் பணிப்பாளர் சபையினால் வெளிப்படுத்தப்பட்டது.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

மேலும் 2016.06.30 ஆம் திகதியன்று வியாபார நடவடிக்கைகளை மூடும் வேளையில் உள்ளவாறு கம்பனியின் பங்கு வழங்கப்பட்டதும் சாதாரண பங்கின் மீது செலுத்தப்பட்ட பங்கு உரிமையாளர்களுக்கு 2017.07.01 செலுத்த வேண்டிய பங்கிற்கு ரூபா 4.76 வீதம் இறுதிப் பங்கிலாபமொன்றை (மொத்தம் ரூபா 2,852,097,469.99 தொகை) பணிப்பாளர் சபை பரிந்துரைசெய்கின்றது.

சொல்லப்பட்ட இடைக்கால பங்கிலாபங்களுக்கும் வெளிப்படுத்தப்பட்ட இறுதிப் பங்கிலாபங்களுக்கும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 56 ஆவது பிரிவில் காட்டப்பட்டுள்ள விதமாக கடனைச் செலுத்துவதன் ஆற்றல் குறித்து கம்பனி திருப்தியடைகின்றது என்பதனை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அவ்வாறான சான்றிதழ் கணக்காய்வாளர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டுக்காக பங்கொன்றுக்கு ரூபா 3.34 வீதம் ரூபா 2,003,142,288/- பங்கிலாபம் பணிப்பாளர் சபையினால் வெளிப்படுத்தப்பட்டது.

வரிவிதிப்புக்கான ஏற்பாடு

கம்பனியின் வரி நிலைமை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஒதுக்கங்கள

தொடர்புடைய வருடத்தினுள் ஒதுக்கங்களில் பங்குரிமையாளர்களின் உரிமை மாற்றமடைதல் பற்றிய கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

காப்புறுதி மற்றும் ஏனைய ஏற்பாடுகள்

பணிப்பாளர்களினால் ஆயுள் காப்புறுதியல்லாத காப்புறுதி வியாபாரங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆனால் பதிவுசெய்யப்படாத உரிமை கோரப்படாததும் மேற்கொள்ளப்பட்டதுமான ஆனால் போதியளவில் பதிவுசெய்யப்படாத உரிமைகோரலுக்கான ஏற்பாடுகளுட்பட சம்பாதிக்கப்படாத தவணைத்தொகை மற்றும் செலுத்தவேண்டியுள்ள உரிமைக் கோரிக்கைக்கான போதிய ஏற்பாடுகளை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்கு சகல நியாமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. மேற்கொள்ளப்பட்ட ஆனால் பதிவுசெய்யப்படாத உரிமைக் கோரல்களின் ஒதுக்கத்தை மதிப்பீடுசெய்யும் நடவடிக்கைமுறைக்காக பணிப்பாளர்களினால் சுயாதீன ஆயுள் கணிப்பீட்டாளர்களின் ஆலோசனை பெறப்பட்டுள்ள அதேவேளையில் அவர்களின் அறிக்கை இந்த வருடாந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை கணக்கீட்டுத் தரங்களின் இலக்கம் 19 ஊழியர் நன்மைகளுக்கிணங்க தேவையான விதத்தில் பணிக்கொடை பொறுப்புக்களும் சுயாதீன ஆயுள் கணிப்பீட்டாளர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் திகதியில் நிதிக் கூற்றுக்களில் பற்றாக்குறையான ஏற்பாடுகளின் காரணமாக ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் பற்றி பணிப்பாளர்கள் அறிந்திருக்கவில்லை.

முதலீடுகள்

2016.12.31 ஆம் திகதியில் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் பெறுமதி ரூபா 152,445 மில்லியன் (2015 இல் ரூபா 147,538 மில்லியன்) ஆகக் காணப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் விபரமான வெளிப்படுத்துகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் பற்றிய தகவல்கள் இந்த ஆண்டறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

தனியுரிமைச் சொத்துக்களின் சந்தைப்பெறுமதி

கம்பனியினால் காணி மற்றும் கட்டடங்கள் தவிர்ந்த சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணம் போன்றவற்றைப் பதிவுசெய்வதற்கான கணக்கீட்டுக் கொள்கையாக செலவீட்டு முறையைப் பயன்படுத்துகின்றது. கம்பனியின் சொத்துக்களை மீண்டும் மதிப்பீடு செய்வது தொடர்பிலான கம்பனியின் கொள்கை, அதனை ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஒருமுறை மேற்கொள்வதாகும். ஆதன் பிரகாரம் 2016 ஆம் நிதியாண்டில் சுனில் பிரனாந்து அசோசியேட் (தனியார்) கம்பனியின் மூலம் காணி மற்றும் கட்டடங்கள் மீண்டும் மதிப்பீடுசெய்யப்பட்டது. அந்த சொத்துக்கள் சந்தைப் பெறுமதிக்கான திறந்த சந்தைப் பெறுமதியொன்றின் அடிப்படையில் மீண்டும் மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளது. அந்த மீள்மதிப்பீட்டின் பெறுபேறு அது செயல்வலுப்பெறுகின்ற திகதியாகிய 2016.12.31 ஆம் திகதி முதல் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அறிக்கையிட்ட திகதியின் பின்னர் ஏற்பட்ட நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக் குறிப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றமை தவிர நிதிக் கூற்றுக்களின் சீராக்கம் செய்யப்படவேண்டிய அல்லது வெளிப்படுத்துவதற்கான தேவையாகிய எந்தவொரு நிகழ்வும் அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் இடம்பெறவில்லை.

தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டுத் தரங்களின் இல.24, தொடர்புடைய தரப்பினர்களின் வெளிப்படுத்தல்களின் பிரகாரம் நிதிகப் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படுகின்ற தொடர்புடைய தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள் இந்த வருடாந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

உடன்படிக்கைகளில் பணிப்பாளர்களின் ஆர்வம்

உடன்படிக்கை பற்றிய பணிப்பாளரின் பிணைப்பு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிணைப்பு பற்றிய பணிப்பாளர்களது கூட்டங்களில் உரிய விதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் கம்பனியின் எந்தவொரு பகுதியையும் வகிப்பவரல்லர்.

பணிப்பாளர்களின் ஊதியம்

வருடத்தினுள் பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்ட கட்டணம் மற்றும் வேதனாதிகள் ரூபா 19.5 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளையில் கடந்த வருடத்தில் பதிவாகிய எண்ணிக்கை ரூபா 17.2 மில்லியனாகும்.

வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கு இணங்கியதாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட கம்பனியின் வெளிப்படுத்தப்பட்ட மூலதனம் ரூபா 6000 மில்லியனாகும். 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்தில் பங்குகளில் 99.97மூ இலங்கை அரசாங்கத்தின் பொருட்டு திறைசேரியின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

நியதிச்சட்டமுறைக் கொடுப்பனவு

தமது உயர்ந்தபட்ச அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் கம்பனியினால் அரசாங்கத்திற்கு, இலங்கை காப்புறுதிச் சபைக்கு மற்றும் ஊழியர்கள் சம்பந்தமான சகல நியதிச்சட்டமுறை கொடுப்பனவு உரிய நேரத்தில் வழங்கப்பட்டுள்ளது என்பதையிட்டு பணிப்பாளர்கள் திருப்தியடைந்துள்ளனர்.

தொட்டுணரமுடியாத சொத்துக்கள்

2016.12.31 ஆம் திகதியளின் கம்பனியின் தொட்டுணரமுடியாத சொத்து கம்பனி நிதிக் கூற்றுக்களில் காட்டபட்டுள்ளது.

சூழல்

எமது நிறுவனம் சூழலைப் பாதுகாப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள சகல சட்டதிட்டங்களுக்கும் இணங்கியதாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அதேவேளையில் எந்தவொரு பாதகமான நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை.

விதி மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குதல்

கம்பனியினால் நிதியாண்டினுள் அது தொடர்பான சகல விதமான நிதி மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க செயற்பட்டுள்ளது. கம்பனியின் இணக்கப் பணிகள் இணக்கக்கூட்டுத் திணைக்களத்தினால் மேற்பார்வை செய்கின்ற அதேவேளையில் அவை பற்றிய கணக்காய்வு மற்றும் இணக்கக் குழு அறிக்கையிடுகின்றது.

நிதிக் கூற்றுக்களின் அங்கீகாரம்

கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகள் பணிப்பாளர் சபையின் மூலம் 2017.05.25 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை

திரு. ஏ.டீ.எஸ். அமரசூரிய (தலைவர்)
திரு. டீ.எம்.ஆர். பங்கசா ஜாயாஹ் (கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளர்)
திரு. டீ.பீ. அருண பீ.எஸ். சிறிவர்தன (கூட்டு முகாமைத்துவப் பணிப்பாளர்)
வித்யா ஜோதி பேராசிரியர் எல்.ஜீ.சந்திரசேன (நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)
திரு. பீ.அல்கம (நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)
திரு. அசேல எஸ். பத்மபெரும (நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)
திரு. பிரதீப் ஏ. லியனமான (நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)
(திரு. கீத் டீ. பேர்னாரட் அவர்கள் 2016.12.20 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக கம்பனியின் சேவையிலிருந்து விலகியுள்ள அதேவேளையில் திரு டீ.பீ. அருண பீ.எஸ். சிறிவர்தன அவர்கள் 2016.12.20 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக நியமிக்கப்பட்டுள்ளார்.)

வருடாந்த பொதுக்கூட்டம்

கொழும்பு 02 வொக்ஷோல் வீதியில் இல.21 எனும் இடத்தில் அமைந்துள்ள கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் கேட்போர்கூடத்தில் 2017.06.30 ஆம் திகதியன்று வருடாந்த பொதுக்கூட்டம் இடம்பெறும்.

அறிக்கையின் உள்ளடக்கத்தை ஏற்றுக்கொள்ளுதல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 168 (1) (ஒ) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டுள்ளவாறு பணிப்பாளர் சபையினால் இந்த அறிக்கையின் உள்ளடக்கம் இத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

சபையின் கட்டளைப்படி,

பி.ஏ. ருவணி தர்மவர்தன
கம்பனியின் செயலாளர்
2017 மே மாதம் 25 ஆம் திகதி

பணிப்பாளர் சபையின் சார்பில்

ஹேமக்க.டீ.எஸ்.அமரசூரிய

டீ.எம்.ஆர்.பங்கசா ஜாயா

டீ.பீ. அருண பீ.எஸ். சிறிவர்தன

பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பின்வரும் கூற்றுக்களில் விபரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர்களின் பொறுப்புக்கள் ஆண்டறிக்கையில் கணக்காய்வாளர்களின் அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகள் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலின் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கு இணங்கியதாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயமாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் எப்பொழுதும் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதும் புத்திசாலித்தனமான தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதும் பணிப்பாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் அடிப்படையினை ஏற்புடையதாக்கிக் கொள்வதனை நியாயப்படுத்துவதற்காக செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேகொள்வதற்குப் போதுமான வளங்கள் கம்பனியிடம் இருக்கின்றது என்பதனை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். அதற்கு மேலதிகமாக, நிறுவனத்தின் நிதி நிலைமை பற்றி நியாயமாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்துவதற்காக போதியளவான கணக்கு அறிக்கைகள் கம்பனியினால் பேணப்பட்டு வருகின்றது என்பதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும் நட்டம் ஏற்பட்டபோதிலும் அறிக்கையிடப்படாத உரிமைகள் மற்றும் கிடைக்க வேண்டியவை உட்பட சம்பாதிக்கப்படாத காப்புறுதித் தவணை, எதிர்பாராத அபாயம், நிலுவை உரிமைக் கோரிக்கைகள் ஆகியவற்றுக்காக போதுமான ஏற்பாடுகளை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபையினால் நியாயமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு கம்பனியினால் செலுத்த வேண்டிய சகலவிதமான வரிகள், தீர்வை வரிகள் மற்றும் அறவீடுகள் அதேபோன்று கம்பனியின் ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய சகல பங்களிப்புத் தொகைகள் மற்றும் வரிகள், ஏனைய ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிச்சட்டமுறை கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்பதை அல்லது செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதை தமது அறிவுக்கு எட்டிய வரையில் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தியுள்ளது. ஆயுள் காப்புறுதி நடவடிக்கைகளின் போது காப்புறுதிக் காப்பீட்டு உரிமையாளருக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடை, மற்றும் பங்கு உரிமையாளர்களுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய மிகை என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட ஆயட் கணிப்பீட்டு அறிக்கை பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சபையின் கட்டளைப்படி,



பி.ஏ. ருவணி தர்மவர்தன
கம்பனியின் செயலாளர்
2017 மே 25 ஆம் திகதி

பிரதான நிதி உத்தியோகத்தரின் பொறுப்பு பற்றிய கூற்று

2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் (கம்பனி) நிதிக் கூற்றுக்கள் மற்றும் கம்பனியினதும் துணைக் கம்பனிகளினதும் (குழுமம்) திரண்ட நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தரங்கள், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கக் காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குவிதிச் சட்டம் ஆகியவற்றின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியதாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது. நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்கள் என்பவற்றைத் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட மாதிரிகள் தொடர்புடைய ஒழுங்குபடுத்துநர் நிறுவனங்களினால் நிர்ணயிக்கப்பட்ட மாதிரிகளுக்கு இணங்கியதாகும்.

இந்த ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய நிதித் தகவல்கள் என்பன மீளாய்வு வருடத்தினுள் கம்பனியின் நிதி நிலைமை, செயற்பாட்டுப் பெறுபேறுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் சகல முக்கியமான பிரிவுகளிலும் நியாயமாக எடுத்துக் காட்டப்படுகின்றது என்பதை எமது அறிவுக்க எட்டிய வரையில் நாம் உறுதிப்படுத்துகின்றோம். இதற்கு மேலதிகமாக கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு போதமான வளங்கள் இருக்கின்றது என்பதையும் இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தும் அடிப்படைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

முகாமைத்துவம் தனது நிதி சம்பந்தமான அறிக்கையிடல் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக இருக்கின்றது. பிரதான நிதி உத்தியோகத்தர் என்ற வகையில் நிதி அறிக்கையிடல் சம்பந்தமாக போதுமான கணக்கீட்டுக் கொள்கைகள், நடவடிக்கைமுறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தாபித்து பேணிவருவது எனது பொறுப்பாகும். நிதிக் கூற்றுக்களின் சகல முக்கியமான பிரிவுகளிலும் சரியானதும் பூர்த்தியானதும் என நியாயமான உத்தரவாதத்தை வழங்கும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை முகாமைத்துவம் தன்னகத்தே கொண்டுள்ளது. நிதிரீதியான பதிவுகள் நம்பகமானது எனவும், நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக பொருத்தமான அடிப்படையொன்று ஏற்படுத்திக்கொள்ளப்படுகின்றது எனவும், சொத்துக்கள் முறையான விதத்தில் கணக்குவைக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றது எனவும் முகாமைத்துவம் நம்புகின்றது.

சுயாதீன பணிப்பாளர் ஒருவரினால் தலைமைதாங்கப்படுகின்ற கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவொன்றை பணிப்பாளர் சபை நியமித்துள்ளது. கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவின் பொறுப்புக்களில் நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபைக்கு அவற்றைப் பரிந்துரைசெய்தல் என்பன உள்ளடங்குகின்றன.

இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அவர்களினால் நிறுவனத்தின் பங்குதாரர்களின் சார்பில் நிதிக் கூற்றுக்கள் கணக்காயவு செய்யப்பட்டுள்ளன. சுயாதீன கணக்காய்வாளர் ஒருவருக்கு கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவுக்கு முழுமையாகவும் சுயாதீனமாகவும் பிரவேசிக்கக்கூடியதாக இருக்கின்ற அதேவேளையில், முகாமைத்துவத்துடனோ அல்லது முகாமைத்துவம் இன்றியோ கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டுக் குழுவை சந்திக்க முடியும்.

எமது அறிவுக்கு எட்டிய வரையில் -


i. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறன்றி தொடர்புடைய சகல சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்கியதாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும்,

ii. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறன்றி இணக்கமின்மைகள் இல்லை என்பதையும்,

iii. அறிக்கையிடப்படுகின்ற திகதியில் உள்ளவாறு கம்பனியினால் செலுத்த வேண்டிய வரிகள், தீர்வை வரிகள் மற்றும் ஏனைய நியதிச் சட்டமுறைக் கொடுப்பனவுகள் மற்றும் கம்பனியின் ஊழியர்கள் சார்பிலும் செலுத்தப்பட வேண்டிய சந்தாக்கள் மற்றும் வரிகள் செலுத்தப்பட்டுள்ளது என்பதை அல்லது அதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதையும்,

iv. பின்னர் எடுப்பதற்கான ஒதுக்கங்கள் மற்றும் கடன்தீர்க்கும் வழிகாட்டல்களுக்கு இணங்கநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள அதேவேளையில், அனுமதிக்க வேண்டிய சொத்துக்களை சீராக்குவதன் மூலம் மொத்த ஒதுக்கங்களுக்கும் உதவியாக இருக்கும் என்பதையும்

v. ஏற்புடையதாக்கிக் கொள்ளக்கூடிய ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக பங்கு மூலதனம் வழங்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள் எதிர்க்கொள்ளப்படகின்றத என்பதையும் உறுதிப்படுத்துகிறோம்.



மாலனீ தென்னகோன்
பிரதான நிதி உத்தியோகத்தர்
2017 மே 25 ஆம் திகதி

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

காப்புறுதியாளரின் ஆயுள் கணிப்பீட்டு சான்றிதழ்

Willis Towers Watson

தனிப்பட்டதும் அந்தரங்கமானதும்

2017 மே 05

பணிப்பாளர் சபை
வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
இல.21, வொக்ஷோல் வீதி,
கொழும்பு – 02, இலங்கை

2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் நீண்ட கால காப்புறுதி நடவடிக்கைகளில் ஆயுள் கணிப்பீட்டு மதிப்பீடு

2014 ஜூன் 23 எனும் தேதியிடப்பட்ட ஒப்பந்தக் கடிதத்தின் பிரகாரம், வில்ஸ் டுவர்ஸ் பிரைவட் லிமிட்டடினால் ("வில்ஸ் டுவர்ஸ் வொட்சன்", "நாம்", "எமது", "எமக்கு") 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நீண்ட கால காப்புறுதி நடவடிக்கைகளில் நீண்ட கால காப்புறுதி பொறுப்புக்களின் மதிப்பீட்டில் ஆயுள் கணிப்பீட்டாளரின் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம்

1. நீண்ட கால காப்புறுதி நிதியம் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆயுள் கணிப்பீட்டு மதிப்பீட்டுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள தரவுகள் பூர்த்தியானதும் சரியானதும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் நியாயமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதையும்.

2. 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் நடைமுறையிலுள்ள மற்றும் நிச்சயமற்ற பொறுப்புக்களை கவனத்திற்கொண்டு நீண்ட கால காப்புறுதி நிதியம் தொடர்பான சகல பொறுப்புக்களுக்கும் அன்றைய தினத்திற்குப் போதுமானதும் சரியானதுமான ஒதுக்கங்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்

3. மிகையைப் பகிர்ந்தளித்தல் அடிப்படையில் ஆயுள் நிதியத்தினுள் பேணப்பட்டுவந்த நீண்ட கால மொத்தக் காப்புறுதி ஏற்பாட்டின் அளவு ரூபா 43,391.52 மில்லியன் ஆகும். நிதியத்தினுள் பேணப்பட்டுவந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 90,828.43 மில்லியன் ஆகும். 2016 ஆம் ஆண்டினுள் ஆயுள் காப்புறுதி நிதியத்திலிருந்து பங்கு உரிமையாளர்களுக்கு மாற்றப்பட்ட மிகை ரூபா 3,471.04 மில்லியன் ஆகும். பங்கு உரிமையாளர்களுக்கு மாற்றப்பட்ட மிகை என்பது வருடத்தினுள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பங்குபற்றல் நிதியத்தில் பங்குபற்றல் கொள்கைகளிலிருந்து பங்குபற்றாத நிதியங்களுடன் தொடர்புடைய வியாபாரத்தின் மேலதிக நிபந்தனைகளை ஒப்படைப்பதற்கான பிற்கொடுப்பனவு என்பதையும், அவ்வாறு மாற்றப்பட்ட உப பிரிவுகள் தொடர்பான (ஒன்றிணைந்த நன்மைகளாக பங்குபற்றல் உற்பத்திகளுக்கு வழங்கப்பட்டவை தவிர) 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் ஏற்பாடுகளை மாற்றுதல் போன்று, கிடைத்த தவணை, உரப்பட்ட செலவினம், செலுத்தப்பட்ட நன்மைகள், ஏனையவற்றுக்கிடையில், வருடத்தினுள் இலாப நட்டக் கணக்குகளின் மாற்றல் பகுதியொன்றாக காசுப் பாய்ச்சல் உள்ளடங்குகின்றது என்பதையும், பங்கு உரிமையாளர்களின் மாற்றல்களுக்கு உட்பட்டு, 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் ஆயுள் காப்புறுதி ரூபா 87,357.39 மில்லியன் ஆகும் என்பதையும் இத்தால் சான்றுப்படுத்தகிறோம்.

மார்க் அலன் பேரர்ச், எப்ஜஏ
பணிப்பாளர், இன்சூரன்ஸ் கொன்சல்டிங், தென் கிழக்காசியா
டவர்ஸ் வொட்சன் சிங்கப்பூர் பிரைவட் லிமிட்

ஒப்பம்:
இடம்: சிங்கப்பூர்
திகதி: 2017 மே 05

63 Chulia Street
#09-01 OCBC Centre East
Singapore 049514
T +65 6880 5688
F +65 6880 5699
W willistowerswatson.com
Towers Watson Singapore Pte Ltd (198600361K)

பொறுப்புத் தகுதிச் சோதனை

Willis Towers Watson

தனிப்பட்டதும் அந்தரங்கமானதும்

2017 மே 05

பணிப்பாளர் சபை
வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
இல.21, வொக்ஷோல் வீதி,கொழும்பு - 02, இலங்கை

பொறுப்புத் தகுதிச் சோதனை

1.1 தனது காப்புறுதி உடன்படிக்கையின்கீழ் எதிர்கால பணப்பாய்ச்சல்கள் பற்றிய தற்போதைய மதிப்பீட்டைப் பயன்படுத்தி அறிக்கையிடப்படுகின்ற ஒவ்வொரு காலப்பகுதியின் இறுதியிலும் அடையாளங் காணப்பட்ட தமது காப்புறுதிப் பொறுப்புக்கள் போதுமானதா என்பது பற்றி காப்புறுதியாளரினால் மதிப்பீடு செய்தல் வேண்டும் என இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் மற்றும் இலங்கை நிதி ஒழுங்குவிதிக்கு காப்புறுதி உடன்படிக்கை மூலம் விதிக்கப்படுகின்றது. SLFR 4 இல் விதிக்கப்பட்டுள்ள விதமாக வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆயுள் நிதியத்தினுள் பேணப்பட்டுவருகின்ற நீண்டகால காப்புறுதி ஏற்பாட்டின்பொருட்டு பொறுப்புத் தகுதிச் சோதனை பிலிப் டுவர்ஸ் வொட்சன் கம்பனி பொறுப்பேற்றுள்ளது.

1.2 பொறுப்புத் தகுதிச் சோதனை செய்யும் நடவடிக்கையின்போது ஆயுட் கணக்கீட்டுப் பொறுப்புடன் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுக்கு அமைவாக தடுத்துவைக்கப்பட்ட ஏற்பாடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளது. இதற்காக செயல்வலுப்பெறும் காப்புறுதி உடன்படிக்கைகளுக்குரிய தொடர்புடைய பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக தேவைப்படுகின்ற உட்பாய்கின்ற மற்றும் வெளிப்பாய்கின்ற சகல நிதிப் பாய்ச்சல்களினதும் முழுமையான ஆயுட்காலத்தை உள்ளடக்கி கழிவுசெய்யப்பட்ட பணப்பாய்ச்சல் அணுகுகையொன்றைப் பயன்படுத்தி பொறுப்புக்கள் மதிப்பீடுசெய்யப்பட்ட இலங்கை காப்புறுதிச் சபையினால் ஜகடன்தீர்க்கும் எல்லை (அபாயத்தை அடிப்படையாகக் கொண்ட மூலதனம்)விதிகள் 2015ஸவிதிக்கப்பட்டவாறு அபாயத்தை அடிப்படையாகக்கொண்ட மூலதன வரைசட்டகமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை விடயங்களைப் பின்பற்றி ஆயுட்கணக்கெடுப்பு பற்றிய பெறுமதி கணக்கிடப்படுகின்றது.

1.3 முன்திட்டங்கள் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் செயல்வலுப்பெறும் முகமாக காப்புறுதி உடன்படிக்கை மற்றும் இடைக்கால பரிந்துரையினை அடிப்படையைக் கொண்டதாகும்.

1.4 பரிசீலனைகளின் பிரகாரம்,

- ஆயுட் கணக்கெடுப்பு பொறுப்பு பற்றிய பெறுமதியை மதிப்பீடு செய்யும்போது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆயுள் கணிப்பீட்டு முறையொன்றை அடிப்படையாகக்கொண்டு இலங்கை நிதி ஒழுங்குவிதி 04 இன் கீழ் வருகின்ற தேவைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதாகவும்.
- தற்போதிருக்கும் ஆய்வு அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு, பாதகமான மாறுபாட்டுக்குப் பொருத்தமான எல்லைகளுக்கு இடமளித்ததன் பின்னர் அவ்வாறு மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட எடுகோள்கள் நியாயமான மதிப்பீடுசெய்தல் என்பதாகவும் அத்துடன்
- 2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுக்கு வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆயுள் நிதியத்தினுள் பேணப்பட்டுவருகின்ற நீண்டகால காப்புறுதி ஏற்பாடுகள் மேற்குறிப்பிட்டவிதத்தில் கணக்கிடப்பட்ட பொறுப்புக்களுக்கு மேலதிகமாக இருப்பதாகவும் சான்றுப்படுத்துகிறேன்.

மார்க் அலன் பேரர்ச், எப்ஐஏ
பணிப்பாளர், இன்சூரன்ஸ் கொன்சல்டிங், தென் கிழக்காசியா
டவர்ஸ் வொட்சன் சிங்கப்பூர் பிரைவட் லிமிடட்

ஒப்பம்:
இடம்: சிங்கப்பூர்
திகதி: 2017 மே 05

63 Chulia Street
#09-01 OCBC Centre East
Singapore 049514
T +65 6880 5688
F +65 6880 5699
W willistowerswatson.com
Towers Watson Singapore Pte Ltd (198600361K)

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

நட்டம் ஏற்பட்டபோதிலும் (போதியளவு) அறிக்கையிடப்படாத உரிமைகள் பற்றிய சான்றிதழ்

2017 ஏப்ரல் 28

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பங்குரிமையாளர்களுக்கு

2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நட்டம் ஏற்பட்டபோதிலும் (போதியளவு) அறிக்கையிடப்படாத உரிமைகள் பற்றிய சான்றிதழ் மற்றும் பொறுப்புக்கள் தகுதிச் சான்றிதழ்

நட்டம் ஏற்பட்டபோதிலும் (போதியளவு) அறிக்கையிடப்படாத உரிமைகள்பற்றிய சான்றிதழ்
2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் 75% நம்பகமான மட்டத்தில் காணப்பட்ட ரூபா 2,306,368,464 மில்லியன் நட்டம் ஏற்பட்டபோதிலும் அறிக்கையிடப்படாத (IBNR) உரிமைத் தொகைக்கு தேறிய மீள்காப்புறுதி (மட்டப்படுத்தப்படாத) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உரிமைப் பொறுப்புக்கள் தொடர்பான போதுமான தன்மையை இதன்மூலம் சான்றுப்படுத்துகிறேன். கம்பனியினால் பேணப்பட்டுவருகின்ற நிகழ்வுகள் ஒதுக்கம் உட்பட இந்த (ஐஎசே) ஏற்பாடுகள் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் கம்பனியின் உரிமைப் பொறுப்புக்கள் தொடர்பாக உரிமை செயற்பாடுகள் செலவு உட்பட எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பொறுப்புக்களுக்காக பெரும்பாலும் போதுமானதாக இருக்கின்றபோதிலும் எதிர்கால செயற்பாடுகள் சம்பந்தமாக போதுமானதாக இருக்காது என்பதைச் சான்றுப்படுத்துகிறேன்.

அறிக்கையிடப்பட்ட ஒவ்வொரு காலஎல்லையின் இறுதியிலும் நட்டம் ஏற்படுத்தப்பட்டபோதிலும் அறிக்கையிடப்படாத SLFRS4 மூலம் காட்டப்பட்டுள்ளவாறு பொறுப்பு தகுதிச் சோதனை மேற்கொள்வதற்கு கம்பனிகளுக்கு உரித்தாக்கப்படுகின்றது. சம்பாதிக்கப்படாத தவணை ஒதுக்கங்களில் (UPR) பேணப்பட்டுவருகின்ற தொகையின் அளவு போதுமானது என மதிப்பீடு செய்வதற்கு பொறுப்பு தகுதிச் சோதனை (LAT) மேற்கொள்ளப்படுகின்றது. கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ரூ.7,853,248,467 ஆகிய சம்பாதிக்காத தவணை ஒதுக்க ஏற்பாடு, மீள்காப்புறுதிகளின் தேறிய அளவு, 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அபாயங்கள் தொடர்பான போதியளவனதாக இருந்தபோதிலும் எடுக்கப்படாத சம்பந்தமாக போதுமானதாக இல்லை என்பதைச் சான்றுப்படுத்துகிறேன்.

அதனால் கம்பனியினால் அடையாளம் காணப்படவேண்டிய காப்புறுதித் தவணை நிலுவைகள் கிடையாது.

சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆயுள் கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக பெறுபேறுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் தரவுகளினடிப்படையில் நம்பிக்கையற்ற விதத்தில் வழங்கப்பட்டுள்ள தரவுகளை தனியாகப் பெற்றுள்ள அதேவேளையில் தரவுகளின் நியாயத்தன்மை தொடர்பில் நான் திருப்திப்படுகின்ற மேலதிகமாக பரிசீலனை செய்வதற்கு ஏற்புடையதாக்கிக்கொள்ளப்பட்டுள்ளது.

மத்தியூ மகுய்ரே
அவுஸ்திரேலியாவின் ஆயுள் கணிப்பீட்டாளர் நிறுவனத்தின் உறுப்பினர்
என்எம்ஜீ நிதிச் சேவைகள் ஆலோசனை நிறுவனத்தின் சார்பில்
2017 ஏப்ரல் 28

T: +65 6325 9855 F: +65 6325 4700 E: contact@NMG-Group.com
www.NMG-Group.com
30 Hill Street #03-02A, Singapore 179360

4-13 வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி
16-53 செயலாற்றுகை மீளாய்வுகள் 2016
56-82 ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள்
85-217 நிதிக் கூற்றுக்கள்
220-248 மேலதிகத் தகவல்

சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය எனது இல. My No. BAF/E/SLIC/FA/6/2016/01 ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date 26 May 2017

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பங்குதாரர்களுக்கு

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள்மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினதும் ("கம்பனி"), கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் ("குழு") 2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் மூலம் இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நான் உதவியிருந்தேன்.

நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயமானதுமான நோக்கொன்றைத் தரக்கூடியஇந்த நிதிக்கூற்றுக்களைஇந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கு பணிப்பாளர்சபை ("சபை") பொறுப்பாகவுள்ளது.

கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வினடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்களின்மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கிணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இயங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணகாய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம்மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும்வகையில் கம்பனியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பளியிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றிதழ்களை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

முனைப்பளியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான கணக்காய்வு அடிப்படை.

1. 2009 யூன் 04 இல் இலங்கை உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் கம்பனியின் பங்குகளில் பெரும்பான்மையின் சட்டரீதியான உரித்துரிமை இலங்கை அரசாங்கம் சார்பில் கொண்டிருக்க வேண்டிய திறைசேரி செயலாளர்க்கு வழங்கப்பட்டது. மேலும் மேற்கொள்ளப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் இலங்கை பீ.எல். சீ.வடிசாலைகள் கம்பனியின் கீழ் தாய் இருந்தகாலப்பகுதியில் கம்பனியின் இலாபங்கள் காரணம், கண்கிடவேண்டிய மற்றும் முன்னைய தாய் கம்பனிக்கு தீர்க்கவேண்டிய பங்களிக்கக்கூடிய இலாபங்கள் என்பவற்றை திறைசேரி செயலாளர் செயற்படுத்தியிருந்தார். மேற்கொள்ளப்பட்ட பங்களிக்கக்கூடிய இலாபங்களின் தீர்மானித்தல் நிலுவைக்காக நிதிக் கூற்றுக்களில் சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

2. மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்காமையால், நிதிக் கூற்றுக்களுக்கான 16 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்ட கம்பனிகளின் தொகுதி இலங்கை பீ.எல.சீ. வடிசாலை கம்பனிகளிடமிருந்து பெறவேண்டிய தொகைகளின் பூரணத்தன்மை, இருக்கும்தன்மை சரியானதன்மை என்பவற்றைச் சரிபார்ப்பதற்கு என்னால் முடியாதிருந்தது.

முனைப்பளியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பளியுள்ள அபிப்பிராய பந்திகளுக்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் சாதகமான தாக்கங்களைத் தவிர்த்து தொகுதியின் 2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகையையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மைகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

அ) 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு நான் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

i) அபிப்பிராயத்திற்கான அடிப்படை, கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகள் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

ii) முனைப்பளியுள்ள அபிப்பிராய பந்திகளுக்கான அடிப்படையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து எனது அபிப்பிராயத்தில்:

- கணக்காய்விற்கு அவசியமானதும் எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லாத் தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றிருக்கின்றேன் என்றும்
- 2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகையினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்றும்,
- 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் கம்பனி மற்றும் தொகுதியினது நிதிக் கூற்றுக்கள் இயங்குகின்றன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

ஆ) நிதிக் கூற்றுக்களுக்கான 47 ஆம் குறிப்பில் விபரிக்கப்பட்டுள்ளவாறு, 2011 இன் 03 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் (திருத்தம்) அதிகாரச் சட்டப் பிரமாணத்தின் 52 மற்றும் 53 ஆம் பிரிவுகளின் பிரகாரம், 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கம்பனிகளுக்குள் மேற்கொள்ளப்படுகின்ற நீண்டகாலக் காப்புறுதி வணிகம் மற்றும் பொதுக்கம்பனி வணிகம் என இரண்டு தனிக் கம்பனிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கவில்லை, அத்துடன் அதிகாரம்பெற்ற பங்குப் பரிவர்தனையில் அதன் பங்குகள் பட்டியல்படுத்தப்பட்டிருக்கவுமில்லை.

2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் அதிகாரச் சட்டப் பிரமாணத்தின் 47(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் முன்னைய பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினைத் தவிர்த்தும், இலங்கை காப்புறுதிச் சபையினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மூலம் வேண்டப்பட்டவாறு பேணப்பட்டிருந்த கம்பனியின் கணக்குப் பதிவேடுகள், கம்பனியின் நிதி நிலைமையினை உண்மையாகவும் நியாயமாகவும் தெளிவாகவும் குறிப்பிடுகின்றன.

பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல்

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

எச்.எம்.காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நிதிநிலைமைக் கூற்றுக்கள்

2016.12.31 இல் உள்ளவாறானது	குறிப்பு	குழுமம் 2016 ரூ. 000	குழுமம் 2015 ரூ. 000	கம்பனி 2016 ரூ. 000	கம்பனி 2015 ரூ. 000
சொத்துக்கள்					
நிதி முதலீடுகள்	5	132,314,943	133,784,298	130,184,713	123,694,831
துணைக் கம்பனிகளில் முதலீடு	6	-	-	21,085,905	21,085,905
இணைக் கம்பனிகளில் முதலீடு	7	138,448	128,090	138,448	128,090
ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்	8	44,033,232	38,265,273	10,248,900	8,112,393
முதலீட்டுச் சொத்துக்கள்	9	1,396,200	1,241,642	619,200	465,231
குத்தகை ஆதனங்கள்	10	212,255	198,759	20,268	20,537
கண்ணுக்கு புலப்படாத சொத்துக்கள்	11	3,201,401	3,269,504	148,272	215,625
காப்புறுதி பெறுனர்களுக்கான கடன்கள்	12	1,518,719	1,569,342	1,518,719	1,569,342
மீள்காப்புறுதி பெறவேண்டிய தொகைகள்	13	1,883,063	1,275,104	1,883,063	1,275,104
பெறப்பட வேண்டிய காப்புறுதிக் கட்டுப் பணங்கள்	14	3,404,735	3,229,376	3,404,735	3,229,376
ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள்	15	131,742	95,549	131,317	95,158
ஏனைய சொத்துக்கள்	16	8,279,873	5,961,703	5,354,111	3,371,903
ஒத்தி வைக்கப்பட்ட செலவினங்கள்	17	441,191	358,991	441,191	358,991
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	18	16,841,834	17,108,358	1,623,723	3,324,978
மொத்த சொத்துக்கள்		**213,797,636**	**206,485,989**	**176,802,565**	**166,947,464**
பொறுப்புக்கள் மற்றும் பங்காளரின் பங்குப்பெறுமதி					
பங்குப்பெறுமதி					
இறுத்த முதல்	19	6,000,000	6,000,000	6,000,000	6,000,000
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	20	11,623,290	9,167,303	8,159,082	5,850,502
விற்பனைக்கு இருக்கக் கூடிய ஒதுக்கம்	21	21,055,304	22,390,664	21,055,304	22,390,664
வருமான ஒதுக்கம்	22	40,158,021	44,611,274	27,706,557	29,435,948
கம்பனியின் பங்கு மூலதனம் வைத்திருப்பவர்களுக்கு உரித்தாகக்கூடிய மொத்த பங்குமூலதனம்		78,836,615	82,169,241	62,920,943	63,677,114
கட்டுப்பாட்டுக்கு உட்படாத அக்கறை		7,961,626	7,509,450	-	-
மொத்த பங்குப் பெறுமதி		86,798,241	89,678,691	62,920,943	63,677,114

2016.12.31 இல் உள்ளவாறானது	குறிப்பு	குழுமம் 2016 ரூ. 000	குழுமம் 2015 ரூ. 000	கம்பனி 2016 ரூ. 000	கம்பனி 2015 ரூ. 000
பொறுப்புக்கள்					
ஆயுள் - காப்புறுதி ஏற்பாடு	23	90,010,165	80,650,581	90,010,165	80,650,581
ஆயுள் அல்லாத- காப்புறுதி ஏற்பாடு	24	16,517,151	14,916,652	16,517,151	14,916,652
செலுத்தப்பட வேண்டிய மீள்-காப்புறுதி		997,643	1,000,368	997,643	1,000,368
நடைமுறை வரி பொறுப்புக்கள்	25	964,284	1,565,937	438,483	706,956
ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்புக்கள்	15	3,085,990	3,049,176	709,090	742,027
ஓய்வூதிய அனுகூல கடப்பாடுகள்	26	1,340,289	980,858	1,035,635	730,991
ஏனைய பொறுப்புக்கள்	27	13,092,373	13,409,588	3,473,505	3,533,715
நிதியியல் பொறுப்புக்கள்	28	991,500	1,234,138	699,950	989,060
மொத்தப் பொறுப்புக்கள்		126,999,395	116,807,298	113,881,622	103,270,350
மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பங்குப்பெறுமதி		**213,797,636**	**206,485,989**	**176,802,565**	**166,947,464**

110 முதல் 217 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியொன்றை உருவாக்குகின்றது. இந்த நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கமைவாக தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

மாலனி தென்னகோன்
பிரதான நிதி அதிகாரி

இத்தகைய நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் என்பவற்றுக்கான பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உரித்தானதாகும் பணிப்பாளர் சபைக்காகவும் மற்றும் அதன் சார்பிலும் அங்கீகரித்து கையொப்பமிடப்பட்டது.

ஹேமக அமரசூரிய
தலைவர்

ரீ.எம்.ஆர். பங்ஸா ஜயா
இணை முகாமைப் பணிப்பாளர்

டீ.பி.அருனா பி.எஸ்.சிரிவர்தன
இணை முகாமைப் பணிப்பாளர்

2017 மே 25
கொழும்பு

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரவான வருமானம் என்பவற்றுக்கான கூற்றுக்கள்

2016 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	குழுமம்		கம்பனி	
		2016	2015	2016	2015
		ரூ. 000	ரூ. 000	ரூ. 000	ரூ. 000
வருமானம்	29	67,764,329	62,072,276	42,107,761	31,156,766
மொத்த பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கட்டுப்பணம்	30	27,480,100	24,390,274	27,614,433	24,520,012
உழைக்காத கட்டுப்பணத்துக்கான ஒதுக்கத்தில் தேறிய மாற்றம்		(634,184)	(991,335)	(634,184)	(991,335)
மொத்த உழைத்த கட்டுப்பணம்		26,845,916	23,398,939	26,980,249	23,528,677
மீள்-காப்புறுதி பெறுனர்களுக்கு விட்டுக்கொடுக்கப்பட்ட கட்டுப்பணம்		(2,771,041)	(2,590,205)	(2,771,041)	(2,590,205)
உழைக்காத மீள்காப்புறுதி கட்டுப்பணத்துக்கான ஒதுக்கத்தில் தேறிய மாற்றம்		(195,914)	(544,998)	(195,914)	(544,998)
தேறிய சம்பாதித்த கட்டுப்பணம்		23,878,961	20,263,736	24,013,294	20,393,474
ஏனைய நடவடிக்கைகளிலிருந்து வருமானம்		30,590,103	29,290,519	-	-
		54,469,064	49,554,255	24,013,294	20,393,474
ஏனைய வருமானம்					
முதலீட்டு வருமானம்	31	11,357,205	10,427,556	17,273,652	9,506,165
கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்	32	52,289	51,522	52,289	51,522
தேறிய ஈட்டிய பெறுகைகள்	33	295,518	651,427	338,013	689,772
தேறிய சந்தைப் பெறுமதிப் பெறுகைகள் மற்றும் இழப்புக்கள்		(599,797)	(90,796)	(599,797)	(90,796)
ஏனைய வருமானம்	34	2,190,050	1,478,312	1,030,310	606,629
		13,295,265	12,518,021	18,094,467	10,763,292
மொத்த தேறிய வருமானம்		**67,764,329**	**62,072,276**	**42,107,761**	**31,156,766**
அனுகூலங்கள், இழப்புக்கள் மற்றும் செலவினங்கள்					
தேறிய அனுகூலங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகள	35	(14,476,794)	(12,933,609)	(14,476,794)	(12,933,609)
காப்பீடு செய்தல் மற்றும் தேறிய கொள்வனவுகள் கிரயங்கள்	36	(2,195,008)	(1,586,435)	(2,195,008)	(1,586,435)
ஒப்பந்த பொறுப்புக்கள் - ஆயுள் நிதியில் மாற்றம்		(5,198,390)	(6,840,241)	(5,198,390)	(6,840,241)
ஏனைய செயற்பாட்டு மற்றும் நிருவாக செலவினங்கள்	37	(9,212,981)	(7,145,713)	(6,446,601)	(4,975,705)
துணைக் கம்பனிகளுக்கான சேவைகளின் கிரயம்		(22,867,093)	(21,522,817)	-	-
தேறிய அனுகூலங்கள், இழப்புக்கள் மற்றும் செலவினங்கள்		(53,950,265)	(50,028,815)	(28,316,792)	(26,335,990)
வரிக்கு முந்திய இலாபம்		13,814,064	12,043,461	13,790,968	4,820,776
வருமான வரி செலவினங்கள்	38	(3,329,128)	(3,457,641)	(1,049,651)	(1,381,420)
வருடத்துக்கான தேறிய இலாபம்		10,484,936	8,585,820	12,741,317	3,439,356

2016 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	குழுமம் 2016 ரூ. 000	குழுமம் 2015 ரூ. 000	கம்பனி 2016 ரூ. 000	கம்பனி 2015 ரூ. 000
ஏனைய விரிவான வருமானம்					
இலாப அல்லது நட்ட கணக்குக்கு மீள்-வகைப்படுத்த முடியாத பொருட்கள்					
ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மீதான பெறுகை/(இழப்பு)		2,744,048	(168,149)	2,348,695	(168,149)
ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மீது ஒத்தி வைக்கப்பட்ட வரி விளைவு		(76,649)	47,081	(40,115)	47,081
ஓய்வூதிய அனுகூலக் கடப்பாடுகள் மீதான உண்மையான பெறுகைகள்/(இழப்பு)		(242,701)	(7,822)	(221,287)	10,760
உண்மையான பெறுகைகள்/(இழப்புக்கள்) மீது ஒத்தி வைக்கப்பட்ட வரி விளைவு		59,768	2,354	61,960	(3,013)
இலாபம் அல்லது நட்டத்துக்கு விளைவாந்தன்மையாக மீள்-வகைப்படுதத்ப்பட்ட அல்லது மீள்வகைப்படுத்தப்படக் கூடிய விடயங்கள்					
நிதிச் சொத்துக்கள்-விற்பனைக்காக உள்ளவற்றின் நியாயப் பெறுமதியில் தேறிய மாற்றம்		(1,347,976)	(4,125,764)	(1,347,976)	(4,125,764)
விற்பனை ஒதுக்கத்துக்காக உள்ள நியாயப் பெறுமதியில் தேறிய மாற்றம்		12,616	(8,824)	12,616	(8,824)
வருடத்துக்கான ஏனைய விரிவான வருமானம், தேறிய வரி		1,149,106	(4,261,124)	813,894	(4,247,909)
வருடத்துக்கான மொத்த விரிவான வருமானம்		**11,634,042**	**4,324,696**	**13,555,211**	**(808,553)**
பின்வருவோருக்கு உரித்தாகக் கூடிய வருடத்துக்கான இலாபம்:					
கம்பனியின் ஒப்புரவுப் பங்காளர்கள்		9,979,440	8,162,284	12,741,317	3,439,356
கட்டுப்படுத்தாத அக்கறை		505,496	423,535	-	-
வருடத்துக்கான இலாபம்		**10,484,936**	**8,585,819**	**12,741,317**	**3,439,356**
பின்வருவோருக்கு உரித்தாகக் கூடிய வருடத்துக்கான விரிவான இலாபம்:					
கம்பனியின் ஒப்புரவுப் பங்காளர்கள்		10,978,756	3,900,786	13,555,211	(808,553)
கட்டுப்பாட்டுக்கு உடபடாத அக்கறை		655,286	423,909	-	-
வருடத்துக்கான மொத்த விரிவான வருமானம்		**11,634,042**	**4,324,695**	**13,555,211**	**(808,553)**
பங்கொன்றுக்கான சாதாரண சம்பாத்தியங்கள் (ரூ).	39	16.63	13.60	21.24	5.73

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானம் என்பவற்றின் மேலே விபரிக்கப்பட்ட கூற்றானது இத்தகைய நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியொன்றை உருவாக்குகின்ற 110 முதல் 217 ஆம் பக்கங்கள் வரையான நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பங்குரிமையில் மாற்றங்களுக்கான கூற்று

2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது	இறுத்த மூலதனம்	மீள்-மதிப்பீட்டு ஒதுக்கம்	பொது ஒதுக்கம்	உள்ள ஒதுக்கம்	விற்பனைக்காக தியிலிருந்து மிகைசம்பாத்தியங்கள்	ஆயுளுறு வைத்த	நிறுத்தி மொத்தம்	கட்டுப்பாட்டுக்கு உட்படாத அக்கறை	மொத்த பங்கு
வங்கி	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000	ரூ.000
2015 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவை	6,000,000	9,325,393	643,442	26,525,252	4,450,665	32,405,705	79,350,457	7,246,077	86,596,534
குறிப்பிட்ட வருடத்தில் செலுத்திய சிறப்புப் பெறுகை வரி	-	-	-	-	(10,947)	(1,986,324)	(1,997,271)	(8,205)	(2,005,476)
2015 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவை	6,000,000	9,325,393	643,442	26,525,252	4,439,718	30,419,381	77,353,186	7,237,872	84,591,058
வருடத்துக்கான மொத்த விரிவான வருமானம்									
வருடத்துக்கான இலாபம்	-	-	-	-	-	8,162,284	8,162,284	423,535	8,585,819
ஏனைய விரிவான வருமானம்	-	(121,068)	-	(4,134,588)	-	(5,842)	(4,261,498)	374	(4,261,124)
வருடத்துக்கான மொத்த விரிவான வருமானம்	**-**	**(121,068)**	**-**	**(4,134,588)**	**-**	**8,156,442**	**3,900,786**	**423,909**	**4,324,695**
கம்பனியின் உரிமையாளர்களுடனான									
ஊழியர் சேமலாப நிதியம்
அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்துக்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கம்பனி மற்றும் அதன் ஊழியர்கள், லிட்ரோ கேஸ் லங்கா லிமிட்டட் மற்றும் லிட்ரோ டர்மினல் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் என்பன 15 மற்றும் 10 சத வீதங்கள் முறையே பங்களிப்புச் செய்யப்படுகின்றன.

ஏனைய குழும நிறுவனங்கள் மற்றும் ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்துக்கு 12 மற்றும் 8 சதவீதத்தை முறையே பங்களிப்புச் செய்யப்படுகின்றது.

ஊழியர் நம்பிக்கை நிதியம்
ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்துக்கு 3 சத வீதத்தை குழுமம் பங்களிப்புச் செய்கின்றது.

(இ) வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டம்
ஒரு வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டம் என்பது வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டத்தை விடவும் தொழிலுக்குப் பிந்திய அனுகூலத்திட்டமாகும்.

வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டங்கள் தொடர்பிலான நிதியியல் நிலைமையின் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற பொறுப்பே அறிக்கையிடுகின்ற திகதியில் உள்ளவாறான வரையறை செய்யப்பட்ட அனுகூல கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதியாகும். வரையறை செய்யப்பட்ட அனுகூலக் கடப்பாட்டின் கணிப்பீடானது, "ஊழியர் அனுகூலங்கள்" இலங்கை கணக்கீட்டு தரநியம் 19 இனால் பரிந்துரைக்கப்பட்ட முறையில் திட்டமிடப்பட்ட தொகுதி கடன் (PUC) முறையைப் பயன்படுத்தி அறிக்கையிடுகின்ற தினத்தில் ஒரு தகுதி வாய்ந்த காப்புறுதிக் காப்பீட்டுக் கணிப்பாளரினால் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. கழிவு வீதம், சம்பள அதிகரிப்பு வீதம் மற்றும் ஊழியர்களின் எஞ்சிய சேவைக்காலம் என்பவை தொடர்பாக ஊகங்களை உருவாக்குவதில் காப்புறுதிக் கணிப்பீட்டுக் கணிப்பாளரின் மதிப்பீடு இடம்பெறுகின்றது. திட்டங்களின் நீண்டகால தன்மை காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு அமைவானது.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் கொடுப்பனவின் கீழ், ஊழியர் ஒருவருக்கான பொறுப்பு 5 வருடங்கள் தொடர் சேவையைப் பூர்த்தி செய்த பின்னரே எழுகின்றது. அத்தகைய

பொறுப்பானது வெளிவாரியாக நிதிப்படுத்தப்படுவதில்லை. தேறிய வட்டிச் செலவினங்கள் மற்றும் வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டங்களுடன் தொடர்புடைய ஏனைய செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கணக்கில் பதியப்படுகின்றன. தீர்ப்பனவு மேற்கொள்ளப்படுகின்ற போது வரையறை செய்யப்பட்ட அனுகூலக் கடப்பாடொன்றின் மீள்-அளவீடு உடனடியாக ஏனைய விரிவான வருமானத்தில் பதியப்படுகின்றன.

3.4.4 வருமான வரிச் செலவினம்

நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி என்பவற்றை வருமான வரிச் செலவினம் உள்ளடக்குகின்றது பங்கு அல்லது ஏனை விரிவான வருமானத்தில் நேரடியாகப் பதியப்படுகின்ற விடயங்களுடன் தொடர்புடையதாக இருக்கின்ற அளவுக்கு தவிர்ந்த இலாபம் மற்றும் நட்டத்தில் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரிகள் பதியப்படுகின்றன.

3.4.4.1 நடைமுறை வரி

வருமான வரிக்கான ஏற்பாடானது, நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டவாறு வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றின் கூறுகளின் அடிப்படையில் அமைகின்றது என்பதோடு 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறைவரி சட்டத்தினதும் மற்றும் அதற்கான திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப கணிப்பிடப்பட்டிருக்கின்றன.

நடைமுறை வருமான வரியானது முடிவடைந்த ஆண்டுக்கான வரி செலுத்தப்படக் கூடிய வருமானம் அல்லது இழப்பு மீது எதிர்பார்க்கப்படுகின்ற செலுத்தப்பட வேண்டிய அல்லது பெறப்பட வேண்டிய வரியாகும் என்பதோடு முன்னைய வருடங்கள் தொடர்பிலான செலுத்தப்பட வேண்டிய பெறப்பட வேண்டிய வரிக்கான சீராக்கல்கள், அறிக்கையிடப்டுகின்ற திகதியில் அமுலாக்கப்படுகின்ற வரி வீதங்களைப் பயன்படுத்துவதற்கு அளவிடப்படுகின்றது.

நிலைமைகள் தொடர்பில் ஏற்புடைய வரி ஒழுங்கு விதிகள் பொருள்கோடலுக்கு அமைவாக உள்ளனவா என்ற நிலைமைகள் தொடர்பில் வரி வருமானங்களில் எடுக்கப்படுகின்ற இடங்களை முகாமை பருவ காலத்தில் மதிப்பீடு செய்கின்றது என்பதோடு பொருத்தமாக இருக்கன்றவிடத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

3.4.4.2 ஒத்திவைக்கப்பட்ட வரி

நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்கள் மற்றும் வரியிடல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற தொகைகளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு வருகின்ற தொகைகளுக்கு இடையிலான தற்காலிக வித்தியாசங்கள் தொடர்பில் பிற்போடப்பட்ட வரி அங்கீகரிக்கின்றது.

பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவை, சகல தற்காலிக வித்தியாசங்களுக்காகவும் இவற்றைப் பயன்படுத்துவதற்கு எதிராக இருக்கக் கூடிய எதிர்கால வரி அறவிடப்படக் கூடிய இலாபங்கள் என சாத்தியப்படக் கூடிய அளவுக்கு பயன்படுத்தாத வரிக் கடன்கள் மற்றும் பயன்படுத்தாத வரி இழப்புக்கள் என்பவற்றின் முன் கொண்டுவருதல் என்பவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் அறிக்கையிடப்படுகின்ற ஒவ்வொரு திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன என்பதோடு அவை தொடர்புடைய வரி அனுகூலம் பயன்படுத்தப்படும் என்ற சாத்தியமில்லாத அளவுக்கு குறைக்கப்படும். எதிர்கால வரியிடப்படக் கூடிய இலாபங்கள் அதிகரிக்கின்ற போது அத்தகைய குறைப்புக்கள் மீளாய்வு செய்யப்படும்.

பிற்போடப்பட்ட வரியானது, அவைகளை மீளாய்வு செய்யப்படுகின்ற போது அறிக்கையிடுகின்ற திகதியில் அமுலாக்கப்படுகின்ற அல்லது தனியான வரி வீதங்களைப் பயன்படுத்தி தற்காலிக வித்தியாசங்களுக்கு பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கக் கூடிய வரி வீதங்களில் அறவிடுப்படுகின்றன.

அங்கீகரிக்கப்படாத பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படுகின்ற திகதியிலும் மீள்-மதிப்பிடப்படுகின்றன என்பதோடு அவைகளைப் பயன்படுத்துவதற்கு எதிராக இருக்கக் கூடிய எதிர்கால வரி அறவிடப்படக் கூடிய சாத்தியமாக இருக்கின்ற இலாபங்களின் அளவுக்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.

பிற்போடப்பட்ட வரிகள் அதே வரியிடப்படக் கூடிய நிறுவனம் மற்றும் அதே வரியிடல் அதிகார சபை தொடர்புடையதாக இருக்கின்ற போது நடைமுறை வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக நடைமுறை வரிச் சொத்துக்களைத் தீர்ப்பதற்கு சட்ட ரீதியாக அமுல்படுத்தக் கூடிய உரிமை நிலவினால், ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் என்பவை ஈடு செய்யப்படுகின்றன.

3.4.4.3 பங்கிலாபங்கள் மீதான நிறுத்தி வைத்த வரி

குழுமத்தினால் பங்கிலாப விநியோகத்திலிருந்து எழுகின்ற நிறுத்தி வைத்தல் வரியானது தொடர்புடைய பங்கிலாபத்தைச் செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பாக அதே நேரத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.

3.4.4.4 பொருளாதார சேவைக் கட்டணம் (ESC)

2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதற்கான திருத்தங்களுக்கு அமைய, பொருளாதார சேவைக் கட்டணம் குறிப்பிடப்பட்ட வீதத்தில் பொறுப்பான விற்பனைப் புறள்வின் மீது செலுத்தப்படக் கூடியது. சொல்லப்பட்ட சட்டத்தின் உரிய ஏற்பாடுகளுக்கு அமைய ஏதேனும் உரிமை கோரப்படாத பெறப்பட வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணத் தொகை முன் கொண்டு வரப்பட முடியும் என்பதோடு செலுத்தப்பட வேண்டிய வருமான வரிக்கு எதிராகத் தீர்க்கப்பட முடியும்.

3.4.4.5 பயிர் காப்புறுதி வரி

பயிர் காப்புறுதி வரியானது, 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அறிமுகம் செய்யப்பட்டது, என்பதோடு 2016 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது. அது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்குச் செலுத்தப்பட வேண்டும். வரிக்குப்பிந்திய இலாபத்தின் 1 சத வீதம் செலுத்தப்பட வேண்டும்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

3.5 நிதியியல் நிலைமைக் கூற்று

3.5.1 ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

3.5.1.1 ஆரம்ப அங்கீகரிப்பு மற்றும் அளவீடு

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கான பெறுமதி கிரயத்தில் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் திறண்ட குறைபாட்டு இழப்பு என்பவற்றைக் கழித்து கணிப்பிடப்படுகின்றன. ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கான கிரயம் அவற்றின் பயன்பாட்டுக்காக வேலை செய்கின்ற நிலைமைக்கு கொண்டு வருவதற்கு ஏற்பட்ட எவையேனும் செலவினங்களுடன் சேர்த்து கையகப்படுத்தல் அல்லது நிர்மாணிப்பு கிரயமாகும்.

சொத்தின் கையகப்படுத்தலுக்கு நேரடியாக காரணமாக இருந்த செலவினம் கிரயத்தில் உள்ளடங்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயம் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- பொருட்கள் மற்றும் நேரடி கூலியாள் கிரயம்.
- சொத்துக்களின் பயன்பாட்டுக்காக வேலை செய்கின்ற நிலைமைக்கு கொண்டு வருவதற்கு ஏற்பட்ட எவையேனும் செலவினங்கள்.
- சொத்தை அகற்றுவதற்கு அல்லது அமைவிடத்தை மீள்-அமைப்பதற்கான ஒரு கடப்பாடு குழுமத்துக்கு இருக்கின்ற போது, அதனைப் பிரித்தெடுப்பதற்கும் மற்றும் அகற்றுவதற்கும் மற்றும் அதனை மீளப்பொருத்துவதற்குமான மதிப்பிடப்பட்ட செலவினம்.

விற்பனையின் போது ஏதேனும் பெறுகை அல்லது இழப்பு ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் இலாப அல்லது நட்டத்தில் பதியப்பட்டிருக்கின்றது.

3.5.1.2 பின்தொடர் செலவினம் மற்றும் பதிலீடு செய்தல்

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் ஏதாவது ஒன்றின் ஒரு பாகத்தை மீள்பொருத்துகின்ற செலவினமானது பொருளின் கொண்டு வருகின்ற தொகையில் பதியப்படுகின்றது. உதிரிப்பாகத்துக்குள் பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் சாத்தியமாக இருந்தால், அது குழுமத்துக்குச் செல்லும் என்பதோடு அதன் கிரயம் நம்பகமாக அளவிடப்பட முடியும். மீளப்பொருத்தப்படுகின்ற பாகத்தின் கொண்டு வருகின்ற தொகை பதியப்படமாட்டாது. ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை சேவை செய்வதற்கான கிரயங்கள் அவை உறப்படுகின்றவாறு இலாப அல்லது நட்டத்தில் பதியப்படும்.

3.5.1.3 மீள்மதிப்பீடுகள்

காணிகள் மற்றும் கட்டங்கள் சொத்தொன்றாக மதிப்பிடப்பட்ட பின்னர், அவற்றின் நியாயமான பெறுமதி நம்பகமாக அளவிட முடியும் என்பதோடு அவை மீள்-மதிப்பீட்டுத் தினத்தில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் முன்கொண்டுவரப்பட்டு பின்தொடர் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் பின்தொடர் திறண்ட குறைபாட்டு இழப்புக்கள் கழிக்கப்படும். அறிக்கையிடுகின்ற திகதியில் உள்ளவாறான அதன் கொண்டு வருகின்ற தொகையிலிருந்து முக்கியமாக வித்தியாசமில்லாத ஒரு மீள் மதிப்பிடப்பட்ட சொத்தின் நியாயமான பெறுமதியை உறுதி செய்வதற்கு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

காணி மற்றும் கட்டடங்களின் மதிப்பீடானது ஆகக் குறைந்தது இரண்டு முதல் மூன்று வருடங்கள் அனுபவத்தைக் கொண்ட துறைசார் தகைமை கொண்ட மதிப்பீட்டாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மீள் மதிப்பீட்டின் விளைவாக கொண்டு வருகின்ற தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டால், ஏனைய விரிவான வருமானத்தில் பதியப்படுகின்றது என்பதோடு மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் என்ற தலைப்பின் கீழ் பங்குப்பெறுமதியில் சேர்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், முன்னர் இலாப அல்லது நட்டத்தில் பதியப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு குறைவு பின்னடைவாகின்ற அளவுக்கு இலாபத்தில் அல்லது நட்டத்தில் அத்தகைய அதிகரிப்பு பதியப்படுகின்றது.

மீள் மதிப்பீட்டின் விளைவாக கொண்டு வருகின்ற தொகையில் குறைவு ஏற்பட்டால், இலாப அல்லது நட்டக் கணக்கில் பதியப்படுகின்றது. எவ்வாறாயினும், அத்தகைய சொத்து தொடர்பில் மீள்-மதிப்பீட்டு மிகையில் நிலவுகின்ற ஏதேனும் கடன் நிலுவையின் அளவுக்கு ஏனைய விரிவான வருமானத்தில் பதியப்படும்.

மேலும், மீள்-மதிப்பீட்டுத் தினத்தில் உள்ளவாறான திறண்ட பெறுமானத் தேய்வு சொத்தின் மொத்த கொண்டுவருகின்ற தொகைக்கு எதிராக செலுத்தப்படும் என்பதோடு தேறிய தொகையானது சொத்தின் மீள்-மதிப்படப்பட்ட தொகைக்கு மீள்-குறிப்பிடப்படும். சொத்தை விற்பனை செய்கின்ற போது, விற்பனை செய்யப்படுகின்ற குறிப்பிட்ட சொத்துடன் தொடர்புடைய ஏதேனும் மீள் மதிப்பீட்டு ஒதுக்கமானது நிறுத்தி வைத்த சம்பாத்திய கணக்குக்கு நேரடியாக பரிமாற்றல் செய்யப்படும்.

3.5.1.4 பெறுமானத் தேய்வு

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கிரயத்தைப் பதிவழிப்பதற்கு அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள் மீது நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட கழித்து எஞ்சிய பெறுமதிகளைக் கழித்து பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படுகின்றது, என்பதோடு அது பொதுவாக இலாப அல்லது நட்டக் கணக்கில் பதியப்படுகின்றது. இது சொத்தில் பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்களின் எதிர்பார்க்கப்படுகின்ற நுகர்வுப் பாங்கை மிகவும் நெருக்கமாகப் பிரதிபலிக்கின்றது.

நடைமுறை மற்றும் ஒப்பீட்டு காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள்கள் பின்வருமாறு:

கட்டடங்கள்	20 – 40 வருடங்கள்
தளபாடம் பொருத்திகள்	5 – 10 வருடங்கள்
அலுவலக மற்றும் ஏனைய உபகரணங்கள்	5 – 10 வருடங்கள்
மின் பிறப்பாக்கிகள் மற்றும் குளிரூட்டி பொறிகள்	10 வருடங்கள்
மோட்டார் வாகனங்கள	4 வருடங்கள்
இணைப்புக்கள் மற்றும் பொருத்திகள்	6, 2/3 வருடங்கள்

▣ பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திராதிகள்	20 வருடங்கள்
▣ கணனிகள் மற்றும் கணனி உபகரணங்கள்	4 – 7 வருடங்கள்
▣ திரவப் பெற்றோலிய களஞ்சிய தாங்கிகள், குழாய்கள் மற்றும் பொருத்திகள்	25 வருடங்கள்
▣ திரவப் பெற்றோலிய சிலின்டர்கள்	10 வருடங்கள்
▣ ஏனைய நிலையான சொத்துக்கள்	5 – 12 வருடங்கள்

பெறுமானத் தேய்வு முறைமைகள், பயனுள்ள ஆயுள்கள், மற்றும் எஞ்சிய பெறுமதிகள் என்பன ஒவ்வொரு அறிக்கையிடுகின்ற தினத்திலும் மீளாய்வு செய்யப்படுகின்றன என்பதோடு பொருத்தமாக இருந்தால் சீராக்கம் செய்யப்படும்.

3.5.1.5 நீக்கம் செய்தல்

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் ஏதேனும் ஒரு பொருளை விற்பனை செய்த பின்னர் அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றுவதிலிருந்து எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் இல்லை என எதிர்பார்க்கின்ற போது பதிவுகள் நீக்கப்படுகின்றது. ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் ஏதேனும் ஒரு பொருளை பதிவு நீக்குவதிலிருந்து ஏற்படுகின்ற பெறுகை அல்லது இழப்பு இலாப அல்லது நட்டக் கணக்கில் பதியப்படும்.

3.5.1.6 நடைபெறுகின்ற மூலதன வேலை

நடைபெறுகின்ற மூலதன வேலை கிரயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இவைகள்தான் கட்டடங்களை நிர்மாணித்தலில் நேரடியாக உறப்படுகின்ற ஒரு மூலதன தன்மையின் செலவினங்கள் மற்றும் எதிர்பார்த்திருக்கின்ற மூலதனவாக்கம் என்பனவாகும்.

3.5.2 கண்ணுக்குப் புலப்படாத சொத்துக்கள்

குழுமத்துக்கு உரித்தாகக் கூடிய சொத்துக்கு எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் காரணமாக இருப்பதற்கு சாத்தியமாக இருந்தால், புலப்படாத சொத்தொன்று பதியப்படும் என்பதோடு கிரயம் நம்பகமாக மதிப்பிட முடியும்.

3.5.2.1 நன்மதிப்பு

துணைக்கம்பனிகள் கையகப்படுத்துவதன் மூலம் எழுகின்ற நன்மதிப்பானது திறண்ட குறைபாட்டு இழப்புக்களைக் கழித்த கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றது.

நன்மதிப்புக் குன்றுதல்

வியாபார இணைப்பொன்றில் முயன்று பெறுகின்ற நன்மதிப்பு அதன் சேதம் தொடர்பாக வருடாந்தம் பரீட்சிக்கப்படுகின்றது என்பதோடு கொண்டு வருதல் பெறுமதி சேதத்துக்குள்ளாகியுள்ளது என சூழ்நிலைகள் சுட்டிக்காட்டுகின்ற போது, நன்மதிப்பு தொடர்புடையதாகின்ற காசு பிறப்பிக்கின்ற ஒவ்வொரு பிரிவுக்குமான மீட்கப்படக் கூடிய தொகையை மதிப்பிடுவதன் மூலம் நன்மதிப்புக்கான சேதம் தீர்மானிக்கப்படுகின்றது. காசு பிறப்பிக்கின்ற பிரிவின் மீட்கப்படக் கூடிய தொகையானது கொண்டு வருகின்ற தொகையை விடவும் குறைவாக இருக்கின்ற போது, அத்தகைய குறைபாட்டு இழப்பு இலாப அல்லது நட்டக் கணக்கில் பதியப்படுகின்றது. நன்மதிப்பு மீதான சேத இழப்பு திருப்பப்படுவதில்லை.

3.5.2.2 மென்பொருள்

குழுவினால் முயன்று பெறுகின்ற ஏனைய கண்ணுக்குப் புலனாகாத சொத்துக்கள் மற்றும் இருக்கின்ற வரையறுக்கப்பட்ட பயன் ஆயுள்கள் திரண்ட கடனளிப்பு மற்றும் திறண்ட சேத இழப்புக்கள் என்பவற்றைக் குறைத்து கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட பயனுள்ள ஆயுள்களுடன் கூடிய கண்ணுக்குப் புலப்படாத சொத்துக்களானவை சேதத்துக்குள்ளாகியிருக்கலாம் என அடையாளம் காணப்படுகின்ற போது குறைபாட்டுக்காக மதிப்பிடப்படுகின்றன. வரையறுக்கப்படாத பயனுள்ள ஆயுள்களுடன் கூடிய புலனாகாத சொத்துக்கள் குறைபாட்டைக் கண்டறிவதற்காக வருடாந்தம் தனிப்பட்ட முறையில் அல்லது காசு பிறப்பிக்கின்ற பிரிவு மட்டத்தில் பரீட்சிக்கப்படுகின்றன.

அறிக்கையிடுகின்ற தினத்தில் உள்ளவாறு ஏனைய கண்ணுக்குப் புலனாகாத சொத்துக்களாக தனியாக முயன்று பெற்றுக் கொண்ட மென்பொருள் குழுமத்துக்கு இருக்கின்றது.

விளைவாந்தன்மையுடைய செலவினம்

மென்பொருள் மீதான விளைவாந்தன்மையுடைய செலவினமானது, அது தொடர்புடையதாக இருக்கின்ற பிரத்தியேக சொத்தில் பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்களை அதிகரிக்கின்ற போது மாத்திரமே மூலதனமிடப்படுகின்றது. சகல ஏனைய செலவினங்கள் உறப்படுகின்றவாறு இலாப அல்லது நட்ட கணக்கில் பதியப்படுகின்றது.

கடன் தீர்த்தல்

கடனளிப்பானது அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள்கள் மீது நேர் கோட்டு முறைமையைப் பயன்படுத்தி அவற்றின் மதிப்பிடப்பட்ட எஞ்சிய பெறுமதிகளைக் குறைத்து புலனாகாத சொத்துக்களின் கிரயம் பதிவழிக்கப்படுவதற்கு கணிப்பிடப்படுகின்றது என்பதோடு அவை இலாப நட்டக் கணக்கில் பதிவிடப்படுகின்றது. மென்பொருளின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள் ஆறு வருடங்களாகும்.

கடன் தீர்த்தல் முறைகள், பயனுள்ள ஆயுள்கள் மற்றும் எஞ்சிய பெறுமதிகள் என்பவை ஒவ்வொரு அறிக்கையிடுகின்ற திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன என்பதோடு பொருத்தமாக இருந்தால் சீராக்கல் செய்யப்படுகின்றன.

பதிவழித்தல்

கண்ணுக்குப் புலப்படாத சொத்தொன்றை விற்பனை செய்த பின்னர் அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றுவதிலிருந்து எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் இல்லை என எதிர்பார்க்கின்ற போது பதிவுகள் நீக்கப்படுகின்றது. பதிவு நீக்குவதிலிருந்து ஏற்படுகின்ற பெறுகை அல்லது இழப்பு இலாப அல்லது நட்டக் கணக்கில் பதியப்படும்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

3.5.3 முதலீட்டு ஆதனம்

முதலீட்டு சொத்து என்பது ஒன்றில் வாடகை வருமானம் பெறுவதற்கு அல்லது மூலதன பெறுகை அல்லது இரண்டையும் பெறுவதற்காக வைத்திருக்கின்ற சொத்தாகும். முதலீட்டு ஆதனங்கள் ஆரம்பத்தில் கிரயத்திலும் மற்றும் அதனைத்தொடர்ந்து ஏதேனும் மாற்றம் இருந்தால் நியாய விலையிலும் மதிப்பிடப்பட்டு இலாப அல்லது நட்டக் கணக்கில் பதியப்படுகின்றன.

முதலீட்டுச் சொத்துக்கள் விற்பனையின் போது அல்லது அகற்றுவதிலிருந்து எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் இல்லை என எதிர்பார்க்கின்ற போது பயன்பாட்டிலிருந்து நிரந்தரமாக மீளப்பெறுகின்ற போது பதிவழிக்கப்படுகின்றன. முதலீட்டுச் சொத்தின் (விற்பனையிலிருந்து தேறிய பெறுகைகளுக்கிடையிலான வித்தியாசமாகக் கணிப்பிடப்பட்ட மற்றும் ஆதனத்தின் கொண்டு வருகின்ற தொகை) பதிவு நீக்குவதிலிருந்து ஏற்படுகின்ற பெறுகை அல்லது இழப்பு இலாப அல்லது நட்டக் கணக்கில் பதியப்படும். முன்னர் ஆதனங்கள் என வகைப்படுத்தப்பட்டிருந்த ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்யப்படுகின்ற போது, மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தில் ஏதேனும் உரிய தொகை சேர்க்கப்பட்டிருந்தால் அது நிறுத்தி வைத்த சம்பாத்தியங்கள கணக்குக் மாற்றப்படும்.

பயன்பாட்டில் மாற்றம் ஒன்று இருக்கின்ற போது, முதலீட்டு ஆதனங்களுக்கு மாற்றல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. துணைக் கம்பனியொன்றின் முதலீட்டு ஆதனமொன்றின் குறிப்பிடத்தக்க பகுதியொன்றில் குழுமக் கம்பனியொன்று பெறுகின்ற போது, அத்தகைய முதலீட்டு ஆதனமானது கூட்டிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் எனக் கருத்தப்பட வேண்டும் என்பதோடு இலங்கை கணக்கீட்டு தரம் 16 இற்கு ஏற்ப "ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்" என அமைந்திருக்கும்.

3.5.4 நிதியல்லாத சொத்துக்களின் சேதம்

அறிக்கையிடுகின்ற ஒவ்வொரு திகதியிலும், அதன் நிதியல்லாத சொத்துக்களின் (முதலீட்டு ஆதனங்கள், அலுவலகப்பொருட்கள் மற்றும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் என்பவை தவிர) கொண்டு வருகின்ற தொகையில் ஏதேனும் குறைபாடுள்ளதா என்பதை உறுதி செய்வதற்காக குழுமம் மீள் மதிப்பீடு செய்கின்றது. எவையேனும் அத்தகைய குறிகாட்டிகள் இருந்தால், சொத்தின் மீட்கப்படக் கூடிய தொகை மதிப்பிடப்படுகின்றது. நன்மதிப்பானது சேதம் தொடர்பாக வருடாந்தம் பரீட்சிக்கப்படுகின்றது.

சொத்தொன்றின் மீட்கப்படக் கூடிய தொகை அல்லது காசு பிறப்பித்தல் பிரிவு தான் அதன் பயன்பாடடில் உள்ள அதிகூடிய பெறுமதியாகும் என்பதோடு விற்பனை செய்வதற்கு நியாய பெறுமதி கிரயங்கள் கழிக்கப்படுகின்றன. பயன்பாட்டில் உள்ள பெறுமதியை மதிப்பிடுவதில், பணத்தின் காலப் பெறுமதி மற்றும் சொத்து அல்லது காசு பிறப்பித்தல் பிரிவுக்கு உரிய இடர்கள் என்பவற்றின் நடைமுறை சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கின்ற முன்-வரி கழிவு வீதமொன்றைப் பயன்படுத்தி அவற்றின் நடைமுறைப் பெறுமதிக்கு மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் கழிவிடப்பட்டிருக்கின்றன.

சொத்தொன்றின் அல்லது காசு பிறப்பித்தல் பிரிவின் கொண்டுவருதல் தொகை அதன் மீட்கப்படக் கூடிய தொகையை விஞ்சினால், மதிப்புக் குன்றுதல் இழப்பீடு ஒன்று அங்கீகரிக்கப்படுகின்றது. மதிப்புக் குன்றுதல் இழப்பீடுகள் இலாப நட்டக் கணக்கில் பதியப்படுகின்றன. காசு பிறப்பித்தல் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட ஏதேனும் நன்மதிப்பின் கொண்டு வருகின்ற தொகையைக் கழிப்பதற்கு அவைகள் முதலில் ஒதுக்கப்படுகின்றன என்பதோடு அதன்பின்னர் காசு பிறப்பித்தல் பிரிவில் உள்ள ஏனைய சொத்துக்களின் கொண்டு வருகின்ற தொகைகளை குறைப்பதற்கு விகிதாசார அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன.

நன்மதிப்பு தொடர்பிலான மதிப்புக் குன்றுதல் இழப்பு திரும்பல் செய்யப்படவில்லை. ஏனைய சொத்துக்களுக்காக, மதிப்புக் குன்றுதல் இழப்பு பதியப்பட்டிருக்காவிட்டால் பெறுமானத் தேய்வு அல்லது கடன்தீர்ப்பனவு என்பவற்றின் தேறிய தொகை தீர்மானிக்கப்படுகின்ற அளவுக்கு மாத்திரம் மதிப்புக் குன்றுதல் இழப்பு திரும்பல் செய்யப்பட்டிருக்கின்றது.

3.5.5 பொருட் பதிவேடு

பொருட் பதிவேடானது குறைந்த செலவிலும் நிகர தேறத்தக்க பெறுமதியிலும் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நுகர்பொருட்களையும் உள்ளடக்குகின்றது.

3.5.6 நிதியியல் சாதனங்கள்

பெறுதியற்ற நிதியியல் சொத்துகளை பின்வரும் வகுதிகளினுள் குழு வகைப்படுத்துகின்றது: விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துகள், கடன்களும் வருமதிகளும், முதிர்ச்சிக்காக வைக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகள்.

குழுவானது பெறுதியற்ற நிதியியல் பொறுப்புகளை ஏனைய நிதியியல் பொறுப்புகள் வகுதியினுள் வகைப்படுத்துகின்றது.

3.5.6.1 பெறுதியற்ற நிதியியல் சொத்துகள்

கடன்களையும் வருமதிகளையும் மற்றும் விநியோகிக்கப்பட்ட படுகடன் பிணையங்களையும் அவை தொடங்கப்பட்ட திகதியில் குழு ஆரம்பத்தில் இனங்காணுகின்றது. அனைத்து ஏனைய நிதியியல் சொத்துகளும் (இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் குறிக்கப்பட்ட சொத்துகள் உள்ளடங்களாக) சாதனத்தின் ஒப்பந்த ஏற்பாடுளுக்கான தரப்பினரொருவராகின்ற விற்பனைத் திகதியில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன.

நிதியியல் சொத்தொன்று ஆரம்பத்தில், நியாயப் பெறுமதியுடன் சேர்த்து, இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் அல்லாத சொத்தொன்றுக்காக அதனை கையகப்படுத்துவதற்கு அல்லது விநியோகிப்பதற்கு நேரடியாக சாட்டத்தக்கதாகவுள்ள கொடுக்கல் வாங்கல் செலவுடன் இனங்காணப்படுகின்றது.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

சொத்தொன்றிலிருந்தான காசுப்பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமை காலாவதியாகின்ற, அல்லது நிதியியல் சொத்துதின் உரிமைத்துவத்தின் கணிசமான அனைத்து இடர்களும் கைமாறுகளும் இடமாற்றப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கலொன்றில் நிதியியல் சொத்து மீதான ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமையினை குழு இடமாற்றுகின்ற போது நிதியியல் சொத்தொன்றினை குழு இனங்காணாது. இடமாற்றப்பட்டுள்ள சொத்தில் குழுவினால் உருவாக்கப்பட்டுள்ள அல்லது தக்கவைத்துள்ள ஏதேனும் நலன், வேறான சொத்தொன்றாக அல்லது பொறுப்பொன்றாக இனங்காணப்படுகின்றது.

தொகைகளை ஈடு செய்வதற்கும் அத்துடன் கழிவு அடிப்படையொன்றில் தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது சமகாலத்தில் சொத்து தேறுவதற்கோ அத்துடன் பொறுப்பினை தீர்ப்பனவு செய்வதற்கோ சட்டரீதியாக செயலாக்கமுடைய உரிமையொன்றினை குழு கொண்டுள்ளபோது, அத்துடன் கொண்டுள்ளபோது மாத்திரம் நிதியியல் சொத்துகளும் நிதியியல் பொறுப்புகளும் ஈடுசெய்யப்பட்டு தேறிய தொகை நிதி நிலைமைக் கூற்றில் எடுத்துரைக்கப்படுகின்றது.

பின்தொடரும் அளவீடு

(அ) விற்பனைக்கு கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துகள்

வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டவையோ அன்றில் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் குறிக்கப்பட்டவையோ அல்லாதவை விற்பனைக்கு கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகளாகும்.

விற்பனைக்கு கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகள் ஆரம்ப நியாயப் பெறுமதி அளவீட்டின் பின்னர், தொடர்ந்து சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்டு அதிலுள்ள மாற்றங்கள் ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காணப்பட்டு விற்பனைக்காக கிடைக்கத்தக்க ஒதுக்கில் ஒன்றுதிரட்டப்படுகின்றது. இச்சொத்துகள் இனங்காணப்படாமையின்போது பங்கு மூலதனத்தில் ஒன்றுதிரண்ட ஆதாயம் அல்லது நட்டம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் மீள் வகைப்படுத்தப்படுகின்றது.

அண்மைய காலத்தில் தனது விற்பனைக்கு கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துகளை விற்பனை செய்வது பொருத்தமானதா என்ற இயலுமையினையும் நோக்கத்தினையும் நிர்ணயிப்பதற்கு அவற்றை குழு மதிப்பிடுகின்றது. பாதகமான சந்தை மற்றும் முன்னறிகின்ற எதிர்காலத்தில் அவ்வாறு செய்வதற்கு முகாமைத்துவத்தின் நோக்கத்தின் கணிசமான மாற்றங்கள் போன்ற காரணங்களினால் இந் நிதியியல் சொத்துகளை வர்த்தகப்படுத்துவதற்கு குழு இயலாதிருக்கின்ற சந்தர்ப்பத்தில், அரிதான சூழ்நிலைகளில் இந் நிதியியல் சொத்துகளின் மீள் வகைப்படுத்தலினை குழு தெரிவு செய்யலாம். கடன்களினதும் வருமதிகளினதும் வரைவிலக்கணத்தை நிதியியல் சொத்து நிறைவு செய்கின்றபோதும் முன்னறிகின்ற எதிர்காலத்திற்காக அல்லது முதிர்ச்சி வரை இந் நிதியியல் சொத்துகளை வைத்திருப்பதற்கு முகாமைத்துவம் நோக்கத்தினையும் இயலுமையினையும் கொண்டிருக்கின்ற போதும் கடன்களுக்கும் வருமதிகளுக்கும் மீள்வகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது. நிதியியல் சொத்தினை முதிர்வு வரை வைத்திருப்பதற்கான இயலுமையினையும் நோக்கத்தினையும் நிறுவனம் கொண்டிருக்கும் போது மாத்திரம் முதிர்வுக்காக வைக்கப்பட்டவைக்கான மீள் வகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது.

குழுவின் விற்பனைக்கு கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகளானவை வர்தகப்படுத்தலுக்காக வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்பட்டவையோ அன்றி இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் குறிக்கப்பட்டவையோ அல்லாத பங்கு மூலதனம் மற்றும் படுகடன் பிணையங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

(ஆ) இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகள்

வர்த்தகப்படுத்தலுக்காக அவை வகைப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது ஆரம்ப இனங்காணலில் அவ்வாறு குறிக்கப்பட்டவையாக இருப்பின் நிதியியல் சொத்தானது, இலாபம அல்லது நட்டம ஊடாக நியாயப் பெறுமதியில் உள்ளவையாக வகைப்படுத்தப்படுகின்றன. நேரடியாக சாட்டத்தக்க கொடுக்கல் வாங்கல் செலவுகள், உறப்பட்டவாறு இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகள் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டு ஏதேனும் வட்டி அல்லது பங்கிலாப வருமானம் உள்ளடங்கலாக, அதிலுள்ள மாற்றங்கள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

சொத்துகளும் பொறுப்புகளும் குழுவொன்றின் நிதியியல் சொத்துகளின், நிதியியல் பொறுப்புகளின், அல்லது குழுவின் முதலீட்டு மூலோபாயத்திற்கமைவாக முகாமை செய்யப்படுகின்ற மற்றும் நியாயப் பெறுமதி அடிப்படையொன்றில் மதிப்பிடப்பட்ட அவற்றின் செயலாற்றுகையாக காணப்படுகின்ற இரண்டினதும் பாகங்களாகும். இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் உள்ள குழுவின் நிதியியல் சொத்துகள், பட்டியலிடப்பட்ட பங்குமூலதன முதலீடுகளை உள்ளடக்குகின்றன.

(இ) முதிர்வுக்காக வைக்கப்பட்டுள்ள நிதியியல் சொத்துகள்

இவை, நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுதியற்ற நிதியியல் சொத்துகளாவதுடன் முதிர்வு வரை வைப்பதிருப்பதற்கு குழு நோக்கம் மற்றும் இயலுமை இரண்டினையும் கொண்டிருக்கின்ற போது நிலையான முதிர்வுகள் முதிர்வுக்காக வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்படுகின்றன. இச் சொத்துகள், ஆரம்பத்தில் ஏதேனும் நேரடியாக சாட்டத்தக்க கொடுக்கல் வாங்கல் செலவுகளுடன் சேர்த்து நியாயப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இணங்காணலுக்குப் பின்னர், விளைவு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி பெறுமதிக் குறைப்புச் செலவில் அளவிடப்படுகின்றன.

முதிர்வுக்காக வைக்கப்பட்ட நிதியியல் சொத்துகளானவை குழுவினால் முதலீடு செய்யப்பட்டுள்ள திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளை உள்ளடக்குகின்றன.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

(ஈ) கடன்களும் வருமதிகளும்

கடன்கள் மற்றும் வருமதிகள் என்பன செயற்பாடுமிக்க சந்தையொன்றில் விலை குறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய நிதியியல் சொத்துகளாகும். இச் சொத்துகள், ஆரம்பத்தில் ஏதேனும் நேரடியாக சாட்டத்தக்க கொடுக்கல் வாங்கல் செலவுகளுடன் சேர்த்து சந்தைப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றன. கடன்களும் வருமதிகளும் ஆரம்ப இணங்காணலுக்குப் பின்னர், விளைவு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி பெறுமதிக் குறைப்புச் செலவில் அளவிடப்படுகின்றன.

கடன்களும் வருமதிகளும் விலைகோரப்படாத படுகடன்கள், தவணை வைப்புகள், சொத்துகள் துணையளிக்கும் பிணையங்கள், அபிவிருத்தி முறிகள், வர்த்தகப் பத்திரங்கள், ஏனைய கடன்கள் மற்றும் வருமதிகள், காசும் காசுக்கு சமமானவையும் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

▣ மீள் காப்புறுதி வருமதிகள்

சாதாரண வியாபார நடவடிக்கைகளின்போது குழுவானது முறையான மீள்காப்புறுதி ஊடாக அங்கீகரிக்கப்பட்ட மீள் காப்புறுதி வழங்குநரகளுக்கு காப்புறுதி இடரினை ஒப்படைக்கின்றது.

மீள்காப்புறுதி சொத்துகளானவை கொடுப்பனவு செய்யப்பட்ட மற்றும் கொடுப்பனவு செய்யப்படாத இழப்புகளுக்கான மீள் காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்தான மீதி நிலுவைகள் மற்றும் இழப்பு சீராக்கல் செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. ளிடமிருந்து அறவிடப்படக்கூடிய தொகைகள், மீள் காப்புறுதி வழங்குநர்களின் கொள்ளைகளுடன் இணையப்பெற்ற நிலுவையாகவுள்ள ஏற்பாடு மற்றும் தீர்ப்பனவு செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் ஆகியவற்றுக்கு இசைவான விதத்தில் மதிப்பிடப்படுவதடன் தொடர்புடைய மீள் காப்புறுதி ஒப்பந்தத்திற்கு அமைவாக காணப்படுகின்றன.

மீள் காப்புறுதியானது ஈடுசெய்வதற்கான உரித்து இல்லாதவிடத்து நிதி நிலைமைக் கூற்றில் மொத்தமாக பதிவுசெய்யப்படுகின்றன.

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், அல்லது அறிக்கையிடுகின்ற ஆண்டின்போது பெறுமதிக் குறைத்தல் குறிகாட்டியொன்று எழுகின்ற போது, மீள் காப்புறுதி சொத்துகள் பெறுமதிக் குறைத்தலுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. ஒப்பந்த நியதிகளின் கீழ் நிலுவையாகவுள்ள அனைத்து தொகைகளையும் குழு பெற்றுக் கொள்ள இயலாமல் இருக்ககூடிய அத்துடன் மீள் காப்புறுதி வழங்குநரிடமிருந்து குழு பெற்றுக் கொள்ளும் தொகைகள் மீது நம்பத்தகுந்தவாறு அளவிடக்கூடிய தாக்கமொன்றினை நிகழ்வொன்று கொண்டுள்ள மீள் காப்புறுதி சொத்தின் ஆரம்ப இனங்காணலுக்குப் பின்னர் நிகழ்ந்த நிகழ்வொன்றின் விளைவாக பொருன்மையான சான்று காணப்படுகின்ற போது பெறுமதிக் குறைப்பு நிகழ்கின்றது. பெறுமதிக் குறைப்பு நட்டம், ஏதுமிருப்பின், இலாபத்தில் அல்லது நட்டத்தில் பதிவுசெய்யப்படுகின்றது.

ஒப்புவிக்கப்பட்ட மீள் காப்புறுதி ஒழுங்குகள் காப்புறுதி பெறுநர்களுக்கான அதன் கடப்பாடுகளில் இருந்து குழுவினை விடுவிப்பதில்லை.

ஒப்பந்த உரிமைகள் முடிவுறுத்தப்படுகின்ற போது அல்லது காலாவதியாகின்ற போது அல்லது வேறொரு திறத்தவருக்கு ஒப்பந்தம் மாற்றப்படுகின்ற போது மீள் காப்புறுதி சொத்துகள் அல்லது பொறுப்புகள் இனங்காணப்படுவதில்லை.

▣ கட்டுப்பண கிடைப்பனவு

காப்புறுதி கிடைப்பனவுகள் அவை நிலுவையாகவுள்ள போது இனங்காணப்படுவதுடன் சேவைக் கட்டண வருமதிகள், நியாயப் பெறுமதியில் ஆரம்ப அடையாளப்படுத்தலின் மீது அளவிடப்படுகின்றன. கட்டுப்பணங்களின் சேகரிப்புத் தன்னையானது முன்னெடுக்கப்படும் அடிப்படையொன்றில் மீளாய்வு செய்யப்படுகின்றது.

இலங்கை காப்புறுதிச் சபையினால் விநியோகிக்கப்பட்ட கட்டுப்பணக் கொடுப்பனவு உத்தரவாதத்திற்கு அமைவாக, வழங்கப்படும் ஆயுட் காப்புறுதியற்ற காப்புறுதி ஒப்பந்தங்கள், கட்டுப்பணக் கொடுப்பனவு உத்தரவாதத்திற்கு உட்படுவதுடன் தீர்ப்பனவு செய்யப்படவில்லையாயின் 90 நாட்கள் காலாவதியின் மீது இரத்துச் செய்யப்படுகின்றன.

ஆயுட் காப்புறுதி கட்டுப்பணங்களை கம்பனி ஆயள் கணிப்பீட்டு அடிப்படையில் கணக்கிடுகின்றது. அதற்கமைய, ஆயுட் காப்புறுதி கட்டுப்பண நிலுவைகள்(30 நாள் சலுகைக் காலத்தில் உள்ள கட்டுப்பண நிலுவை மாத்திரம்) ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் இனங்காணப்படுவதுடன் அதனைத் தொடர்ந்து வருகின்ற மாதத்தின் போது கட்டுப்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படாதிருப்பின் திரும்பல் செய்யப்படும்.

▣ தொடர்புடைய திறத்தவர்களிடமிருந்து ஏனைய வருமதிகளும் நிலுவைகளும்

தொடர்புடைய திறத்தவர்களிடமிருந்து ஏனைய வருமதிகளும் நிலுவைகளும், வரா மற்றும் ஐயமிக்க வருமதிகளுக்கான ஒதுக்கீடுகளை கழித்து செலவில் இனங்காணப்படுகின்றன.

▣ காசும் காசுக்கு சமமானவையும்

காசும் காசுக்கு சமமானவையும் திரும்பல் மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள், காசு மீதிகள் மற்றும் அவற்றின் நியாயப் பெறுமிதியில் உள்ள மாற்றங்களின் முக்கியமற்ற இடரொன்றுக்கு உட்பட்டுள்ள கையகப்படுத்தும் திகதியிலிருந்து மூன்றுமாத அல்லது குறைந்த முதிர்ச்சியுடன் கூடிய அத்துடன் அதன் குறுகிய கால கடமைப்பொறுப்பு முகாமைத்துவத்தில் குழுவினால் பயன் படுத்தப்படும் அழைப்பு வைப்புகள், ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

3.5.6.2 பெறுதியற்ற நிதியியல் பொறுப்புகள்

குழுவானது விநியோகிக்கப்பட்ட பிணையங்களையும் பின்நிகழ்வுப் பொறுப்புகளையும் அவை தோற்றுவிக்கப்பட்ட திகதியில் ஆரம்பத்தில் இனங்காணுகின்றது. அனைத்து ஏனைய நிதியியல் பொறுப்புகளும் சாதனத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான திறத்தவராக ஆகுகின்ற திகதியான வர்த்த திகதியில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

ஏனைய நிதியியல் பொறுப்புகள், நேரடியாக சாட்டத்தக்க கொடுக்கல் வாங்கல் செலவுகள் ஏதுமிருப்பின் கழித்த நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்படுகினறன. ஆரம்ப அளவீட்டினைத் தொடர்ந்து விளைவு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி பெறுமதி குறைக்கப்பட்ட செலவில் இப் பொறுப்புகள் அளவிடப்படுகின்றன.

குழுவின் ஒப்பந்தக் கடப்பாடுகள் நிறைவேற்றப்படுகின்ற போது, இரத்துச் செய்யப்படுகின்ற போது அல்லது காலாவதியாகும் போது நிதியியல் பொறுப்பொன்றினை குழு இணங்கானாது.

கடன்கள் மற்றும் கடனாக்கங்கள், வங்கி மேலதிக பற்றுகள், மற்றும் ஏனைய ஏனைய செலுத்தப் படப்பாலதானவை ஆகியவற்றை நிதியியல் பொறுப்புகள் உள்ளடக்குகின்றன.

3.5.7 நிதியியல் சொத்துகளின் பெறுமதிக் குறைத்தல் (பெறுதியற்றவை)

மதிப்புக் குறைத்தல் பொருன்மைச் சான்றொன்று உள்ளதா என்தனை தீர்மானிப்பதற்கு இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் உள்ளவாறு வகைப்படுத்தப்படாத நிதியியல் சொத்துகள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் கணிப்பிடப்படுகின்றன.

நிதியியல் சொத்துகள் மதிப்பிடப்படுகின்ற பொருன்மைச் சான்றிதழ் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- கடன்படுநரொருவர் தவணை தவறுதல் அல்லது ஒழுக்கத்தவறு
- கடன்படுநர் அல்லது வழங்குநர் வங்குரோத்து நிலைக்கு ஆளாகின்றார் என்ற குறிகாட்டிகள்
- கடன்பெறுபவர்களின் வழங்குநர்களின் கொடுப்பனவு அந்தஸ்த்தில் பாதகமான மாற்றங்கள்
- நிதியியல் கஸ்டங்களின் காரணமாக பிணையொன்றிற்கான செயற்பாடுமிக்க சந்தையொன்று மறைதல்
- நிதியியல் சொத்துகள் குழுவொன்றிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சல்களில் அளவிடத்தக்க வீழ்ச்சியொன்று காணப்படுகின்றது என்பதனை காண்பிக்கின்ற அவதானிக்கத்தக்க தரவுகள்

3.5.7.1 பெறுமதி குறைக்கப்பட்ட செலவில் நிதியியல் சொத்துகள்

இச் சொத்துகளுக்கான பெறுமதி குறைப்புச் சான்றினை குழுவானது தனிப்பட்ட சொத்தொன்று மற்றும் கூட்டான மட்டம் ஆகிய இரண்டிலும் கருத்திற் கொள்கின்றது. அனைத்து தனிப்பட்ட ரீதியான முக்கியத்தவமுடைய சொத்துகளும் பெறுமதி குறைத்தலுக்காக தனிப்பட்ட ரீதியாக கணிக்கப்படுகின்றன. மதிப்பு குறையாமலுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டவை பின்னர் இது வரை தனிப்பட்டரீதியாக இனங்காணப்படாத ஆனால் ஏதேனும் ஏற்பட்ட மதிப்புக் குறைப்பிற்காக கூட்டாக கணிப்பிடப்படுகின்றன. தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமற்ற சொத்துகள், மதிப்புக் குறைப்பிற்காக கூட்டாக கணிக்கப்படுகின்றன. கூட்டான கணிப்பீடானது ஒரேவிதமான இடர் பண்புகளுடன் கூடிய சொத்துகளை ஒன்றாக வகைப்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

சொத்து கொண்டு செலகின்ற தொகை மற்றும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாயச்சலின் தற்போதய பெறுமதி என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடாக கணிப்பிடப்பட்ட மதிப்புக் குறைத்தல் இழப்பு சொத்தின் மூல விளைவு வட்டி வீதத்தில் கழிவு செய்யப்படும். இழப்புகள், இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுவதுடன் ஒதுக்கீட்டு கணக்கொன்றில் பிரதிபலிக்கின்றது. மதிப்புக் குறைத்தல் இழப்பு தொகை அதனைத்தொடர்ந்து வீழ்ச்சியடையுமாயின் அத்துடன் மதிப்புக் குறைத்தல் இனங்காணப்பட்ட பின்னர் நிகழ்கின்ற நிகழ்வொன்றுக்கு வீழ்ச்சியானது பொருன்மையாக தொடர்புபடுத்தக் கூடியதாயின், முன்னர் இனங்காணப்பட்ட பெறுமதிக் குறைத்தல் இழப்பானது இலாபம் அல்லது நட்டம் ஊடாக திரும்பல் செய்யப்படுகின்றது.

3.5.7.2 விற்பனைக்கு கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துகள்

விற்பனைக்கு கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துகள் மீதான பெறுமதிக் குறைப்பு நட்டங்கள், விற்பனை ஒதுக்குகளுகளுக்காக கிடைக்கத்தக்கவற்றில் உள்ள ஒன்றுதிரண்ட நட்டங்களை மீள் வகைப்படத்துவதன் ஊடாக இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு இனங்காணப்படுகின்றன. மீள் வகைப்படுத்தப்பட்ட தொகையானது இலாபத்தில் அல்லது நட்டத்தில் முன்னர் இனங்காணப்பட்ட ஏதேனும் பெறுமதிக் குறைப்பு இழப்புகளை கழித்து கையகப்படுத்தல் செலவு (ஏதேனும் முதன்மை மீள் கொடுப்பனவு பெறுமதிக் குறைப்பு என்பவற்றைக் கழித்த) மற்றும் நடைமுறை நியாயப் பெறுமதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடாகும்.

பெறுமதி குறைக்கப்பட்ட விற்பனைக்கு கிடைக்கத்தக்க படுகடன் பிணையமொன்றின் நியாயப் பெறுமதி அதன் பின்னர் அதிகரிக்குமாயின் அத்துடன் பெறுமதி குறைத்தல் இனங்காணப்பட்ட பின்னர் நிகழ்கின்ற நிகழ்வொன்றுக்கு அதிகரிப்பானது பொருன்மையாக தொடர்புபடுதக் கூடியதாயின், முன்னர் இனங்காணப்பட்ட பெறுமதி குறைத்தல் இழப்பானது இலாபம் அல்லது நட்டம் ஊடாக திரும்பல் செய்யப்படுகின்றது. விற்பனைக்கு கிடைக்கத்தக்கவையாக வகைப்படுத்தப்பட்ட பங்குமூலதன சாதனமொன்றில் காணப்படுகின்ற முதலீடொன்றுக்காக இலாபதில் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்ட பெறுதிக் குறைப்பு இழப்பு, இலாபம் அல்லது நட்டம் ஊடாக திரும்பல் செய்யப்படாது.

3.5.8 ஒத்திவைக்கப்பட்ட செலவுகள்

ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் செலவுகள்

ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் செலவுகள் ஆயுட் காப்புறுதியற்ற ஒப்பந்தங்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும். ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் செலவுகள், உழைக்கப்பட்ட வருவாய்களுக்கமைவாக உறப்பட்ட கையகப்படுத்தல் செலவுகளாக ஆயுட் காப்புறுதி ஒப்பந்தங்களுக்காக கணிக்கப்படுகின்றது.

காப்புறுதி ஒப்பங்களை வழங்குவதிலிருந்து அல்லது மீளப்புதுப்பிப்பதிலிருந்து தோன்றுகின்ற நிதியியல் காலத்தின்போது உறப்பட்ட நேரடி மற்றும் நேரடியற்ற செலுவுகள், ஒத்திவைக்கப்பட்டு உழைக்கப்பட்ட வருவாய்களுடன் தொடர்புடைய காலத்தின் மீது பெறுமதிக்குறைப்புச் செய்யப்படுகின்றன.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

இலங்கை காப்புறுதிச் சபையின் கிடைக்கத்தக்க ஒழுங்குபடுத்தல் வழிகாட்டலுக்கமைவாக ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் செலவுகள், 365 அடிப்படையினை அடிப்படையாக கொண்டு கணிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் அல்லது பெறுமதிக் குறைப்பு குறிகாட்டிகள் எழுகின்ற போது மிக அடிக்கடி பெறுமதிக் குறைப்பு மீளாய்வு செயலாற்றப்படுகின்றது. அறவிடப்படக் கூடிய தொகை கொண்டு செல்லும் தொகையினை விட குறைவாகவிருக்கின்ற போது பெறுமதிக் குறைப்பு இழப்பானது இலாப நட்டக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

தொடர்புடைய ஒப்பந்தங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டோ அல்லது அகற்றப்பட்டோ இருக்கின்ற போது ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் செலவுகள் இனங்காணப்படுவதில்லை.

3.5.9 குறிக்கப்பட்ட மூலதம்

சாதாரண பங்குகள் பங்குமூலதனமாக வகைப்படுத்தப்படுகின்றன. சாதாரண பங்குகள் விநியோகத்திற்கு நேரடியாக சாட்டத்தக்க அதிகரிப்புச் செலவுகள், ஏதேனும் வரி விளைவுகளை கழித்து பங்கு மூலதனத்திலிருந்து கழிவொன்றாக இனங்காணப்படுகின்றன.

3.5.10 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

3.5.10.1காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகள்

காப்புறுதி ஏற்பாடு – ஆயுட் காப்புறுதி

ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு கட்டுப்பணங்கள் அறவிடப்படுகின்ற போது ஆயுட் காப்புறுதி பொறுப்புகள் இனங்காணப்படுகின்றன. சுயாதீன ஆயுட் கணிப்பீட்டு ஆலோகசரின் பரிந்துரையினை அடிப்படையாக கொண்டு 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலங்கை காப்புறுதிச் சபை சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறு தேறிய கட்டுப்பண முறையினைப் பயன்படுத்துவதன் மூலம் இப் பொறுப்புகள் அளவிடப்படுகின்றன. பயன்படுத்தப்படும் விலை மதிப்பு ஊகங்களை அடிப்படையாக கொண்டு எதிர்கால காசுப்பாய்ச்சல்களை நிறைவு செய்வதற்கு வேண்டப்படும் எதிர்பார்க்கப்பட்ட கட்டுப்பணங்களின் விலைக்கழிவுப் பெறுமதியினை கழித்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நலன்களின் விலைக்கழிவு செய்யப்பட்ட பெறுமதியின் மொத்தமாக பொறுப்பு நிர்ணயிக்கப்படுகின்றது. பாதகமான மாறுபாடுகளுக்கான அனுமதித்தலுக்கு விதந்துரைக்கப்பட்ட இடர் எல்லையொன்றுடன் கூடிய சிறந்த மதிப்பீட்டு அனுபவத்தினை அடிப்படையாக கொண்டு விலைமதிப்பீட்டு ஊகங்கள் பெறுவிக்கப்படுகின்றன. பங்குபற்றாத பொறுப்புககள், இடரற்ற வருமாய்களைப் பயன்படுத்தி விலைக்கழிவு செய்யப்படுகின்றன.

பங்குபற்றுதல் கொள்கை பொறுப்புகளின் பெறுமதியானது உத்தரவாதமளிக்கப்பட்ட நலப் பொறுப்புகளினதும் பங்களிக்கின்ற காப்புறுதி நிதிய மட்டத்தில் பெறுவிக்கப்படும் மொத்த நலப் பொறுப்புகளினதும் பெறுமதியின் உயர்வானதாகும். உத்தரவாதமளிக்கப்பட்ட நலப் பொறுப்பினை கணிப்பிடும் போது உத்தரவாதமளிக்கப்பட்ட நலன்கள் மாத்திரம் கருத்திற் கொள்ளப்படுவதுடன் இடரற்ற வட்டி விகித விளைச்சல் வளைவினைப் பயன்படுத்தி காசுப்பாய்ச்சல்கள் விலைக்கழிவு செய்யப்படுகின்றன. மொத்த நல பொறுப்பானது அனைத்து உத்தரவாதமளிக்கப்பட்ட மற்றும் உத்தரவாதமளிக்கப்படாத நலன்களையும் உள்ளடக்குவதுடன் பங்களிப்பு காப்புறுதி நிதியத்தின் விளைச்சலின் அடிப்படையில் நிதியத்தினை பயன்படுத்தி காசுப்பாயச்சல்களை கழிவு செய்கின்றது.

மேலும், நடைமுறையில் விடுபட்ட ஒப்பந்தங்களை எதிர்காலத்தில் மீட்பதற்கான காரணத்தினால் தோன்றுகின்ற நேரிடக் கூடிய பொறுப்புகளை கைப்பற்றுவதற்கு சீராக்கலகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 4 'காப்புறுதி ஒப்பந்தங்கள்' இனால் தேவைப் படுத்தப்பட்டவாறு, புற கணிப்பீட்டளாரொருவரின் உதவியுடன் ஆயுட் காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகள் தொடர்பில் கம்பனியானது பொறுப்பு போதுமை பரிசோதனையொன்றினை செயலாற்றியது. பொறுப்பு போதுமை பரிசோதனையொன்றினை செயலாற்றுகின்ற போது, உரிமைக் கோரிக்கைகள் கையாளுதல், காப்புறுதி ஒப்பந்த நிருவாகச் செலவுகள், அத்தடன் அத்தகைய பொறுப்புகளுக்கு ஆதரவளிக்கின்ற சொத்துகளிலிருந்தான முதலீட்டு வருமானம் போன்ற தொடர்புபட்ட காசுப் பாய்ச்சல்கள் உள்ளடங்கலாக எதிர்கால ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களின் நடைமுறை சிறந்த மதிப்பீடுகள் பயன்படத்தப்படுகின்றன.

காப்புறுதி ஏற்பாடு - ஆயுட் காப்புறுதியற்றவை

ஆயுட் காப்புறுதியற்ற ஒப்பந்த பொறுப்புகளானவை உறப்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாதவை மற்றும் உறப்பட்ட ஆனால் போதியளவு அறிக்கையிடப்படாதவை, உழைக்காத கட்டுப்பணத்திற்கான ஏற்பாடு மற்றும் கட்டுப்பண பற்றாக்குறைக்கான ஏற்பாடு உள்ளடங்கலாக நிலுவையாகவுள்ள உரிமைக்கோரிக்கை ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றன.

உழைக்காத கட்டுப்பண ஒதுக்கின் பெறுமதியானது 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க இலங்கை காப்புறுதிச் தொழிற்துறை ஒழுங்குவிதிகளின் வழிகாட்டலுக்கமைவாக (அதாவது 365 அடிப்படையினை அடிப்படையாக கொண்டு) அளவிடப்படகின்றது. எனினும், இடர் காலம் ஒப்பந்த காலத்தில் இருந்து கணிசமான அளவு வேறுபடுகின்ற ஒப்பந்தக்குளுக்காக கட்டுப்பணங்கள் வழங்கப்படும் காப்புறுதி பாதுகாப்பின் தொகைக்கான விகிதாசாரத்தில் உள்ள இடர்காலத்தின் மீது உழைக்கப்படுகின்றது.

உறப்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத மற்றும் உறப்பட்ட ஆனால் போதியளவு அறிக்கையிடப்படாத உரிமைக் கோரிக்கை ஒதுக்குகள் கணிப்பீட்டாளரினால் கணிக்கப்படுகின்றது.

சமநிலைப் படுத்தலுக்கான அல்லது பேரழிவு ஒதுக்கிற்கான ஏற்பாடு இனங்காணப்படுவதில்லை. உரிமைக் கோரிக்கையொன்றை கொடுப்பனவு செய்வதற்கான கடப்பாடு காலாவதியாகின்ற போது, நிராகிக்கப்படுகின்றபோது அல்லது இரத்துச் செய்யப்படுகின்ற போது பொறுப்புகள் இனங்காணப்படுவதில்லை.

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 4 'காப்புறுதி ஒப்பந்தங்கள்' மூலம் தேவைப் படுத்தப்பட்டவாறு, புற கணிப்பீட்டளாரொருவரின் உதவியுடன் ஆயுட் காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகள் தொடர்பில் கம்பனியானது பொறுப்பு போதுமை பரிசோதனையொன்றினை செயலாற்றியது.

3.5.10.2உரித்துறுதி காப்புறுதி ஒதுக்கு

உரித்துறுதி காப்புறுதி ஒபப்ந்தங்களில் இருந்து தோன்றுகின்ற சாத்தியமான உரிமைக் கோரிக்கைகளை கொடுப்பனவு செய்வதற்காக கம்பனியினால் உரித்துறுதி காப்புறுதி ஒதுக்கு பேணப்படுகின்றது. உரித்துறுதி ஒப்பந்தங்கள் பொதுவாக 5 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்காக வழங்கப்படுகின்றன. இதனால், முதலாம் ஆண்டில் உரிமைக் கோரிக்கை உயர்வாக நிகழ்கின்ற சாத்தியமிருப்பதால் அவ்வாண்டில் இலாபமெதுவும் இனங்காணப்படுவதில்லை. 2 ஆம் ஆண்டிலிருந்து கிடைக்கப்பெற்ற கட்டுப்பணத்தினை பெறுமதி குறைப்பதன் மூலம் இலாபம் இனங்காணப்படுவதுடன் நேர் நிரை முறையினைப் பயன்படுத்தி ஒப்பந்தத்தின் எஞ்சியிருக்கும் காலப்பகுதி முழுவதும் பகிரப்படும். முதலாம் ஆண்டுக்கான இலாபமானது, 2 ஆம் ஆண்டில் மாத்திரம் இனங்காணப்படுவதுடன் அதன் பின்னர் இது காலமுறையாக இனங்காணப்படுகின்றது.

விநியோகிக்கப்பட்ட உரித்துறுதி காப்புறுதி ஒதுக்கு நேரொத்த கடன்கள் முதிர்வுக்கு முன்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருப்பின், அத்தகைய கடன் தீர்ப்பனவின் திகதியன்று உள்ளவாறான எஞ்சியிருக்கின்ற அத்தகைய ஒப்பந்ங்களின் முழுமையான கட்டுப்பணமும் தொடர்புடைய வங்கியினால் அதற்கான உறுதிப்படுத்தலின் மீது இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

3.5.10.3ஏற்பாடுகள் (காப்புறுதி ஒப்பந்தங்கள் மீதானவை தவிர)

ஏற்பாடனது கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக சட்டரீயான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடொன்றினை குழு கொண்டுள்ள போது அத்துடன் கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார வெளிப்பாய்ச்சல் தேவைப்படும் என்ற மற்றும் நம்பத்தகுந்தவாறு அளவிடப்படக்கூடியது என்ற நிகழ்வொன்று காணப்படுகின்ற போது நிதி நிலைமைக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. காப்புறுதி ஒப்பந்தங்கள் மீதானவை தவிர்ந்த ஏற்பாடுகள், பணத்தின் காலப்பெறுமதியின் நடைமுறை சந்தை கணிப்பீட்டினையும் பொறுப்பிற்கான குறித்த இடர்களையும் பிரதிபலிக்கின்ற வரிக்கு முந்திய வகிதமொன்றில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களை கழிவு செய்வதன் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன

3.5.11 குத்தகைச் சொத்துகள் - குத்தகை பெறுனர்

ஏற்பாடொன்று குத்தகையா அல்லது குத்தகையொன்றினை உள்ளடக்குகின்றதா என்பது பற்றிய நிர்ணயம் தோற்றுவிக்கப்படும் திகதியில் ஒழுங்கின் பொருளினை அடிப்படையாக கொண்டதாகும்.

உரிமைத்துவத்தின் இடர்கள் மற்றும் கைமாறுகள் அனைத்தையும் கணிசமாக குழுவுக்கு மாற்றுகின்ற குத்தகைகளின் கீழ் குழுவினால் வைக்கப்படடுள்ள சொத்துகள் நிதிக் குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. குத்தகைச் சொத்துகள், ஆரம்பத்தில் அவற்றின் நியாயப் பெறுமதியின் குறைவிற்கு சமமான தொகையொன்றிலும் ஆகக் குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதய பெறுமதியிலும் ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலுக்குப் பின்னர் அச் சொத்துக்கு ஏற்புடைய கணக்கீட்டு கொள்கைக்கு அமைவாக சொத்துகள் கணிக்கப்படுகின்றன.

நிதிக் குத்தகைகளின் கீழ் ஆக்கப்பட்ட ஆகக்குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகள், நிதிச் செலவுகளுக்கும் நிலுவைப் பொறுப்புகளின் குறைப்பிற்கும் இடையில் பங்கீடு செய்யப்படுகின்றன. நிதிச் செலவானது குத்தகைக் காலத்தின் போதான ஒவ்வொரு காலப்பகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இதனால், பொறுப்பின் எஞ்சிய மீதி மீதான வட்டியின் ஒத்திசைவான காலமுறை விகிதமொன்றினை உருவாக்குகன்றது.

தொழிற்படுகின்ற குத்தகைகள்

குத்தகை செய்யப்பட்ட பொருட்களின் உரிமைத்துவத்திற்கு இடைநேர்விளைவான இடர்கள் மற்றும் நலன்கள் அனைத்தையும் கணிசமாக குழுவுக்கு இடமாற்றாத குத்தகைகள், தொழிற்படுகின்ற குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. தொழிற்படுகின்ற குத்தகை கொடுப்பனவுகள், குத்தகைக்காலத்தின் மீது நேர் நிரை அடிப்படையொன்றில் இலாபத்திலும் நட்டத்திலும் செலவொன்றாக இனங்காணப்படுகின்றன. கிடைக்கப்பெற்ற குத்தகை காசுப் பாய்ச்சல் ஊக்குவிப்புகள், குத்தகை காலத்தின் மீது மொத்த குத்தகை செலவின் முக்கிய பாகமொன்றாக இனங்காணப்படுகின்றன.

3.6 கடமைப் பொறுப்புகளும் அவசர நிலைப் பொறுப்புகளும்

அவசர நிலைப் பொறுப்புகள் என்பது குழுவின் கட்டுப்பாடினுள் முழுமையாக அல்லாத நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளின் இடம்பெறுகை அல்லது இடம்பெறாமை மூலம் மாத்திரம் அவை உள்ள தன்மை உறுதிப்படுத்தப்படுகின்ற அல்லது பொருளாதார நலன்கள் இடமாற்றம் சாத்தியமல்லாத அல்லது நம்பத்தகுந்தவாறு அளவிடப்பட முடியாத சாத்தியமான கடப்பாடுகளாகும்.

குழுவின் மூலதன கடமைப் பொறுப்புகளும் அவசர நிலைப் பொறுப்புகளும் நிதிக்கூற்றுகளுக்கான தொடர்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

3.7 துறைவாரியான அறிக்கையிடல்

தொழிற்படுகின்ற துறையொன்று என்பது குழுவின் ஏனைய எவையேனும் கூறுகளுடன் கொடுக்கல் வாங்கலை தொடர்புபடுத்துகின்ற வருவாய்கள் மற்றும் செலவுகள் உள்ளடங்கலாக அது வருமானத்தினை ஈட்டக் கூடிய அல்லது செலவுகளை ஏற்படுத்துதக் கூடியதிலிருந்தான வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபடகின்ற குழுவின் கூறொன்றாகும். துறைகளுக்கு மூலவளங்களை ஒதுக்கீடு செய்தல் மற்றும் அதன் செயலாற்றுகையினை கணிப்பிடுதல் தொடர்பில் தீர்மானங்களை

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

மேற்கொள்வதற்காக தொழிற்படுகின்ற அனைத்து பெறுபேறுகளும் கிரமமாக பிரதம நிறைவேற்று அதிகாரியினால் மீளாய்வு செய்யப்படுகின்றன. இதற்காக வேறான நிதித் தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன.

பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு அறிக்கையிடப்படுகின்ற துறைரீதியான பெறுபேறுகள், துறைக்கு நேரடியாக சாட்டத்தக்க விடயங்கள் அத்துடன் நியாயமான அடிப்படையொன்றில் ஒதுக்கீடு செயய்ப்படக்கூடியவை ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. அதற்கமைய, குழுவின் துறைரீதியான தகவல்கள் ஆயுட் காப்புறுதி அல்லாதவை, ஆயுட் காப்புறுதி, சுகாதார கவனிப்பு, சக்தி மற்றும் ஏனைய துறைகளை பிரதிபலிக்கின்றன. துறைகளுக்க இடையிலான மாற்றுதல்கள், நியாயமான சந்தை விலைகளை அடிப்படையாக கொண்டவையாகும்.

3.8 பங்கொன்றிற்கான உழைப்பு

குழு, அதன் சாதரண பங்குதாரர்களுக்கு பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்புகளை வழங்குகின்றது. இ க நி 33 இற்கமைவாக நிர்ணயிக்கப்படும் சாதாரண பங்குகளின் நிறையேற்றப்பட்ட சராசரி எண்ணிக்கையினால் குழுவின் சாதாரண பங்குதாரர்களுக்கு சாட்டத்தக்க இலாபத்தினை அல்லது நட்டத்தினை பிரிப்பதன் மூலம் பங்கொன்றிற்கான உழைப்பு கணிப்பிடப்படுகின்றது.

3.9 முன்மொழியப்பட்ட பங்கிலாபங்கள்

அறிக்கையிடும் திகதிக்கு பின்னர் பணிப்பாளர் சபையினால் முன்மொழியப்பட்ட பங்கிலாபம், பொறுப்பொன்றாக இனங்காணப்படுவதில்லை அத்துடன் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பொன்றாக மாத்திரம் வெளிப்படுத்தப்படுகின்றன. பங்கிலாபத்திற்கான ஏற்பாடானது பணிப்பாளர் சபையினால் முன் மொழியப்படுகின்ற பங்கிலாபம் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் அனுமதிக்கப்படுகின்ற நேரத்தில் மாத்திரம் இனங்காணப்படுகின்றது.

3.10 அறிக்கையிடும் திகதிக்கு பின்னர் நிகழ்கின்ற நிகழ்வுகள்

அறிக்கையிடும் காலத்திற்கு பிந்திய நிகழ்வுகள் என்பது அறிக்கையிடும் திகதிக்கும் விநியாகிப்பதற்காக நிதியில் கூற்றுகள் அனுமதிக்கப்படுகின்ற திகதிக்குமிடையில் நிகழ்கின்ற சாதகமான மற்றும் பாதகமான நிகழ்வுகளாகும். அறிக்கையிடும் திகதிக்கு பிந்திய அனைத்து முக்கிய நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்பட்டு ஏற்புடையதாயின் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் நிதியியல் கூற்றுகளுக்கான தொடர்புடைய குறிப்புகிளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.11 காசுப் பாய்ச்சல் கூற்று

இலங்கை கணக்கீட்டு நியமம் 7 'காசுப் பாய்ச்சல் கூற்று' இற்கமைவாக காசுப் பாய்ச்சல் தயாரிக்கின்ற நேரடியற்ற முறையினைப் பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

காசுப் பாய்ச்சல் நேதாக்கத்திற்காக காசு மற்றும் காசுக்கு சமமானவை, வங்கி மேலதிக பற்றுகளை கழித்து எடுத்தரைக்கப்படுகின்றன.

4. விநியோகிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் ஆனால் அறிக்கையிடும் திகதியன்று உள்ளவாறு செயற்பாடற்றவை.

2017 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் அல்லது பிந்திய திகதியொன்றில் ஆரம்பிக்கின்ற நிதியியல் காலங்களுக்கு ஏற்புடையதான பின்வரும் புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதற்கமைய, நிதிக் கூற்றுகள் தயாரிக்கையில் இந் நியமங்கள் பிரயோகிக்கப்படவில்லை.

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் தரநியமங்கள் (ளுடுகுசுளு) (இநிஅதநி) 9 – 'நிதியியல் சாதனங்கள்'

இந்த நியமமானது இலங்கை கணக்கீட்டு தரநியமம் 39- " நிதியியல் சாதனங்கள்: இனங்காணுதலும் அளவீடும்' இல் தற்போதுள்ள வழிகாட்டலினை மாற்றீடு செய்கின்றது. இநிஅதநி 9, நிதியியல் சொத்துகள் மீதான பெறுமதிக் குறைத்தல் கணிப்பீட்டுக்கான புதிய எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு மாதிரியொன்றான அத்துடன் புதிய பொது காப்பு கணக்கீட்டு தேவைப்படுத்தல்களான நிதியியல் சாதனங்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீடு பற்றிய திருத்தப்பட்ட வழிகாட்டலை உள்ளடக்குகின்றது. 2018 ஜனவரி 1 அன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கின்ற வருடாந்த அறிக்கையிடும் காலங்களுக்காக முன்கூட்டிய பின்பற்றுதல் அனுமதியுடன் இநிஅதநி 9 செயலுக்கு வருகின்றது.

இநிஅதநி 9 இன் பிரயோகத்திலிருந்து தோன்றுகின்ற அதன் நிதிக் கூற்றுகள் மீதான வாய்ப்பான தாக்கங்களை குழுவின் துணைக்கம்பனிகள் கணிப்பிடுகின்றன.

கம்பனியானது (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தானம்) இநிஅதநி 4 'காப்புறுதி ஒப்பந்தங்கள்', பெரும்பான்மையான செயற்பாடு காப்புறுதி ஒப்பந்தங்கள் வழங்குவதாகவிருக்கின்ற நிறுவனங்கள் 2021 இன் ஆரம்பம் வரை அல்லது 2020 இல் ஆரம்பிப்பதற்கு தற்போது எதிர்பார்க்கப்படுகின்ற திருத்தப்பட்ட இநிஅதநி 4 இனை பின்பற்றும் வரை இநிஅதநி 9 இன் முழுமையான பிரயோகத்தினை ஒத்திப்போடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

பின்வரும் சந்தர்ப்பங்கள் இருந்தால் மாத்திரம் காப்புறுதி வழங்குநர் ஒருவர் இநிஅதநி 9 இல் இருந்து தற்காலிக விலக்களித்தலுக்கு விண்ணப்பிக்கலாம்.

அ. இலாபம் அல்லது நட்ட கணக்கீட்டு நியமங்கள் ஊடாக நியாயப் பெறுமதியாக நியமிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் மீதான இலாபங்களினதும் நட்டங்களினதும் எடுத்துரைத்தலுக்கான தேவைப்பாடுகள் மாத்திரம் தவிர இநிஅதநி 9 இன் ஏதேனும் பதிப்பினை முன்னர் பிரயோகிக்காதிருந்தால்,

வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி 4-13
செயலாற்றுகை மீளாய்வுகள் 2016 16-53
ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் 56-82
நிதிக் கூற்றுக்கள் 85-217
மேலதிகத் தகவல் 220-248

ஆ 2016 ஏப்ரல் 1 ஆம் திகதிக்கு உடனடியாக முன்நிகழ்கின்ற அதன் வருடாந்த அறிக்கையிடும் திகதியில் அதன் செயற்பாடுகள் பெரும்பான்மையான காப்புறுதியுடன் இணையப்பெற்றிருந்தால்,

திருத்தப்பட்ட இநிஅதநி 4 இனை பின்பற்றும் காலத்திற்கு நெருக்கமாக இநிஅதநி 9 இன் கீழ் அதன் முதலீடுகளின் பொருத்தமான வகைப்படுதடுதல் பற்றி கம்பனி தீர்மானிக்கும் இதனால் அறிக்கையிடும் திகதியன்று உள்ளவாறு இநிஅதநி 9 இன் பின்பற்றுகையின் தாக்கத்தினை முழுமையாக அளவிட முடியாது. எனினும், கம்பனியின் மொத்த பங்கு மூலதனத்தினை இது கணிசமாக மாற்றும் என எதிர்பார்க்கப்படவில்லை.

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் தரநியமங்கள் 15- "வாடிக்கையாளர்களுடான ஒப்பந்தங்களில் இருந்து வருவாய்"

இலங்கை கணக்கீட்டு தரநியமம் (இகதநி) 18- 'வருவாய்', இந் நியமமானது எவ்வளவு வருவாய் எப்போது இனங்காணப்படகின்றது, என்பதனை நிர்ணயிப்பதற்கான அனைத்தையும் உள்ளடக்கிய சட்டகமொன்றினை தாபிக்கின்றது. இது, தற்போது காணப்படுகின்ற இலங்கை கணக்கீட்டு தரநியமம் 18- 'வருவாய்', இந்த இகதநி 11 'நிர்மாண ஒப்பந்தங்கள்', மற்றும் சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் பொருள்கோடல் குழு (IFRIC) 13 - 'வாடிக்கையாளர் விசுவாச நிகழ்ச்சித்திட்டங்கள்' ஆகியவற்றை மாற்றீடு செய்கின்றது. 2018 சனவரி 1 இல் அல்லது அதன் பின்னர் ஆரமபிக்கின்ற வருடாந்த அறிக்கையிடும் காலங்களுக்காக முன்கூட்டிய பின்பற்றுதல் அனுமதியுடன் இநிஅதநி 15 அமுலுக்கு வருகின்றது.

இநிஅதநி 15 இன் பிரயோகத்திலிருந்து விளைகின்ற அதன் நிதிக் கூற்றுகள் மீதான வாய்ப்பான தாக்கங்களை குழு மதிப்பிடுகின்றது. காப்புறுதி ஒப்பந்தத்திலிருந்து தோன்றுகின்ற வருமாத்தினைக் கணக்கிடுவதற்கு இந் நியமம் ஏற்புடையதாகாது

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் தரநியமங்கள் (இநிஅதநி) 16- "குத்தகை"

இநிஅதநி 16, தற்போது காணப்படுகின்ற இகநி 17 குத்தகைகள், சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் பொருள்கோடல் குழு 4 ஒழுங்கொன்று குத்தகையொன்றினை உள்ளடக்குகின்றதா என்பதனை நிர்ணயித்தல், எஸ்ஐசீ- 15 தொழிற்படுகின்ற குத்தகைகள்- ஊக்குவிப்புகள் மற்றும் எஸ்ஐசீ- 27 குத்தகையொன்றின் சட்ட வடிவத்தினை ஈடுபடுத்துகின்ற கொடுக்கல் வாங்கல் பொருளினை மதிப்பிடுதல் ஆகியவற்றை மாற்றீடு செய்கின்றது. 2019 ஜனவரி 01 அன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கின்ற வருடாந்த காலங்களுக்கு இந் நியமம் செயலாக்கமுடையதாகும்.

இநிஅதநி 16 இன் ஆரம்ப பிரயோக திகியன்று அல்லது அதற்கு முன்னர் இநிஅதநி 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருவாய் இனை பிரயோகிக்கின்ற நிறுவனங்களுக்கு முன்கூட்டிய பின்பற்றுதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இநிஅதநி 16 இன் பிரயோகத்திலிருந்து விளைகின்ற அதன் நிதிக் கூற்றுகள் மீதான வாய்ப்பான தாக்கங்களை குழு மதிப்பிடவில்லை.

பின்வரும் புதிய அல்லது திருத்தப்பட்ட நியமங்கள் குழுவின் திரட்டிய நிதிக் கூற்றுகள் மீது கணிசமான தாக்கத்தினைக் கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை.

2016 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து செயற்படுபவை

- இநிஅதநி 14-"ஒழுங்குபடுத்தல் ஒத்திவைப்புக் கணக்குகள்"
- பெறுமானத் தேய்வினதும் பெறுமதிக் குறைப்பினதும் ஏற்றுக்கொள்ளத்தக்க முறைகளின் வகைப்படுத்தல் (இகநி 16 மற்றும் இகநி 38 என்பவற்றுக்கான திருத்தங்கள்).
- முதலீட்டாளர் மற்றும் அதன் இணைப்பு அல்லது கூட்டு முயற்சிக்கு இடையிலான சொத்து விற்பனை அல்லது பங்களிப்பு (இகநி 10 மற்றும் இகநி 28 என்பவற்றுக்கான திருத்தங்கள்).
- வேறான நிதியியல் கூற்றுகளில் உள்ள பங்கு மூலதன முறை (இகநி 27 இற்கான திருத்தங்கள்).
- வெளிப்படுத்தல் நடவடிக்கை (இகநி 1 இற்கான திருத்தங்கள்).

2017 சனவரி 1 ஆம் திகதியிலிருந்து செயற்படுபவை

